KANDIAH LAW
PROFESSIONAL CORPORATION
T 416-333-1001 www.KandiahLaw.com F 416-335-1002
வீட்டு மோட்கேஜ் பிரச்சினையா? சட்ட ஆலோசனை தேவையா?
அழையுங்கள் தயா PK கந்தையா BAS, LLB (Hons)(வழக்கறிஞர்)

வீடு வாங்க விற்க நட்பான சேவைக்கு
PRASATH SATHIYANATHAN
Sales Representative
647.296.7932
HomeLife Future Realty Inc. Brokerage
*Independently owned and operated
Prasath Estate
HOMEWORTH
See what your home worth!
www.freehomevalueplus.com

NISHANTHAN LAW OFFICE
Umananthini Nishanthan (LL.B)
Barrister & Solicitor and Notary Public
Cell: 647-535-6365
Tel: 416-289-9229
Fax 1-800-878-1348
39 Devonshire Avenue
Markham Ontario L3S3P2
office@nishanthanlaw.onmicrosoft.com
www.nishanthanlaw.com

Cash Point
PAWN BROKERS
3852 Finch Ave. E. Unit G03, Scarborough, ON. M1T 3T9
$1000 $20/month
Tel : 416-284-7000

GET THE RIGHT INSURANE COVERAGE
AUTO, HOME, BUSINESS
JEYA SHANTHY
SIVASOTHY
647.268.2710
AAXEL

GT Brokers
Protect You & Your Family
Critical Illness | No medical Life
Disability Income | Mortgage Life
Travel & Visitor | Life Insurances.
RRSP | RESP
Best Insurance for the Lowest Rate !!!
Guna Thuraisingham
Independent Insurance Advisor
Dir: 416 528 1407
www.gtbrokers.ca
Super Visa Insurance 100% Refund

OVER 10 YEARS EXPERIENCE
RAVI VEERASINGAM B.A
Sales Representative
416-356-8958
BUY - SELL - LEASE - INVEST
ARVIN-KING
RABINTHIRARAJ
Broker
416-200-7001
TALENT - PATIENCE
HomeLife/Future Realty Inc., Brokerage

மலர்:- 33, 06 February 2026 இதழ்:- 05

# ஈழநாடு

பிரதம ஆசிரியர்: T.K.பரமேஸ்வரன் 416 841 9600

## 15வது ஆண்டில் வாசகர்களின் ஆதரவோடு ஈழநாட்டின் அறப்பணிக்கு உறவுகளே! பெப்ரவரி மாதம் உணவளிக்க முன் வாருங்கள்!

என் இனிய உறவுகளே! அன்பு இல்லம், பாரதி இல்லம், செஞ்சோலை இல்லம் ஆகிய மூன்று இல்லங்களில் வாழும் குழந்தைகளுக்காக வருடத்தில் ஒரு நாள் உங்கள் பிறந்த நன்நாள், திருமண நன்நாள், குழந்தைகளின் பிறந்தநாள், உங்கள் அன்புக்குரியவர்களின் பிரிவு நாள் என மலரும் உங்கள் நினைவுகளில் இவர்களையும் நினைத்து ஒரு நாள் உணவளிக்க முன் வாருங்கள்! தர்மம் தலை காக்கும்" "கோடி புண்ணியம் தேடி வரும். ஆயிரம் கோவில்களுக்குச் சென்று வழிபடுவதிலும் அன்னதானம் வழங்குவதிலும் விட உங்கள் பெயரால் பசியாறும் அந்தக் குழந்தைகளின் வாழ்த்து உங்களை ஆசீர்வதிக்கும். 15வது வருடத்தில் தொடரும் சேவை. ஈழநாடு பத்திரிகையின் அறப்பணியில் நீங்களும் பங்கு கொள்ளுங்கள். விபரங்களை 10ம் 11ம் பக்கங்களில் காணலாம். தொடர்புகளுக்கு:- ஈழநாடு பரமேஸ் 416 841 9600

# அநுரவின் ஆட்சியிலும் மனித உரிமைகள் சார் கடப்பாடுகளை நிறைவேற்றுவதில் முன்னேற்றம் இல்லை- கண்காணிப்பகம் விசனம்

பொருளாதார ஸ்திரத்தன்மையை உறுதிப்படுத்துவதற்கும் பொதுச் சேவைகளைப் பெற்றுக் கொள்வதில் நிலவும் சமத்துவமின்மைக்குத் தீர்வு காண்பதற்கும் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க தலைமையிலான அரசாங்க த்தினால் குறிப்பிடத்தக்க சில முயற்சிகள் மேற் கொள்ளப்பட்ட போதிலும், மனித உரிமைகள் சார் கடப்பாடுகளை நடைமுறைப்படுத்துவதில் மட்டுப் படுத்தப்பட்ட அளவிலான முன்னேற்றமே எட்டப்பட்டுள்ளது என மனித உரிமைகள் கண்காணிப்பகம் சுட்டிக் காட்டியுள்ளது. 2025ஆம் ஆண்டு உலகளாவிய ரீதி யில் ஒவ்வொரு நாடுகளினதும் மனித உரிமைகள் நிலைவரம் தொடர்பில் மனித உரிமைகள் கண்காணிப்பகத்தினால் வெளியிடப் பட்டுள்ள விரிவான அறிக்கையில் இலங்கை தொடர்பில் மேலும் (24ம் பக்கம் பார்க்க)

# யார் முருகன்? யார் சூரன்?





தமிழ் ரப் பாடகர் வாகீசனைத் தூக்கியது அவருடைய முருகன் பாடல். அப்பாடலில் முருகன் ஒரு கடவுளாக மட்டும் சித்தரிக்கப்படவில்லை. அவர் தமிழ் மக்களைக் காக்கும் ஒரு தலைவராகவும் வர்ணிக்கப்படுகிறார். அதாவது விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தலைவரை மறைமுகமாக அது சுட்டுகிறது என்று பொதுவான விளங்கிக் கொள்ளப்படுகிறது.

இவ்வாறு தனது முருகன் பாடலுக்குள் உட்பொதிந்துள்ள அரசியலுக்கு ஊடாகவும் கொண்டாடப்படுகின்ற ஒரு ரப் பாடகரைக் கொண்ட அதே சமூகத்தில் தான், அண்மையில் தேசிய மக்கள் சக்தியின் யாழ் மாவட்ட உறுப்பினர் ஒருவர் அனுரவை முருகனோடு ஒப்பிட்டு முகநூலில் எழுதியிருந்தார். (15ம் பக்கம் பார்க்க)

# விடுதலைப்புலிகள் மீதான தடை நீக்கம் தொடர்பான வழக்கை ஒத்தி வைத்த சென்னை நீதிமன்றம்!

இந்தியாவில் தமிழீழ விடுதலைப் புலிகள் மீதான தடையை நீக்கக் கோரி நீண்ட காலமாக தொடரப்பட்ட மனு மீதான விசாரணையை சென்னை மேல் நீதிமன்றம் ஒத்தி வைத்துள்ளது.

நீதியரசர்கள் குழாம் முன்னிலையிலான விசாரணையின் போது மத்திய அரசின் சட்டத்தரணி மேலதிக அவகாசம் கோரியதை அடுத்து, 2026 வழக்கு பெப்ரவரி 16 வரை ஒத்தி வைக்கப்பட்டது. மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுச் செயலாளர் வைகோ இந்த மனுவினை தாக்கல் செய்துள்ளார். மத்திய அரசு 1991 ஆம் ஆண்டு விடுதலைப் புலிகள் அமைப்பைத் தடை செய்தது. (8ம் பக்கம் பார்க்க)



# அரசியலமைப்பு மறுசீரமைப்பு செயன்முறையில் தமிழர் அரசியல் தீர்வு உள்வாங்கப்படுவது அவசியம் - குருபரன்



தற்போது பேசப்படும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு செயன்முறையில் தமிழர் இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு நிச்சயமாக உள்வாங்கப்பட வேண்டும். அன்றேல் அந்த அரசியலமைப்பிலிருந்து ஒரு சமூகம் வெளித்தள்ளப்பட்டு விடும் என கலாநிதி குமாரவடிவேல் குருபரன் சுட்டிக்காட்டியுள்ளார்.

தற்போது புதிய அரசியலமைப்பு உருவாக்கம் முக்கிய பேசுபொருளாக மாறியிருக்கும் நிலையில், அப்புதிய அரசியலமைப்புக்கான ஒரு மாதிரி வரைவை உருவாக்குவதற்காக தேசிய ரீதியில் நம்பகத்தன்மை வாய்ந்ததும், தொழில்நுட்ப ரீதியாக உறுதியானதும், உண்மையிலேயே சகலரையும் உள்ளடக்கியதுமான ஓர் அணுகுமுறையை நிறுவும் நோக்கில் 'வன் டெக்ஸ்ட் இனிஸியேட்டிவ்' எனும் அமைப்பினால் கடந்த 02 பெப் 2026 செவ்வாய்க்கிழமை (3) கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் அரசியலமைப்பு மறுசீரமைப்பு கலந்துரையாடல் செயன்முறையொன்று ஆரம்பித்து வைக்கப்பட்டது. அது மாத்திரமன்றி இதுபற்றிய தகவல்களைப் பகிர்வதுடன், கருத்தாடல்களைக் கட்டியெழுப்பும் நோக்கில் இணையத்தளமும் அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் அரசியலமைப்பு மறுசீரமைப்பு செயன்முறை குறித்து ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கலந்துரையாடலில் பங்கேற்று கருத்துரைக்கையிலேயே குருபரன் மேற்கண்டவாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் கூறியதாவது:

அரசியலமைப்பு மறுசீரமைப்பு தொடர்பான கலந்துரையாடல்கள் 2022ஆம் ஆண்டு உருவான 'அரகலய' மக்கள் எழுச்சிப்போராட்டத்தின் பின்னரேயே தீவிரமடைந்திருக்கின்றன. இருப்பினும் அதன் பின்னரான தேர்தல்களில் வாக்களித்த தமிழ் மக்கள், தமக்கான அரசியல் தீர்வுக்கு முன்னுரிமையளித்து, அதனைப் பிரதிபலிக்கும் வகையிலேயே வாக்களித்திருக்கிறார்கள்.

அந்தவகையில் தற்போது பேசப்படும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு செயன்முறையில் தமிழர் இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு நிச்சயமாக உள்வாங்கப்பட வேண்டும். அன்றேல் அந்த அரசியலமைப்பிலிருந்து ஒரு சமூகம் வெளித்தள்ளப்பட்டுவிடும்.

அதேபோன்று இலங்கை ஒரு பல்லின அரசு என்பதை நாமனைவரும் ஏற்றுக்கொண்டிருக்கிறோமா என்ற கேள்விக்கான பதிலைக் கண்டறிய வேண்டும். அதனூடாக மாத்திரமே சகலரையும் உள்ளடக்கிய அர்த்தமுள்ள அரசியலமைப்பை உருவாக்க முடியும்.

அது மாத்திரமன்றி அரசியலமைப்பில் சில சொற்பதங்களை உள்ளடக்கிவிட்டு, அதனை சிங்களவர்களுக்கு ஒருவிதமாகவும், தமிழர்களுக்குப் பிறிதொரு விதமாகவும் கூறி சமாளிக்க முடியாது. அதனடிப்படையிலேயே கடந்த காலங்களில் 'ஒருமித்த நாடு' மற்றும் 'ஏக்கிய இராச்சிய' உள்ளிட்ட சொற்பதங்கள் தொடர்பான தர்க்கங்கள் உருவாகின.

தற்போது பெரும்பான்மைப் பலத்துடன் ஆட்சி பீடம் ஏறியிருக்கும் இந்தப் புதிய அரசாங்கத்துக்கு, சகலரும் ஏற்றுக் கொள்ளக்கூடியவாறான அரசியலமைப்பை உருவாக்குவதற்கும், அதனை அனைத்து மக்களையும் ஏற்றுக்கொள்ளச் செய்வதற்குமான பெருவாய்ப்பு காணப்படுகின்றது. அவ்வாய்ப்பு உரியமுறையில் பயன்படுத்தப்பட வேண்டும் என்றார்.

இதேவேளை மாகாண சபை தேர்தலை அரசாங்கம் திட்டமிட்டு தாமதப்படுத்தி வருவதாக பாராளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் குற்றம்சாட்டியுள்ளார். பாராளுமன்ற அமர்வில் பங்கேற்று உரையாற்றிய போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

மாகாண சபைத் தேர்தல்கள் தொடர்பில் ஒரு தீர்வைக் காண்பதற்காக, பாராளுமன்றத் தெரிவுக்குழு ஒன்றைத் நியமிப்பதற்கான பிரேரணை கடந்த 2026 ஜனவரி 6ஆம் திகதி இந்த பாராளுமன்றில் நிறைவேற்றப்பட்டது.

ஜனவரி 6ஆம் திகதி முதல் எதிர்க்கட்சியானது தனது பிரதிநிதிகளாக ரஞ்சித் மத்துமபண்டார, நான் (மனுதாரர்), நிசாம் காரியப்பர் மற்றும் மனோ கணேசன் ஆகிய நான்கு பெயர்களையும் அனுப்பி வைத்துள்ளது. ஆனால், தீர்மானம் நிறைவேற்றப்பட்டு ஒரு மாதம் கடந்தும் அரசாங்கம் இதுவரை தமது பெயர்களை அனுப்பவில்லை.

இது மாகாண சபைத் தேர்தல்களைத் தாமதப்படுத்துவதற்கான அரசாங்கத்தின் தெளிவான நகர்வாகும். வெளிவிவகார அமைச்சர் உள்நாட்டு பொறிமுறைகள் பற்றிப் பேசினார்.

வன்முறைகள் மீண்டும் ஏற்படாது என்பதை உறுதிப்படுத்த வேண்டுமாயின், குறைந்தபட்சம் ஏதாவதொரு அதிகாரப் பகிர்வு மாதிரியாவது இருக்க வேண்டும். ஆனால் அறிவிப்பு வெளியாகி ஒரு மாதமாகியும் அரசாங்கம் சார்பில் நீங்கள் இன்னும் பெயர்களை வழங்கவில்லை எனவும் குறிப்பிட்டார்.


SASITHARAN LAW
PROFESSIONAL CORPORATION



**Vivekananthan Sasitharan**
*Barrister, Solicitor & Notary Public*



**Rajabalini Sasitharan**
*Barrister, Solicitor & Notary Public*

**Real Estate**
- Residential & Commercial: *Purchases, Sales*
- Mortgages & Refinances

**Family Law**
- Divorce
- Custody & Support

**Estate Law**
- Power of Attorney
- Wills & Estate Administration

**Immigration Law**
- Skilled Migration
- Provincial Nominee Program
- Super Visa and Sponsorship

**Business Law**
- Incorporations
- Purchases
- Sales & Leases

**Sasitharan Law Professional Corporation**
10 Milner Business Court, Suite 709, (Markham & Milner),
Scarborough ON M1B 3C6
Tel: 416.949.0404 / Fax: 416.948.0303 • info@sasilaw.ca • www.sasilaw.ca

**EELANADU**
203 Gardiner Dr
Bradford - ON
L3Z 0J5 - CANADA

416 841 9600 / 905 653 3000
eelanadu1993@ gmail.com

### வாசகர்கள் வர்த்தகர்கள் கவனத்திற்கு!

எமது ஈழநாடு பத்திரிகை அலுவலகம் திங்கள் முதல் ஞாயிறு வரை வாரத்தில் ஏழு நாட்களும் காலை 9.00 மணி முதல் இரவு 12.00 மணி வரை திறந்திருக்கும். மரண அறிவித்தல், நினைவஞ்சலி மற்றும் முக்கிய மான அறிவித்தல்கள் மட்டுமே வியாழன் இரவு 12.30 மணி வரை ஏற்றுக் கொள்ளப் படும்.

உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையில் விளம்பரம், அறிவித்தல் செய்ய விரும்பு வோர் அலுவலகத்துடன் (416) 841 9600 அல்லது (905) 653 – 3000 என்ற தொலை பேசியில் தொடர்பு கொண்டு விட்டு கீழ் காணும் இடங்களில் அறிவித்தல்களை ஒப்படைக்கலாம். தங்கள் ஆதரவிற்கு நன்றி.

**1 SANKAR INTERNATIONAL**
**2425 EGLINTON AVE EAST**
**(EGLINTON / KENNEDY)**

**2 NEW OCEAN SUPER MARKET**
**5635 FINCH Ave**
**(MARKHAM / FINCH Ave)**

**3 AGP MART**
**4A WADE AVE**
**TORONTO**

**4 KALAIMAHAL BOOK DEPOT**
**595 PARLIAMENT ST**
**TORONTO**

**5 UTHAYA SUPER MARKET**
**5010 STEELES AVE WEST**
**ETOBICOKE**

ஈழநாடு பத்திரிகையில் பிரசுரமாகும் அனைத்து அறிவித்தல்கள், விளம்பரங்களுக்கு சம்பந்தப்பட்ட வர்களே பொறுப்பாளர்கள். ஈழநாடு எந்த வகை யிலும் பொறுப்பேற்காது. அத்துடன் வெளிவரும் ஆக்கங்கள் அனைத்திற்கும் ஆக்கியோரே பொறுப் பாளர்கள். ஆசிரியர் அல்ல.

அன்பு இல்லக் குழந்தைகளுக்கான நன்கொடை யாளர்கள் 416 841 9600 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

**வெள்ளிக்கிழமைகளில் உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையை eelanadu.ca மின்னிதழ் மூலமாகவும் வாசிக்கலாம்.**

# கனடாவாழ் கருணையாளர்களின் கவனத்திற்கு!

கடந்த 14 வருடங்களாக உங்களின் அன்போடும் ஆதரவோடும் ஈழநாடு பத்திரிகை போரினால் பாதிக்கப்பட்ட குழந்தைகளின் இல்லமான அன்பு இல்லம், பாரதி இல்லம் செஞ்சோலை இல்லம் ஆகியவற்றைப் பராமரித்து வருவது நீங்கள் அறிந்ததே.

இந்நிலையில் தனிப்பட்ட ஒருவர் செஞ்சோலை 2026 என்ற ஓர் நிகழ்வை நடத்தவுள்ளதாகத் தெரிய வந்துள்ளது. இந்த தனிநபருக்கும் செஞ்சோலை உட்பட 3 இல்லங்களுக்கும் எந்தவி தொடர்புகளும் கிடையாது என்பதையும் இது போன்ற தான்தோன்றித்தனமாக செயற்பாடுகளில் ஈடுபடுபவர்கள் பற்றி கவனமாக இருக்குமாறு அன்பு உறவுகளைக் கேட்டுக் கொள்ளுகின்றோம். இந்தத் தகவலை உங்கள் முகநூல் மூலமாகவோ தனிப்பட்ட முறையிலோ பகிர்ந்து அனைவரு க்கும் தெரியப்படுத்துமாறு வேண்டுகின்றோம்.

Reg.No : NPC/30/14/02/01

**செஞ்சோலை சிறுவர் அபிவிருத்தி நிலையம்**
**SENCHCHOLAI CHILD DEVELOPMENT CENTER**

T.K.Parameswaran 10.01.2026

Chief Editor

Eelanadu Newspaper

Eelanadu1993@gmail.com/ Tel: (416) 841-9600

இலங்கையில் இடம்பெற்ற நீண்டகாலப் போரின் கொடூர விளைவுகளால் பாதிக்கப்பட்ட குழந்தைகளின் கல்வி, பராமரிப்பு, பாதுகாப்பு ஆகியவற்றை முதன்மை நோக்காகக் கொண்டு அன்பு இல்லம், பாரதி இல்லம், செஞ்சோலை இல்லம் போன்ற சிறுவர் இல்லங்கள் அரச அனுமதி பெற்று சட்டரீதியாக கடந்த பல ஆண்டுகளாக அர்ப்பணிப்புடன் செயல்பட்டு வருகின்றன.

அந்த மனிதாபிமானப் பணிகளுக்கு உறுதுணையாக, கனடாவில் இருந்து கடந்த 33 ஆண்டுகளாக வெளிவந்து கொண்டிருக்கும் ஈழநாடு பத்திரிகை, கனடியத் தமிழ் சமூகத்தின் பேராதரவோடு, தொடர்ச்சியாக கடந்த சுமார் 14 ஆண்டுகளாக இச்சிறுவர் இல்லங்களுக்கு உதவி வழங்கி வருகின்றது என்பது அனைவரும் அறிந்த உண்மையாகும். எமது இல்லங்களின் சார்பாக கனடாவில் ஈழநாடு பத்திரிகை மாத்திரமே இப்பணியைச் செய்ய நாம் அனுமதி வழங்கி இருக்கின்றோம்.

இத்தகைய பொறுப்புணர்வும் வெளிப்படைத்தன்மையும் அவசியமான சூழலில், கனடாவில் உள்ள ஒரு தனி நபர், சம்பந்தப்பட்ட சிறுவர் இல்லங்களின் எந்தவித அனுமதியையும் பெறாமல், சுயநல நோக்கோடு அடுத்த மாதம் ஒரு நிகழ்வை நடத்தி நிதி திரட்டவுள்ளதாக அறிவித்துள்ளமை எங்களை ஆழ்ந்த கவலையிலும் அதிர்ச்சியிலும் ஆழ்த்தியுள்ளது.

இவ்வாறான அனுமதியற்ற, ஒருதலைப்பட்சமான நிதி திரட்டும் முயற்சிகள் மனிதாபிமானப் பணிகளின் நம்பகத்தன்மையை பாதிப்பதுடன், நன்கொடை வழங்க விரும்பும் மக்களை குழப்பத்திற்குள்ளாக்குவதோடு, சிறுவர் இல்லங்களின் கண்ணியத்திற்கும் நிர்வாக ஒழுங்குக்கும் பாதிப்பை ஏற்படுத்தக்கூடியதாகும். எனவே, சம்பந்தப்பட்ட தனிநபர் உடனடியாக இத்தகைய செயல்பாடுகளை நிறுத்திக் கொள்ள வேண்டுமென கேட்டுக் கொள்கிறோம்.

அதேபோல், எதிர்காலத்தில் எந்தவொரு நிதி திரட்டும் நடவடிக்கையும் மேற்கொள்ளப்படுமாயின், அது கட்டாயமாக சம்பந்தப்பட்ட இல்லங்களின் எழுத்துமூல அனுமதியுடனும், பொறுப்பான அமைப்புகளின் ஒருங்கிணைப்புடனும், முழுமையான வெளிப்படைத்தன்மையுடனும் மட்டுமே நடைபெற வேண்டும் என்பதையும் வலியுறுத்துகிறோம்.

கனடியத் தமிழ் சமூகத்தினருக்கும், நன்கொடை வழங்கும் நல்லுள்ளங்களுக்கும் எமது பணிவான வேண்டுகோள் என்னவெனில், அனுமதியற்ற, உறுதிப்படுத்தப்படாத நிதி திரட்டல் முயற்சிகளில் ஈடுபடவோ, அவற்றுக்கு ஆதரவு வழங்கவோ வேண்டாமென கேட்டுக் கொள்கிறோம்.

போரினால் பாதிக்கப்பட்ட குழந்தைகளின் எதிர்காலம் என்பது யாருடைய தனிப்பட்ட சுயநலத்திற்கும் இரையாகக் கூடாது. மனிதாபிமானம், பொறுப்பு, நேர்மை ஆகிய மதிப்புகளின் அடிப்படையிலேயே இத்தகைய பணிகள் தொடர வேண்டும்.

அன்பு இல்லம், பாரதி இல்லம் செஞ்சோலை இல்லம் சார்பாக,

President
Senchcholai Child Development Center (Girls)
4, 5 stage 2, Thiruvaiyaru, Kilinochchi.

Address
4, 5 Stage 2, Thiruvaiyaru,
Kilinochchi.
Sri Lanka.

T.P No : 0094 21 228 5770
: 0094 71 535 4504
Email : sencholai1992@gmail.com
Website : www.senchcholai.org

Bank : Peoples Bank, Kilinochchi, Sri Lanka
SWIFT Code : PSSKLKLX
A/C No : 048100180069859
A/C Name : SENSOLAI CHILDREN CARE HOME

**Balachandran Law Office**
**Balachandran Muthaiah**
**Barrister, Solicitor & Notary**



குடிவரவுச்சட்டம் - விசா, ஸ்பொன்சர், அகதிமனு கோரிக்கைகள்
வீடு, வர்த்தகம், அடைமான சட்டம்.
விவாகரத்து, பிரிவு உடன்படிக்கை
உயில், தத்துவபத்திரம் தயாரித்தல்.
உட்பட சகல சட்ட தேவைகளுக்கும்
பாலச்சந்திரன் சட்ட அலுவலகம்

2401 Eglinton Ave East, Suite 300
Toronto, Ontario M1K 2M5
416 755 5544

# வடக்கு கிழக்கு இனவாதத்தை தவிர்க்க வேண்டும்! - பிமல்



ரணிலின் அரசாங்கத்தில் பதில் பிரதமராக செயற்பட்ட சுமந்திரன் வடக்கு மற்றும் கிழக்கு மக்களுக்கு என்ன செய்தார். தோல்வியடைந்து தற்போது வீட்டில் இருப்பதால் இனவாதத்தை கையில் எடுத்துள்ளார். இனவாதத்தால் தமிழ், முஸ்லிம் மக்கள் தான் மிக மோசமாக பாதிக்கப்பட்டார்கள். ஆகவே இனவாதத்தை கையில் எடுக்காதீர்கள். வடக்கு மற்றும் கிழக்கில் தேசிய மக்கள் சக்திக்கு உள்ள செல்வாக்கை மலினப்படுத்தும் வகையில் அரசாங்கம் செயற்படவில்லை. அபிவிருத்தி திட்டங்களே மேற்கொள்ளப்படுகிறது. அதற்கு இனவாதமளிக்காதீர்கள் என்று கேட்டுக் கொள்கிறேன் என சபை முதல்வரும், அமைச்சருமான பிமல் ரத்நாயக்க தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் 03 பெப் 2026 செவ்வாய்க்கிழமை நடைபெற்ற தொலைத் தொடர்பு ஒழுங்குப்படுத்தல் சட்டத்திருத்த ஒழுங்குவிதிகள் மீதான விவாதத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது,

நாட்டை வங்குரோத்து நிலைக்குத் தள்ளி, அரசியலில் வங்குரோத்து நிலையடைந்தவர்கள் தற்போது ஏஜ செயலியுடன் தான் மக்கள் சந்திப்புக்களை நடத்துகிறார்கள். இனவாதத்தை மாத்திரம் முன்னிலைப்படுத்தி செயற்படும் இரண்டு ஊடகங்கள் அவற்றுக்கு முன்னுரிமை வழங்குகின்றன.போலியான செய்திகளை மாத்திரமே வெளியிடுகின்றன.

முல்லைத்தீவு மாவட்டத்தில் கிவுல் ஓயா திட்டத்தின் ஊடாக சிங்கள குடியேற்றத்தை அமைப்பதாக தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் குறிப்பிடுகிறார்கள். இனவாதமற்ற வகையில் தான் நாங்கள் செயற்படுகிறோம்.ஜனாதிபதி வடக்கு, கிழக்கு மற்றும் மலையக அபிவிருத்திக்கு முன்னுரிமை வழங்கியுள்ளார்.

வடக்கிலும், கிழக்கிலும், மலையகத்திலும் பிரதான தமிழ் மற்றும் முஸ்லிம் அரசியல் கட்சியாக தேசிய மக்கள் சக்தி தான் உள்ளது. ஆகவே வடக்கு மக்களின் அபிலாசைகளுக்கும் நம்பிக்கைக்கும் எதிராக நாங்கள் செயற்பட போவதில்லை. வடக்குக்கான அபிவிருத்திகளை துரிதமாக ஆரம்பிப்போம். எதிர்வரும் மாதம் வடக்கு மாகாணத்தில் குடிநீர் திட்டத்தை ஆரம்பித்து வைப்போம். இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பொதுச்செயலாளர் சுமந்திரன் தேர்தலில் தோல்வியடைந்து தற்போது வீட்டில் இருப்பதால் இனவாதத்தை கையில் எடுத்துள்ளார். ரணிலின் அரசாங்கத்தில் சுமந்திரன் பதில் பிரதமராக செயற்பட்டார். அப்போது வடக்கு மற்றும் கிழக்கு மக்களுக்கு என்ன செய்தார். ஒன்றும் இல்லை ஆனால் தற்போது இனவாதத்தை முன்னிலைப்படுத்திக் கொண்டு அபிவிருத்தி திட்டங்களுக்கு எதிர்ப்பு தெரிவிக்கிறார்.

ஏதேனும் பிரச்சினை காணப்படுமாயின் வெளிப்படையாக பேசலாம். அதனை தவிர்த்து இனவாதத்தை கையில் எடுக்காதீர்கள். இந்த நாட்டில் இனவாதத்தால் தமிழ் மற்றும் முஸ்லிம் மக்கள் தான் அதிகளவில் பாதிக்கப்பட்டார்கள். நாட்டு மக்கள் அனைவருக்கும் தான் அபிவிருத்தி பணிகளை மேற்கொள்கிறோம் இதற்கு இனவாதம் என்ற உருவத்தை வழங்கா தீர்கள் என்றார்.

## ஷிராந்தி நிதிக்குழு குற்றப் புலனாய்வுப் பிரிவுக்குச் சென்றார்

மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாக இருந்த காலத்தில் ‘சிரிலிய’ என்ற பெயரில் பராமரிக்கப்பட்ட கணக்கில் நடந்ததாகக் கூறப்படும் நிதி முறைகேடுகள் தொடர்பான விசாரணைக்காக ஷிரந்தி ராஜபக்ஷ 03 பெப் 2026 குற்றப் புலனாய்வுத் துறைக்கு அழைக்கப்பட்டார். அதன்படி முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும் அவரது மனைவி ஷிரந்தி ராஜபக்ஷவும் பொலிஸ் நிதிக் குற்றப்பிரிவில் (FCID) ஆஜரானார்கள்.

பொலிஸ் நிதிக் குற்றப்பிரிவு (FCID) முன் ஆஜரான ஷிரந்தி ராஜபக்ஷ, 4 மணி நேரத்திற்கும் மேலாக வாக்கு மூலம் அளித்த பின்னர் அங்கிருந்து வெளியேறினார்.

இதற்கிடையில், ‘சிரிலிய சவிய’ என்ற அரச வங்கியின் சுதுவெல்ல கிளையில் ஷிரந்தி ராஜபக்ஷ உட்பட மூன்று பேரின் கூட்டுக் கணக்கு திறக்கப்பட்டுள்ளது, மேலும் கணக்கைத் திறப்பதற்கான முகவரி ‘கார்ல்டன் தங்காலை’ ஆகும்.

இதற்கிடையில், ரக்பி வீரர் வாசிம் தாஜுதீன் கொலை தொடர்பான விசாரணை தொடர்பாக ‘சிரிலிய சவிய’ மீது கடுமையான குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டன. வசீம் தாஜுதீனின் கொலை தொடர்பாக, குற்றப் புலனாய்வுத் துறை செப்டம்பர் (20) 2018 அன்று நீதிமன்றத்தில் ‘சிரிலிய சவிய’ அறக்கட்டளைக்குச் சொந்தமான WP KA 0642 என்ற பதிவு எண்ணைக் கொண்ட ஒரு டிஃபென்டர் வாகனம் தாஜுதீனை கடத்தப் பயன்படுத்தப்பட்டதாக அறிக்கை அளித்தது. இருப்பினும், 2019 இல் கோட்டபய ராஜபக்ஷ ஆட்சிக்கு வந்த பிறகு, அந்த விசாரணைகளை நடத்திய மூத்த காவல்துறை கண்காணிப்பாளர் ஷானி அபேசேகர உட்பட அனைத்து அதிகாரிகளையும் அவர் இடமாற்றம் செய்தார்.

ஷிரந்தி ராஜபக்ஷ கடந்த ஜனவரி 27ஆம் திகதியும் வாக்குமூலம் வழங்குவதற்காக அழைக்கப்பட்டிருந்த போதிலும், அன்றைய தினம் அவர் சமூகமளிக்கவில்லை என்பதுடன் வேறொரு தினத்தைக் கோரியிருந்தார். அதற்கமையவே அவர் மீணடும் அழைக்கப்பட்டிருந்தார்.






உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையின்
eelanadu.ca
33 வது ஆண்டு விழா
தமிழகத்தின் முன்னணித் திரைப்படப் பாடகரும்
பிரபல கர்நாடக இசைக் கலைஞருமான
சத்தியப்பிரகாஷ்
இந்திய - கனேடிய பக்கவாத்தியக்
கலைஞர்களுடன் இணைந்து வழங்கும்
ஏழிசைக் கீதங்கள்
(பாரதியார் பாடல்கள், தமிழிசைப் பாடல்கள், கர்நாடக இசை கலந்த திரைப்படப் பாடல்கள்)
Saturday
MARCH 21
2026
5:30PM
அன்பளிப்பு
VIP
$100
$50
சிறப்புச் சொற்பொழிவு: ஈழத்திலிருந்து வருகைதரும்
தமிழருவி சிவகுமாரன்
தாயகத்து வேர்களும்
கனடிய விழுதுகளும்
ARMENIAN COMMUNITY CENTRE
50 HALLCROWN PLACE, TORONTO
(VICTORIAL PARK & CONSUMER ROAD)
விழா சரியாக 5.30 மணிக்கு மங்கள விளக்கேற்றலுடன் ஆரம்பமாகும்.
தயவு செய்து நுழைவுச் சீட்டுடன் மண்டபத்திற்கு வரவும். நேரடி ஒளி-ஒலிபரப்புக்கு அனுமதி இல்லை.




AJITH SABARATNAM
INSURANCE & INVESTMENTS INC.
Ajith Sabaratnam
647.401.5800
647.594.9573
email:ajithsaba@gmail.com
10 THORNMOUNT DR
SCARBOROUGH,
ONTARIO M1B 3J4
Tel: 416.439.2800
Cash Point
PAWN BROKERS
3852 Finch Ave. E. Unit G03, Scarborough, ON. M1T 3T9
Tel : 416-284-7000
$1000 $20/month
உங்கள் அனைத்து விதமான சட்ட ஆலோசனைகளுக்கும் நம்பிக்கையுடன் நாடுங்கள்!
SASITHARAN LAW
PROFESSIONAL CORPORATION
T: 416-949-0404
F: 416-948-0303
Vivekananthan Sasitharan - Rajabalini Sasitharan
Barristers, Solicitors & Notaries Public
10 Milner Business Court, Suite # 709, Scarborough Ontario, M1B 3C6
INCOME TAX SERVICE
PERSONAL, SMALL BUSINESS, UNINCORPORATED AND INCORPORATED TAXES, TAXES AND ASSOCIATED SERVICES
THANAM KANAGARATNAM
Tax Analyst
416.298.6718
1080 Tabscott Rd, Unit 5
Scarborough, ON M1X 1E7
நியூ ரங்கனாஸ்
தங்கச்சுரங்கம்
சிங்கப்பூர்,டுபாய் தங்க நகைகளை
கோடைகால சிறப்புத் தள்ளுபடி விலையில்
கொள்வனவு செய்ய அரிய சந்தர்ப்பம்.
Cash for Gold
Pawning & Money Transfer
New Ranganas Jewellery
Markham & Steeles,Yellow Building,6055 Unit C-102
Scarbrough,ON M1X 0A7 - Canada. 647 702 2159
விழா சிறப்புற வாழ்த்துகிறோம்
Netwyn
www.netwyn.com
Kula Sellathurai
CEO
10 Thornmount Drive
Scarborough, ON M1B 3J4
D: 416.902.9462
O: 416.906.1414
kula@netwyn.com
VIBRANT HOSPITALITY GROUP
Shankar Nallathamby
905.769.1509 | 1.888.674.7770
vibranthospitalitygroup.com
Chapel Ridge
Funeral Home & Cremation Centre
Vilosan Sivatharman, B.Eng
Funeral Director
8911 Woodbine Avenue
Markham, Ontario L3R 5G1
Telephone: (416) 993-0826
Fax: (905) 305-8128
E-mail: vilosan9@hotmail.com
Chapel Ridge
FUNERAL ARRANGEMENTS
OF YOUR LOVED ONES
FUNERAL HOME & CREMATION CENTRE
Funeral Director
S. Christeen
416-258-6759
PACELAW
Poorany Sornabala
BD Specialist
Desmond Sornabala
Paralegal
Over 40 years of putting our clients first
Call Us Today
647-968-7059
Get In Touch
191 The West Mall Suite 1100
Toronto ON, M9C 5K8
psornabala@pacelawfirm.com
www.pacelawfirm.com
Personal Injury
Corporate & Commercial
Immigration
Family Law
Real Estate
Wills and Estates
Employment Law
Civil Litigation
Criminal Defence Law
Business Facilitation Services
AJAX CREMATORIUM
CALL: DHARMA
Licenced Funeral Pre-Planner
647-713-6049
வீடு வாங்க, விற்க அல்லது அது சம்பந்தமான
விடயங்கள் அறிய இலவச ஆலோசனைகளுக்கு
உங்கள் நண்பன் ஆனந் தர்மலிங்கம்
RE/MAX COMMUNITY
Realty Inc., Brokerage
1265 Morningside Ave, Suite 203
Toronto ON M1B 3V9
ANANTH
Tharmalingam
Sales Representative
416.939.9525
CSC
Credit Solution Centre
Sri Vallipuranathar
Certified Insolvency & Bankruptcy Counsellor
N.K.S
DRAPERY & BLINDS FABRIC
•Custom Made Vertical Blinds •Venetian Blinds •Draperies
•Curtain •Shutters •Roller Blind
Contact: Ketha
416-321-6420
210 Silver star Blvd, Unit # 825, Scarborough, ON M1V 5J9
Email:info@nksdrapery.com Web:www.nksdrapery.com
Amma Pawn Broker
அம்மா தங்கநகை அடைவு மாடம்
உங்கள் நகைக்கு கூடிய பெறுமதியும்
குறைந்த வட்டி வீதமும் தரும் ஒரே நிறுவனம்
1.5%
2%
(per month)
416-757-0034 · 416-994-3861
105A - 2425 Eglinton Ave, E, Scarborough. ammapawnbroker@gmail.com
NISHANTHAN LAW OFFICE
Umananthini Nishanthan (LL.B)
Barrister & Solicitor and Notary Public
Cell: 647-535-6365
Tel: 416-289-9229
Fax 1-800-878-1348
39 Devonshire Avenue
Markham Ontario L3S3P2
office@nishanthanlaw.onmicrosoft.com
www.nishanthanlaw.com
Vijaya Jewellery
3341, Markham Road, Unit 127 Scarborough ON m1x0A5
+1 (437) 833-3197, (647) 329-3062
Email:yugan14@hotmail.com
Ontario அரச அங்கீகாரம் பெற்ற முதன்மை நிறுவனம் ஒரே கூரையின் கீழ்
கனகாம்பிகை அடகுமாடம்
தங்க நகைக் கடன் மிகக் குறைந்த வட்டி விகிதத்தில் வழங்கப்படும்
தொடர்புகட்கு 416-754-7198
At Woodside Square Mall,
1571 SANDHURST CIRCEL #159D
(Finch & McCowan) Scarborough, ON
2613 EGLINTON AVE,
(Brimley & Eglinton)
Toronto, ON
Century 21
Innovative Realty Inc.
Jude GNANENDRAN
Sales Representative
416-827-2347 Direct
jude.gnanendran@century21.ca
www.century21jude.com
2250 Markham Road, Unit 3, Toronto ON M1B 2W4
Office: 416-298-8383 Fax: 416-298-8303
நந்தா NANTHA CATERS
BEST CATERS IN TOWN
Catering, Bakery & Take Out
Call 416 NANTHA 1 - 416 626 8421
Outstanding Agent for Outstanding Results.
In Your Neighbourhood Full Time Realtor
Raj Nadarajah
Sales Representative
DIR: 416-333-6115
nanohomes@gmail.com
RE/MAX
Santha
Panchalingam
சாந்தா
பஞ்சலிங்கம்
Board of Director
பணிப்பாளர்
416-200-5470
santha@tamilcentre.ca
www.tamilcentre.ca
MORTGAGE LOAN
ALMOST ALL SERVICES AVAILABLE
J.R.B
UNIVERSAL INC.
Business Loan
Business (Visa MC)
Best Rate Mortgage in Town,
Bad Credit New Immigrants
bankruptcy, 0% Down Payment,
1st, 2nd & 3rd Mortgage upto 100%
Loans, Mortgages, Insurances, RESP
Real Estate, Credit Counselling
Accounting and Tax Services
R.R.Rajkumar
Call for More Info
647-289-6164

# ஶ்ரீலங்காவின் சுதந்திர தினம்:- தமிழர் பகுதி எங்கும் கரிநாள் அனுஷ்டிப்பு!



இலங்கையின் 78ஆவது சுதந்திர தினம் தமிழர்களின் கரிநாளாகப் பிரகடனப்படுத்தப்பட்ட நிலையில், 04 பெப் 2026 கிளிநொச்சியில் கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டப் பேரணி நடத்தப்பட்டது.

யாழ்ப்பாண பல்கலைக்கழக சமூகம், வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள், சிவில் சமூக அமைப்புக்கள், தமிழ் அரசியல் பிரமுகர்களின் பங்கேற்புடன் இடம் பெற்ற இந்த ஆர்ப்பாட்டப் பேரணியானது கிளிநொச்சி கந்தசுவாமி கோவில் முன்றலில் இருந்து ஆரம்பமாகி, பசுமைப் பூங்கா வரை ஊர்வலமாக சென்றது.

இந்த ஆர்ப்பாட்டப் பேரணியில் பங்குபற்றியோர் முள்ளிவாய்க்கால் இனப்படுகொலைக்கான நீதி, வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான நீதி எனபவற்றைக் கோரி கோஷங்களை எழுப்பியதுடன், தமிழ் இனப் பிரச்சினைக்கான தீர்வினை வலியுறுத்தியும், தமிழர் தாயகப் பரப்பில் இடம்பெறும் நில ஆக்கிரமிப்புக்களை நிறுத்துமாறு வலியுறுத்தியும் கோஷங்களை எழுப்பி, பதாதைகளைத் தாங்கியவாறு சென்றனர்.

அதேவேளை தமிழர்கள் இந்நாட்டில் அடிமைப்படுத்தப்படுவதையும், கொடுமைப்படுத்தப்படுவதையும் வெளிப்படுத்தும் வகையிலான காட்சிப் பொருட்களைத் தாங்கியவாறு 'சிங்கக்கொடி அவமானச் சின்னம், இலங்கையின் சுதந்திர நாள் தமிழர்களுக்கு கரிநாள்' எனக் கோஷங்களை எழுப்பியும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

மேலும், இந்தஆர்ப்பாட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினர்களான துரைராசா ரவிகரன், சிவஞானம் சிறீதரன், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் ஆகியோர் பங்கேற்றிருந்ததுடன், பல்கலைக்கழக மாணவர்கள், வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள், உள்ளூராட்சி மன்றத் தலைவர்கள் மற்றும் உறுப்பினர்கள், சிவில் சமூக செயற்பாட்டாளர்கள் எனப் பெருந்திரளானவர்கள் கலந்து கொண்டனர்.

இந்நிலையில் குறித்த ஆர்ப்பாட்டப் பேரணி இடம் பெற்ற போது A9 பிரதான வீதியின் ஒருபக்க வழித்தடத்தில் வீதிப் போக்குவரத்து சிறிதுநேரம் தடைப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

## மட்டக்களப்பில்



இதேவேளை மட்டக்களப்பில் இலங்கையின் 78 ஆவது சுதந்திர தினத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து கிழக்கு மாகாண வலிந்துகாணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் சங்கத்தினர் மற்றும் கிழக்கு பல்கலைக்கழக மாணவர்கள் இணைந்து போராட்டம் ஒன்றை முன்னெடுத்தனர்.

மட்டக்களப்பு கல்லடி பாலத்திலிருந்து மட்டக்களப்பு காந்தி பூங்கா வரையில் ஊர்வலம் செல்ல ஆயத்தமான நிலையில் பெருமளவான பொலிஸார் குவிக்கப்பட்டு ஊர்வலத்தினை தடுப்பதற்கான செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்ட போதிலும் காந்திபூங்காவில் தேசிய சுதந்திர தின நிகழ்வுகள் நடைபெறுவதன் காரணமாக அங்கு செல்லமுடியாது என பொலிஸார் தடைகளை ஏற்படுத்தியதாக எமது செய்தியாளர் தெரிவித்தார்.

எனினும் தமது போராட்டம் வழமையாக காந்திபூங்காவில் நிறைவடைவதனால் அங்கு செல்வதற்கு அனுமதி வழங்குமாறு காணாமல் போனவர்களின் உறவினர்களினால் கோரிக்கை முன்வைக்கப்பட்டன. எனினும் அங்கு செல்வதற்கு அனுமதிக்கமுடியாது என பொலிஸார் தெரிவித்த நிலையில் கல்லடி பாலத்தில் ஆரம்பித்து தனியார் பஸ் நிலையத்தில் போராட்டத்தினை முடிப்பது என பொலிஸாரிடம் தெரிவித்ததையடுத்து போராட்டம் நடாத்துவதற்கு அனுமதி வழங்கப்பட்டது.

மட்டக்களப்பு, அம்பாறை, திருகோணமலை மாவட்டங்களிலிருந்து வருகை தந்த ஆயிரத்திற்கும் மேற்பட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் சங்கத்தின் உறவினர்கள், பொது அமைப்புகள், அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் என பலர் கலந்து கொண்டனர்.

இதன்போது கல்லடி பாலத்திலிருந்து பல்வேறு கோசங்களுடன் பேரணியானது நினைவு ஊர்தியுடன் பல்வேறு கோசங்களை எழுப்பியவாறு திருகோணமலை வீதியுடாக மட்டக்களப்பு நகர் நோக்கிசென்றபோது வெள்ளைப் பாலம் அருகில் பொலிஸாரினால் வீதி தடைகள் ஏற்படுத்தப்பட்டு போராட்டக்காரர்கள் மறிக்கப்பட்டு புதுப்பாலம் ஊடாக பேரணியானது செல்லுமாறு பணிக்கப்பட்டது.

எனினும் தாங்கள் தமது போராட்டத்தினை நகர் ஊடாகவே செல்வோம் என வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் மற்றும் சிவில் சமூக பிரதிநிதிகள் பொலிஸாருடன் முரண்பட்டு தள்ளுப்பட்ட நிலையில் பொலிஸார் அப்பகுதி ஊடாக செல்ல அனுமதிக்கப்படாத நிலையில் வெள்ளைப்பாலத்திற்கு அருகில் போராட்டம் மட்டுப்படுத்தப்பட்டு அவ்விடத்தில் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. அதனை தொடர்ந்து கிழக்கு பல்கலைகழக மாணவர்களினால் பிரகடனம் வாசிக்கப்பட்டு போராட்டம் முடிவுக்கு கொண்டு வரப்பட்டது.

இது இவ்வாறிருக்க கிவுல் ஓயா நீர்த்தேக்க திட்டத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து 02 பெப் 2026 நெடுங்கேணி பேருந்து நிலையத்திற்கு முன்பாக போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது. இந்த போரட்டத்தில் பெருந்திரளான மக்கள் பங்கேற்றிருந்தனர்.

இந்த போராட்டத்திற்கு இடையே, இந்த திட்டத்தை உடனடியாக நிறுத்துமாறு கோரி நெடுங்கேணி பிரதேச செயலாளரிடம் சமகஜர் ஒன்று கையளிக்கப்பட்டது..

கிவுல் ஓயா திட்டத்தை உடனடியாக நிறுத்த வேண்டும், இது சிறிய போராட்டமே, எனினும் அரசாங்கம் இந்த திட்டத்தை தொடர்ந்து முன்னெடுத்தால் பாரிய விளைவுகளைச் சந்திக்க நேரிடும் என இதன்போது சாணக்கியன் நெடுங்கேணி பிரதேச செயலாளரிடம் வலியுறுத்தினார். இந்த எதிர்ப்புக் குரலை ஜனாதிபதியின் கவனத்திற்கு கொண்டு செல்லுமாறும் நெடுங்கேணி பிரதேச செயலாளரிடம் இதன்போது மேலும் வலியுறுத்தப்பட்டது.

பொருளாதார நெருக்கடி காரணமாக 2023 ஆம் ஆண்டில் இடைநிறுத்தப்பட்ட கிவுல் ஓயா அபிவிருத்தித் திட்டம் மீண்டும் ஆரம்பிக்கப்படவுள்ளது.

வவுனியா மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் நிலவும் குடிநீர் தட்டுப்பாடு மற்றும் விவசாயப் பிரச்சினைகளுக்குத் தீர்வாக இத்திட்டம் அமையுள்ளது. இதற்காக ஏற்கனவே மதிப்பிடப்பட்ட செலவு ரூ . 23,456 மில்லியன் ஆக திருத்தம் செய்யப்பட்டுள்ளதுடன், உள்நாட்டு நிதியைப் பயன்படுத்தி 2026 முதல் 2031 ஆம் ஆண்டிற்குள் பணிகளை முடிக்க அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.



# வல்வெட்டித்துறையில் தலைவரின் வீட்டை மீளமைப்பதே பொருத்தமானது -நகரசபை தீர்மானம்!



விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனின் இல்லம் அமைந்திருந்த காணியில் புதிய கட்டு மானங்களை அமைக்காமல் அவர் வாழ்ந்த இல்லத் தின் மாதிரியில் அதை அமைப்பதே பொருத்தம் என காணியின் உரிமையாளரான தலைவர் பிரபா கரனின் சகோதரிக்கு அறிவுறுத்த வல்வெட்டித் துறை நகரசபை தீர்மானித்துள்ளது.

வல்வெட்டித்துறை நகரசபையின் மாதாந்த அமர்வு அண்மையில் நகர பிதா எம்.கே சிவாஜிலிங்கம் தலைமையில் இடம்பெற்றது. இதன்போது, தலை வர் பிரபாகரனின் இல்லம் அமைந்திருந்த காணி யில் புதிய கட்டடம் ஒன்றை அமைப்பதற்கு, காணியின் உரிமையாளரான பிரபாகரனின் சகோதரி ம.ஜெகதீஸ்வரி முன்வைத்த கோரிக்கை தொடர்பில் ஆராயப்பட்டது.

அதன் போது உறுப்பினர் மயூரன் கருத்துத் தெரி விக்கையில், சம்பந்தப்பட்ட காணியின் உரிமை யாளராக தலைவர் பிரபாகரனின் சகோதரி உள்ளார். எனினும், அந்தக் காணி 'பிரபாகரனின் காணி' என்றே அனைவராலும் அறியப்படுகின்றது.

தலைவர் வாழ்ந்த வீடு இடித்து அகற்றப்பட்டா லும், அந்த வெற்றுக் காணியை பிரபாகரனின் இல்லம் என்றே இன்றும் அழைக்கின்றனர். எனவே, அதன் பழைமை மாறாமல் நாங்கள் பாதுகாக்க வேண்டும்.

அங்கு புதிய கட்டுமானங்களை அமைக்கவிடாமல் தடுப்பதற்கு நகரசபைக்கு அதிகாரம் இல்லை. ஆனால் தார்மீக அடிப்படையில் புதிய கட்டுமானங் களை அமைப்பதைத் தவிர்க்குமாறும், அமைப்ப தாயின் பிரபாகரனின் இல்லத்தையொத்த கட்டு மானத்தை அமைக்குமாறும் ஆதனத்தின் உரிமை யாளருக்கும், அற்றோனித்தத்துவக் காரருக்கும் கோரிக்கை விடுப்போம். அதை ஏற்பதும், மறுப்ப தும் அவர்களின் கைகளில் உள்ளது என்றார். இந்தக் கருத்து அனைவராலும் ஏற்கப்பட்டு, ஏகமனதாகத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

# 100 குழந்தைகள் மீது பாலியல் சுரண்டல் கனடா வாழ் தமிழ் குடும்பஸ்தருக்கு ஆயுள் தண்டனை




அமெரிக்காவில் சிறுமிகளை பாலியல் ரீதியாக துன்புறு த்திய குற்றச்சாட்டில், கனடாவின் ரொரன்ரோவில் வசிக்கும் 40 வயதான ரமணன் பத்மநாதன் குற்றவாளி யாக இனங்காணப்பட்டுள்ளார்.

அமெரிக்காவில் நூற்றுக்கும் மேற்பட்ட குழந்தை களை பாலியல் ரீதியாக சீண்டியதாக தமிழரான ரமணனன் குற்றத்தை ஒப்புக் கொண்டார்.

40 வயதான ஒரு கனடிய நாட்டவர், சமூக ஊடகங்கள் மூலம் 100-க்கும் மேற்பட்ட குழந்தைகளை இலக் காகக் கொண்டு பல ஆண்டுகளாக பாலியல் சுரண்ட லில் ஈடுபட்டதை ஒப்புக்கொண்டுள்ளார்.

டொராண்டோவைச் சேர்ந்த ரமணன் பத்மநாதன், அமெரிக்க ஃபெடரல் நீதிமன்றத்தில் கடந்த வெள்ளிக் கிழமை அன்று, குழந்தை ஆபாசப் படங்களைத் தயாரித்தல் மற்றும் ஒரு சிறுமியை வற்புறுத்தித் தூண்டிய குற்றச்சாட்டுகளை ஒப்புக்கொண்டார்.

பத்மநாதன் ஏழு ஆண்டுகள் நீடித்த ஒரு திட்டமிட்ட சதித் திட்டத்தில் ஈடுபட்டார், அது அவர் கைது செய்யப்பட்ட பின்னரே முடிவுக்கு வந்தது.

நீதிமன்ற ஆவணங்கள் மற்றும் நீதித்துறையின்படி, அவர் இளம் பெண்களின் நம்பிக்கையைப் பெறுவதற் காக, ஒரு அமெரிக்க டீனேஜ் பையனாக நடித்து ஒரு போலி ஆன்லைன் அடையாளத்தை உருவாக்கினார்.

கனடாவில் இதே போன்ற குற்றங்களுக்காக முன்னர் தண்டனை பெற்ற ரமணன், சமூக ஊடகங்கள் மூலம் நூற்றுக்கும் மேற்பட்ட குழந்தைகளை பாலியல் ரீதியாக சீண்டியதாக செய்ததாக அமெரிக்காவில் குற்றத்தை ஒப்புக் கொண்டுள்ளார். இந்தக் குற்றச் சாட்டுகளை ரமணன் பத்மநாதன் ஏற்றுக்கொண்டு ள்ளதாக கடந்த வெள்ளிக்கிழமை அமெரிக்க நீதித் துறை வெளியிட்ட ஒரு அறிக்கை தெரிவிக்கிறது.

அமெரிக்காவிடம் தற்காலிகமாக சரணடைந்த பின்னர், கடந்த டிசம்பர் மாதம் 3ஆம் திகதி ரமணன் பத்ம நாதன் கைது செய்யப்பட்டதாக அமெரிக்க நீதித்துறை தெரிவித்துள்ளது.

இது இவ்வாறிருக்க பொதுமக்கள் பாதுகாப்புக்காகப் பணியாற்ற வேண்டிய பொலிஸ் துறையிலேயே திட்ட மிட்ட குற்றச் செயல்கள் ஈடுபட்டுள்ளமை கனடா முழு வதும் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

டொராண்டோ பொலிஸ் சேவையில் பணியாற்றிய ஏழு பொலிஸ் உத்தியோகத்தர்கள் திட்டமிட்ட குற்றச் செயல்கள் மற்றும் ஊழல் தொடர்பான வழக்கில் கைது செய்யப்பட்டு குற்றச்சாட்டுகளை எதிர்கொண்டு வருகின்றனர். யோர்க் பிராந்திய பொலிஸார் முன்னெ டுத்த நீண்டகால ரகசிய விசாரணையின் பின்னணியில் இந்த கைது நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு ள்ளதாக அதிகாரப்பூர்வ தகவல்கள் தெரிவிக்கின்றன.

சட்டத்தை அமல்படுத்த வேண்டியவர்களே சட்டத்தை மீறியதாகக் கூறப்படும் இந்த சம்பவம், பொலிஸ் அமை ப்பின் நம்பகத்தன்மையை கடுமையாக கேள்விக் குறியாக்கியுள்ளது.

கைது செய்யப்பட்டவர்களில் நால்வர் உடனடியாக சம்பளமின்றி பணியிடைநீக்கம் செய்யப்பட்டுள்ளனர். அவர்கள் ரொறன்ரோ 11வது 12வதுபிரிவுகள் மற்றும் துப்பாக்கி மற்றும் வன்முறைக் கும்பல் போன்ற முக்கியப் பிரிவுகளில் பணியாற்றியவர்கள் என்பதும் மேலும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

இந்த விசாரணையில் குற்றச்சாட்டுகளை எதிர்கொள் ளும் உத்தியோகத்தர்களில் இருவரின் அடையாளங்கள் உறுதிப்படுத்தப்பட்டுள்ளன.

டிம் பார்ன்ஹார்ட் (12வது பிரிவு) மற்றும் ராப் பிளாக் ஆகியோரின் பெயர்களே இவ்வாறு வெளியிடப்பட்டு ள்ளது. பொதுமக்கள் சட்ட அமலாக்க அமைப்புகள் மீது வைத்திருந்த நம்பிக்கையை குலைக்கும் இந்த சம்பவம், கனடாவில் பொலிஸ் துறையின் உள்ளக கண்காணிப்பு மற்றும் பொறுப்புக்கூறல் தொடர்பான விவாதங்களை மேலும் தீவிரப்படுத்தும் என எதிர் பார்க்கப்படுகிறது.

## தமிழரசுக்கட்சி ஓர் ஆச்சரியம்!

இலங்கை தமிழ் அரசு கட்சியின் காலஞ்சென்ற தலைவர் மாவை. சேனாதிராசாவின் சிலை அவரது சொந்த ஊரில் திறந்து வைக்கப்பட்டி ருக்கின்றது. மாவையின் இறுதி நிகழ்வு எவ் வாறு அதன உள்வீட்டு அரசியல் சிக்கலின் வெளிப்பாடாகக் காட்சியளித்ததோ அதே போன்று அவரது சிலை திறப்பிலும் அதன் உள் வீட்டு சிக்கல்கள் வெளிப்படுகின்றன.

இலங்கை தமிழ் அரசு கட்சியின் தலைவராக மாவை. சேனாதிராசா இருந்த காலத்திலேயே கட்சிக்குள் சிக்கல்கள் ஆரம்பித்திருந்தன – அந்த சிக்கல்களின் சாட்சியாகவே அவரும் மறைந்து போனார். இரா.சம்பந்தன் விடை பெற்ற போதும் அந்தக் கட்சி சிக்கலில் தான் இருந்தது மூத்த தலைவர்கள் என்று அடை யாளப்படுத்தப்பட்ட இருவருமே அவர்கள் தலைமை தாங்கிய கட்சியை சரியான திசையில் கொண்டுசெல்ல முடியாதவர்களாகவே பிரிந்தனர்.

கட்சி இப்போது உள்முரண்பாடுகளில் சிக்கி யிருக்கிறது. இந்த நிலையில் அதன் எதிர்காலம் இன்னும் முரண்பாடுகள் கொண்டதாகவே இருக்கும். தமிழ் மக்களுக்கு ஓர் தேசிய அரசி யல் இயக்கம் தேவையென்னும் அடிப்படையில் எஸ்.ஜே.வி.செல்வநாயகத்தால் ஆரம்பிக்கப்பட்ட கட்சியானது, பிற்காலத்தில் ஏற்பட்ட அரசியல் கொந்தளிப்புகளால் அழிந்து போகாமல் ஏதோ தாக்குப்பிடித்துக் கொண்டிருப்பது ஓர் ஆச்ச ரியம் தான்.

இலங்கையின் பாரம்பரியமான தென்னிலங்கை கட்சிகள் அனைத்துமே நிலை குலைந்து விட் டன. ஏனெனில், புதியதலைமுறையும் அரசியல் மாற்றங்களும் அவ்வாறான நிலைமையை ஏற்படுத்தியிருக்கிறது. ஆனால், 1949இல் ஆரம் பிக்கப்பட்ட இலங்கை தமிழ் அரசு கட்சி மட்டும், எவ்வித அரசியல் வெற்றிகளை காண் பிக்காத போதிலும் கூட இப்போதும் தாக்குப் பிடித்துக் கொண்டிருக்கின்றது.

ஒருவேளை தமிழ் மக்கள் மத்தியில் அரசியல் ரீதியில் சிந்தனை மாற்றமொன்று ஏற்பட வில்லையா? இதற்கு அந்தக் கட்சியின் தனித்துவம் காரணமல்ல மாறாக ஒரு குறிப் பிட்ட நெருக்கடியான காலத்தில், தமிழீழ விடுத லைப் புலிகள் இயக்கம் அதனைப் பயன்படுத் தும் தீர்மானத்தை எடுத்தமை தான் ஒரேயொரு காரணம்.

ஒருவேளை இலங்கை தமிழ் அரசு கட்சிக்கு பதிலாக வேறு ஒரு கட்சியை உதாரணமாக, இலங்கை தமிழ் காங்கிரஸை புலிகள் பயன்படுத் தும் தீர்மானத்தை எடுத்திருந்தால், காணாமல் போன தமிழ் அரசு கட்சி, காணாமலேயே போயி ருக்கும்.

தமிழர் விடுதலைக் கூட்டணி இல்லை யென்றவுடன் உடனடியாகவே தமிழ் அரசு கட்சி யின் வீட்டுச் சின்னமே கருத்தில் கொள்ளப் பட்டது. அன்றையசூழலில் அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சியின் சைக்கிள் சின்னத்தை கருத்தில் கொள்ளுமாறு கூறப்பட்ட போதும் வன்னி அதனைக் கவனத்தில் கொள்ளவில்லை.

காரணம் சைக்கிள் கட்சிக்கு தமிழ்த் தேசிய அடிப்படையிலான முகம் இருந்திருக்கவில்லை. செல்வநாயகத்தால் உருவாக்கப்பட்ட தமிழ் அரசு கட்சி தமிழ்த்தேசிய அரசியலில் தாய்க் கட்சியாக நோக்கப்பட்டதுடன் இன்னோர் அடிப்படை யான காரணமும் அந்தக் கட்சி தெரிவு செய்யக் காரணமாக இருந்தது.

அதாவது, அதனை வடக்கு, கிழக்கு தழுவிய தாகக் கொண்டு செல்ல முடியும். இன்றும் வடக்கு, கிழக்கு தழுவிய மக்கள் ஆதரவுள்ள ஒரேயொரு கட்சியாக தமிழ் அரசு கட்சி மட்டுமே. ஆனால் அவ்வாறானதொரு கட்சி உள் முரண்பாடுகளுக்குள் சிக்கியிருக்கின்றது. முரண் பாடுகள் ஏற்படுவது சாதாரணமானது தான். ஆனால் அதிலிருந்து மீளும் வழி தெரியாமல் இருப்பது தான் சிக்கலானது.

# விடுதலைப்புலிகள் மீதான தடை நீக்கம் தொடர்பான வழக்கை ஒத்தி வைத்த சென்னை நீதிமன்றம்! நீதிமன்றத்தில் தானே ஆஜராகி வாதாடிய வை.கோ!



இந்தியாவில் தமிழீழ விடுதலைப் புலிகள் மீதான தடையை நீக்கக் கோரி நீண்ட காலமாக தொடரப் பட்ட மனு மீதான விசாரணையை சென்னை மேல் நீதிமன்றம் ஒத்தி வைத்துள்ளது.

நீதியரசர்கள் குழாம் முன்னிலை யிலான விசாரணையின் போது மத்திய அரசின் சட்டத்தரணி மேல திக அவகாசம் கோரியதை அடுத்து, 2026 வழக்கு பெப்ரவரி 16 வரை ஒத்தி வைக்கப்பட்டது.

மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுச் செயலாளர் வைகோ இந்த மனுவினை தாக்கல் செய்துள்ளார். மத்திய அரசு 1991 ஆம் ஆண்டு விடுதலைப் புலிகள் அமைப்பைத் தடை செய்தது.

அதன் பின்னர் இந்தத் தடை அவ் வப் போது நீட்டிக்கப்பட்டு வரு கிறது. ஆரம்பத்தில் ஒவ்வொரு இர ண்டு வருடங்களுக்கும் பின்னர் ஒவ்வொரு ஐந்து வருடங்களுக்கும் ஒரு முறை.

2012 ஆம் ஆண்டில், சட்டவிரோத நடவடிக்கைகள் (தடுப்பு) சட்டத்தின் கீழ் இந்த அமைப்பு மீண்டும் சட்ட விரோதமாக அறிவிக்கப்பட்டது. இந்த உத்தரவை UAPA தீர்ப்பாயம் பின்னர் உறுதி செய்தது.

இந்த தீர்ப்பை எதிர்த்து வைகோ 2013 ஆம் ஆண்டு சென்னை மேல் நீதிமன்றத்தை அணுகினார். இந்த வழக்கு நீதிபதிகள் அனிதா சுமந்த் மற்றும் நீதிபதி மும்மினேனி சுதீர் குமார் ஆகியோர் அடங்கிய நீதிபதி கள் குழாம் முன் விசாரணைக்கு வந்தது.

விசாரணையின் போது மத்திய அரசு தரப்பில் ஆஜரான சட்டத்தரணி மனுவை ஒத்திவைக்கக் கோரினார். கோரிக்கையை ஏற்றுக் கொண்டு, விசாரணையை பெப்ரவரி 16ஆம் திகதிக்கு நீதிபதிகள் ஒத்திவைத்தனர்.

நீதிமன்ற தீர்ப்பின் பின்னர் ஊடகவிய லாளர்களிடம் உரையாற்றிய வைகோ பின்வருமாறு கூறினார், விடுதலைப் புலிகள் மீதான தடையை நீக்கக் கோரி நான் தொடர்ந்த வழக்கு சென்னை மேல் நீதிமன்றத்தில் விசாரணைக்கு வந்தது. நானே நேரில் முன்னிலையாகி இந்தத் தடை ஏன் சட்ட விரோதமானது என்பதற் கான முதற்கட்ட வாதங்களை முன் வைத்தேன்.

மத்திய அரசு அவகாசம் கேட்டதால் வழக்கு பெப்ரவரி 16 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. மத்திய அரசின் முக்கியமான குற்றச்சாட்டு: புலிகள் தமிழ்நாட்டையும் இணை த்து தமிழீழம் அமைக்க முயல்கி றார்கள் என்பது. இதை நான் முற்றி லுமாக மறுக்கிறேன்.

வட்டுக்கோட்டை தீர்மானத்திலோ, தலைவர் பிரபாகரனின் மாவீரர் நாள் உரைகளிலோ ஒருபோதும் தமிழ் நாட்டை இணைக்கும் நோக்கம் இருந்ததில்லை என்பதை ஆதாரங் களுடன் விளக்கினேன்.

தலைவர் பிரபாகரனின் பின்னால் இருக்கும் தமிழீழ வரைபடத்தில் கூட தமிழ்நாட்டின் ஒரு சிறு துளி இடம் கூட இருந்ததில்லை. ஈழ மண்ணை மீட்பது மட்டுமே அவர்களின் நோக்கம்.

மத்திய அரசின் அடிப்படை வாதமே பொய்யானது எனும்போது, இந்தத் தடையின் மொத்த கட்டுமானமும் சரிந்து விழுகிறது.

ஆயுதப் போராட்டம் பற்றி கேள்வி எழுப்பப்பட்ட போது 1948 ஐநா மனித உரிமைகள் பிரகடனத்தின் முகவுரையை மேற்கோள் காட்டி னேன்.

ஒரு நாட்டில் அடக்குமுறையும் சர்வாதிகாரமும் நிலவும் போது, அதை எதிர்த்துப் புரட்சி செய்வது நியாயமானது என ஐநா-வே அங்கீ கரிக்கிறது. மாபெரும் தலைவர் நெல்சன் மண்டேலா அவர்கள் ரிவோனியா நீதிமன்றத்தில் சொன்னது போல அரசாங்கம் ஆயுதங்களால் மக்களை ஒடுக்கும் போது, மக்கள் தற்காப்புக்காக ஆயுதம் ஏந்துவது தவிர்க்க முடியாதது.

இலங்கையில் நடைபெற்று வந்த போர், 2009 ஆம் ஆண்டு முடிவுக்கு வந்த பிறகும், விடுதலைப்புலிகள் இயக்கம் தமிழீழ தனி நாட்டுக் கோரிக்கையை கைவிடவில்லை. அதற்கான ஆதரவு மற்றும் நிதித் திரட்டல் வேலைகளில் தொடர்ந்து ஈடுபட்டு வருகிறது' என்று தடை நீட்டிப்பு ஆணையில் மத்திய அரசு குறிப்பிட்டுள்ளது

இராஜீவ்காந்தி கொலையை சுட்டிக் காட்டித 'தான் விடுதலைப்புலிகள் இயக்கத்திற்கு இந்தியாவில் தடை விதிக்கப்பட்டது. அந்தக் கொலை வழக்கில் குற்றம் சாட்டப்பட்டவர்கள் அனைவரும் விடுதலை செய்யப் பட்டு விட்டார்கள். ஒரு சிலர் மறை ந்து விட்டார்கள்.

உண்மையான குற்றவாளிகளை கண்டறிவதற்காக அமைக்கப்பட்ட பல்நோக்கு புலனாய்வுக் குழு 20 ஆண்டுகாலமாக எவரையும் கைது செய்யாமல் காலம் கடத்தி இறுதியில் கலைக்கப்பட்டு விட்டது.

இப்படிப்பட்ட சூழ்நிலையில் தவறான நோக்கத்தோடு உண்மைக்கு மாறாக விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தடையை நீட்டிப்பது என்பது அநீதி யான செயலாகும் என்றும் வை.கோ மேலும் தெரிவித்தார்.


கடன் தொல்லையா?

பல்லாண்டுகாலம் Bankruptcy, Consumer proposal போற்ற சேவைகளில் அனுபவமுடையவர்கள்

கட்டணங்கள் ஏதுமற்ற சேவை

- கடன் பிரச்சினையால் நிம்மதியற்ற வாழ்க்கையா?
- நாளாந்த வாழ்கை கைநழுவிப் போகிறதா?
- வீடு, கார் பறிமுதலாகிவிடும் என்ற ஏக்கமா?
- Collection Agnecyயின் தொலைபேசி மிரட்டலா?
- உங்கள் சம்பளம் கடன் தந்தோரால் பறிமுதலாகும் என்ற கவலையா?

✓ சேவைக்கான கட்டணம் (Consulting fee) நாங்கள் அறவிடுவதில்லை

✓ மறைவான கட்டணங்கள் (Hidden charges) ஏதும் கிடையாது

✓ Consumer Proposal செய்வதன் மூலம் உங்கள் கடன்தொகையில் ஒரு பகுதியை மட்டுமே வட்டியில்லாது செலுத்த நாங்கள் ஒழுங்கு செய்து கொடுப்போம்.

✓ Consumer Proposal ஏற்றுக்கொள்ளப்பட்டதற்கு உடனேயே கடனட்டடை ஒன்றைப் பெற்றுக்கொள்ள ஒழுங்கு செய்து கொடுக்கப் படும்

அனைத்து கடன் பிரச்சினைகளுக்கான இலவச ஆலோசனைகளுக்கு

Sri Vallipuranathar

Certified Insolvency & Bankruptcy Counsellor

CSC Credit Solution Centre

309-80 Corporate Drive, Scarborough, ON M1H 3G5

Tel: 416.439.0224, Cell: 416.450.5011

Fax: 416.439.0226

www.creditsolutioncanada.com

contact@creditsolutioncanada.com




# சிங்கள உயரடுக்கு கட்டமைப்புக்குள் தமிழரசுக்கட்சி புதைக்கப்படுகிறதா?

கட்டுரையாளர்:-
பனங்காட்டான்

இன்று உலகளாவிய ரீதியில் தமிழ் மக்களால் தீவிரமாக அலசப்படும் விடயம் இலங்கை தமிழரசுக் கட்சியின் உள்ளக விவகாரம் அல்லது அதன் எதிர்காலம் பற்றியது. இதன் மையமாக அமைந்திருப்பது சுமந்திரனுக்கும் சிவஞானம் சிறீதரனுக்குமிடையான மோதல் என்றும் சொல்லலாம்.

எப்பாடுபட்டாவது சிறீதரனை கட்சியிலிருந்து படிப்படியாக அப்புறப்படுத்தி விடவேண்டும். முடியா விட்டால் இப்போதைக்கு தமிழ்த் தேச விரோதியாக அடையாளம் காட்டி ஓரங்கட்டியாவது விடவேண்டும் என்பதில் சுமந்திரன் தீவிரமாக இருப்பதாக தமிழரசுக் கட்சியின் நீண்டகால ஆதரவாளர்கள் மத்தியில் பேசப்படுகிறது.

கட்சியின் மிகமிக மூத்த உறுப்பினரான சி.வி.கே.சிவஞானம் பதில் தலைவராக இருக்கும் வேளையில் பதில் செயலாளராகவுள்ள சுமந்திரன் தம் விருப்பப்படி காரியங்களை ஆற்றுவதாக உள்ளேயும் வெளியேயும் பலர் கருது.கிறார்கள்.. சில விடயங்களை சிவஞானம் அவர்கள் ஏற்றுக் கொண்டாலும் முழுமையாக அவ்வாறில்லையென்று கூறுகிறார்.

சிறீதரன் மீது சில நடவடிக்கைகள் எடுக்க வேண்டியது தவிர்க்க முடியாது இருப்பதாக தமக்கு நெருக்கமானவர்களிடம் கூறி வரும் சிவஞானம் அவர்கள், தாம் தலைமைப் பொறுப்பில் இருக்கும்வரை சிறீதரனை கட்சியிலிருந்து நீக்க அனுமதிக்கப் போவதில்லையென்றும், தம்மை மீறி இதனை எவராவது செயற்படுத்த முனைந்தால் தமது ஆளுமையை அப்போது தெரிந்து கொள்வார்கள் என்றும் தெரிவித்து வருவதாகவும் நம்பகமான வட்டாரங்கள் மூலம் அறிய முடிகிறது.

சில மாதங்களுக்கு முன்னர் கட்சியைச் சேர்ந்த சிலரை அறுவான், குறுக்கால போவான் என்று இவர் கூறியதையும் இப்போது சிலர் நினைவு ஊட்டுகிறார்கள். அதே சமயம், ஒரு காலத்தில் சுமந்திரனும் சிறீதரனும் நெருக்கமான கூட்டாளிகளாக இருந்த போது சிவஞானத்துக்கு எதிராக இவர்கள் செயற்பட்டதையும் அவர்கள் மறந்து. விடவில்லை. எனினும், கடந்த பொதுத் தேர்தலின் போது வேட்பாளர் பட்டியலில் சிறீதரனின் பெயர் தவிர்க்கப்பட்டிருந்த வேளையில், அவரது பெயரை தீர்மானமாக மொழிந்து இடம் பெறச் செய்தவர் சிவஞானமே என்ற தகவலும் இப்போது வெளிவரத் தொடங்கியுள்ளது.

பதில் செயலாளர் சுமந்திரனின் அனைத்துச் செயற்பாடுகளுக்கும் திரு. சிவஞானம் அவர்கள் தலையாட்டியாக இருந்து வருவதான கருத்து இது தொடர்பான பல வட்டாரங்களில் மட்டுமன்றி புலம்பெயர்ந்து வாழும் தமிழர்கள் மத்தியிலும் பரவலாக



உள்ளது. தமிழர்களால் நடத்தப்படும் அமெரிக்க ஐரோப்பிய வானொலிகளிலும் தொலைக்காட்சிகளிலும் இடம் பெறும் அரசியல் நிகழ்ச்சிகளில் அண்மைக் காலங்களில் இதனை வெளிப்படையாக அவதானிக்க முடிகிறது.

கடந்த வருடம் ஏப்ரல் மாதம் அரசியலமைப்புப் பேரவையில் லஞ்ச ஒழிப்புத் திணைக்களத்துக்கு ஒருவரை தெரிவு செய்யும் விடயத்தில் சிவஞானம் சிறீதரன் அநுர குமர அரசுக்கு ஆதரவாகச் செயற்பட்டதாகவும், அதனைத் தொடர்ந்து எட்டு சந்தர்ப்பங்களில் அவ்வாறே நடந்து கொண்டதாகவும் தமிழரசுக் கட்சி அவர்மீது குற்றஞ் சாட்டியுள்ளது.

சிறீதரன் மேற்படி பேரவைக்கு சிறுபான்மைக் கட்சிகளின் பிரதிநிதியாகச் செயற்பட்டாரே தவிர தமிழரசுக் கட்சியினால் நியமிக்கப்பட்டவர் அல்ல.




இவர் மீதான குற்றச்சாட்டை சிங்கள மக்களுக்கு அவர் துரோகம் செய்துவிட்டது போலவும், அதனால் அவர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் நாடாளுமன்றத்தில் ஆக்ரோசமாகக் குரல் கொடுத்தவர் தயாசிறி ஜெயசேகர.. இவர் மகிந்த ராஜபக்சவின் பொதுஜன பெரமுன கட்சியைச் சேர்ந்தவர். முன்னைய பல அரசாங்கங்களில் கட்சி விட்டு கட்சி மாறி எப்போதும் அமைச்சராகவேயிருந்த ஜி.எல்.பீரிஸின் சட்டக்கல்லாரி மாணவர் இவர். தமது குருவைப் போலவே தயாசிறியும் பல கட்சிகளில் குந்தி எழும்பியவர்.

இவர் சிறீதரனுக்கு எதிராக நாடாளுமன்றத்தில் சுமத்திய குற்றச்சாட்டுகளை வரிக்கு வரி சொல்லிக் கொடுத்தவர் மட்டக்களப்பைச் சேர்ந்த தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் என்பது பகிரங்கமாகியுள்ளது. இவ்வாறான ஒரு கேவல நிலைக்கு தமிழரசுச் கட்சியின் நிகழ்காலம் மாறியுள்ளது.

சுமந்திரனின் விருப்பத்தை நிறைவேற்ற மட்டக்களப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் குருநாகல் மாவட்ட எம்.பியான தயாசிறியை நாடியுள்ளார் என்றால், எழுபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்னர் தமிழ் அரசு என்ற பெயரில் தந்தை செல்வாவால் உருவாக்கப்பட்ட கட்சி இன்று இந்தத் தடத்தில் பயணிக்கிறது என்பதை புரிந்து கொள்ள முடியும்.

இந்தக் குறுநாடகத்தை நிரூபிப்பது போன்று சில நாட்களுக்கு முன்னர் அறிக்கை ஒன்று ஆங்கிலத்திலும் தமிழிலும் வெளிவந்துள்ளது. அமெரிக்காவின் நியுயோர்க்கை தளமாகக் கொண்ட தமிழ் டயஸ்பரா நியூஸ் இதனை வெளியிட்டுள்ளது. அந்த அறிக்கையின் ஒரு பகுதியை காலத்தின் தேவை கருதி இன்றைய பத்தியில் இணைப்பதை அவசியமெனக் கருதுகிறேன். அது பின்வருமாறு உள்ளது:

இலங்கைத் தமிழரசுக் கட்சி வேண்டுமென்றே ஆபத்தான உள்நாட்டு நெருக்கடியை எதிர்கொள்கிறது தற்செயலாக அல்ல, மாறாக திட்டமிடப்பட்டு. தமிழ் மக்களால் மீண்டும் மீண்டும் நிராகரிக்கப்பட்டு அவரது சொந்த கட்சிக்குள்ளேயே தோற்கடிக்கப்பட்ட எம்.ஏ.சுமந்திரனின் நடவடிக்கைகள், சிங்கள உயரடுக்கின் அரசியல் நலன்களுக்கு சேவையாற்றும் வகையில், தெளிவாக இலக்கு வைத்துள்ளது. சுமந்திரனுக்கு தமிழ் மக்களிடமிருந்து ஜனநாயக ஆணை கிடையாது. பாராளுமன்றத் தேர்தல்களில் அவர் நிராகரிக்கப்பட்டார். தலைமைத்துவப் போட்டிகளில் கட்சி உறுப்பினர்களால் நீக்கப்பட்டார். மேலும் உள்சூழ்ச்சியின் மூலமாக மட்டுமே அரசியல் ரீதியாக உயிர் பிழைத்தார். ஆயினும்கூட, இன்று, அவர் தமிழரசுக் கட்சி மீது சர்வாதிகார கட்டுப்பாட்டைப் பயன்படுத்த முயல்கிறார்.

தமிழரசுக் கட்சி சாதாரண கட்சி அல்ல. இது தமிழ்த் தேசியத்தின் வரலாற்று அரசியல் குரல். தமிழ் அரசியல் ஓரங்கட்டலுக்கு ஒரு ஜனநாயக தீர்வாக கூட்டாட்சியைக் கோரிய முதல் கட்சி இதுவாகும். 1977ல் தெளிவான மக்கள் ஆணையுடன் தமிழீழத்தை ஆதரித்தது. இந்த மரபை உள்நாச வேலைகளால் அழிக்கவோ, கடத்தவோ அல்லது அகற்றவோ முடியாது. தமிழரசுக் கட்சியை எளிதில் அழிக்க முடியாது வரலாறு இதை மீண்டும் மீண்டும் நிரூபித்துள்ளது.

வெகுஜன ஆதரவைப் பெற முடியாத சுமந்திரன் கட்சிக்குள் குழப்பத்தை உருவாக்க முடிவு செய்துள்ளார். அவரது மூலோபாயம் தெளிவாக உள்ளது. இலங்கை தமிழரசுக் கட்சியை உடைத்து, அதன் அடித்தளத்தை வீழ்த்தி, வெளிப்புற சிங்கள பெரும்பான்மை சக்திகள் – குறிப்பாக அநுர குமர திஸ்ஸநாயக்க தலைமையிலான ஜே.வி.பி. வடக்கு மற்றும் கிழக்கில் தேர்தல் ரீதியாக ஆதாயம் அடைய முடியும். இது சீர்திருத்தம் அல்ல. இது அரசியல் சிதைவு.

சிவஞானம் சிறிதரனை பாராளுமன்றக் குழுத் தலைவர் பதவியில் இருந்து நீக்குவதற்கான அண்மையில் மேற்கொள்ளப்பட்ட முயற்சி இந்த நிகழ்ச்சி நிரலை சந்தேகத்திற்கு இடமின்றி அம்பலப்படுத்துகிறது. சிறீதரன் தமிழரசுக் கட்சியின் அரசியல் குழுவால் ஒருமனதாக நியமிக்கப்பட்டவர். அரசியலமைப்பு சபையில் அவரது பதவி இலங்கைத் தமிழரசுக் கட்சியால் மட்டும் வழங்கப்படவில்லை, மாறாக, பாராளுமன்றத்தின் சிறுபான்மை கட்சிகளால் வழங்கப்பட்டது. எனவே, அந்த பதவியில் இருந்து அவர் ராஜினாமா செய்ய கட்டாயப்படுத்த கட்சிக்கு சட்டபூர்வமான அதிகாரம் இல்லை. இந்த நடவடிக்கை தனிப்பட்ட பழிவாங்கல், அரசியல் பாதுகாப்பின்மை மற்றும் வெளிப்புற அழுத்தங்களுக்கு கீழ்ப்படிதல் என்பதைத் தவிர வேறொன்றையும் பிரதிநிதித்துவம் செய்யவில்லை. சுமந்திரன் கொழும்பில் இருந்து செயற்படுகின்றார். தமிழர் தாயகத்தின் யதார்த்தத்தில் அவர் வாழவில்லை. இராணுவமயமாக்கல், நில அபகரிப்பு, கண்காணிப்பு அல்லது கட்டமைப்பு பாகுபாட்டை அவர் எதிர்கொள்ளவில்லை. ஆயினும் கூட தனக்கு இனி அதிகாரம் இல்லாத மக்களின் அரசியல் எதிர்காலத்தை ஆணையிட அவர் கருதுகிறார். அவரது நடவடிக்கைகள் தமிழர்களின் அபிலாசைகளுக்கு பொறுப்புக்கூறல் அன்றி, சிங்கள உயரடுக்கின் அதிகார கட்டமைப்புகளுடன் இணைந்திருப்பதை பிரதிபலிக்கின்றன' என்று இந்த அறிக்கையின் முக்கிய பகுதி தெரிவித்துள்ளது. ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்பர். புலம் பெயர்ந்துள்ள தமிழர்கள் புலன் பெயராமலேயே இருக்கிறார்கள் என்பதற்கு தமிழ் டயஸ்பரா நியூஸ் நல்லதொரு சான்று. முன்னர் பல தடவை வெளிநாடுகளுக்குச் சென்ற போது அங்கு வாழும் புலன் பெயராத் தமிழர்களால் எந்த வகையில் தாம் வரவேற்கப்பட்டார் என்பதையும், சில நாடுகளில் குசினிக் கூட்டங்களில் மட்டும் பங்குபற்ற நேர்ந்தது பற்றியும் அனுபவம் பெற்ற சுமந்திரனை தமிழரசுக் கட்சி எங்கு வைக்க வேண்டுமென்பதை சிந்திக்க வேண்டிய காலம் இதுவென்பதை தமிழ் டயஸ்பரா நியூஸ் புரியும் வகையில் தெரியத் தந்துள்ளது.

# 15வது ஆண்டில் வாசகர்களின் ஆதரவோடு ஈழநாட்டின் அறப்பணி

## உறவுகளே! பெப்ரவரி மாதம் உணவளிக்க முன் வாருங்கள்!

அன்பு இல்லம் - பாரதி இல்ல நிர்வாகசபை உறுப்பினர்கள்.

தலைவர்- வைத்திய கலாநிதி து.வி.ஜெயகுலராஜா

செயலாளர்- திரு.எஸ்.கிருஸ்ணமூர்த்தி (கிராமசேவையாளர்)

பொருளாளர்- திரு.சு.கபிலன் (கிளிநொச்சி)

உபதலைவர்- திரு.பரமேஸ்வரன் (வற்றாப்பளை அம்மன் ஆலய நிர்வாகி)

உபசெயலாளர்- செல்வி சி.கவிதா (முல்லைத்தீவு)

பதவிக்கால போசகர்-திரு த.செ.பத்மநாதன்

இணைப்போசகர்-திரு.ச.சரத்சந்திரன்

அன்புத் தமிழ் நெஞ்சங்களே! ஆயிரம் கோடி வணக்கங்கள்! குழந்தைகள் எல்லோரும் தெய்வத்திற்கு சமன். ஆதரவற்ற குழந்தைகளுக்கு நாம் செய்யும் பணி தெய்வத்திற்கு செய்யும் பணிக்கு சமன். சிறார்கள் வாழும் நிலையமும் ஒரு கோவில் தான்.

இந்தக் குழந்தைகளுக்கு தாய், தந்தை, உறவுகள் என்று எவருமே இல்லை. அவர்களின் தாய் தந்தையர்கள் போரின் போது உயிரை இழந்து விட்டனர். சிலர் காணாமல் போய் இன்னும் திரும்பி வரவில்லை. இன்று யார் இந்தப் பிள்ளைகளுக்கு உதவுகின்றார்களோ அவர்களே தாயுமாகி தந்தையுமாகி தெய்வமுமாகி நிற்கின்றார்கள். அந்த வகையில் நீங்களும் உங்கள் அன்புக்குரியவர்களின் நினைவாக உங்கள் பிறந்தநாள், பிள்ளைகளின் பிறந்தநாள், திருமண நன்நாள். அன்புக்குரியவர்களின் நன்நாள் என வருடத்தில் வரும் ஒரு நாளில் உணவுக்கு உதவுவதன் மூலம் அந்தக் குழந்தைகளுக்கு வாழ்வளியுங்கள்.

ஆயிரம் கோவில்களில் அன்னதானம் கொடுப்பதை விட கோடி புண்ணியம் உங்கள் வாசல் கதவைத் தேடி வரும் என்பதை மறவாதீர்கள். நாம் மனிதர்களாகப் பிறந்ததிற்கு ஓர் அர்த்தம் தேவை. மற்றவர்களுக்கும் சிறு உதவிகளை செய்வதன் ஊடாக கொஞ்சம் புண்ணியத்தையும் தேட வேண்டும்.

இளம் தளிர்களை எப்படி பராமரிக்கின்றோம் என்பதில் தான் அவர்களின் எதிர்காலம் தங்கியிருக்கின்றது. உங்களால் முடிந்தளவு நன்கொடையை இந்த அன்பு இல்லக் குழந்தைகளுக்கு வழங்குங்கள்.

15 வருடங்களுக்கு முன் 86 குழந்தைகளுடன் ஆரம்பிக்கப்பட்ட அன்பு இல்லத்தில் இன்று 423 குழந்தைகள் இருக்கிறார்கள். இவர்களில் 36 பேர் மாவீரர் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். பலர் போராளிகளின் பிள்ளைகள். அத்துடன் போரின் கொடுமையால் பெற்றோரைப் பறி கொடுத்தவர்கள் மட்டுமல்ல உறவுகளால் வாழ்க்கையைத் தொலைத்தவர்கள் கல்வியைத் தொலைத்தவர்கள் என பலரும் அடங்குகின்றனர்.

இவர்களுடைய உணவுத் தேவையை மாத்திரம் கனடா வாழ் அன்புத் தமிழ் மக்களாகிய உங்களை நம்பி நாம் பொறுப்பேற்று கடந்த 14 ஆண்டுகளாக சிறப்பாகச் செய்து வருகின்றோம். மூன்று வேளையும் நேர காலம் தவறாமல் சைவம் அசைவம் என அட்டவனைப்படுத்தி சிறப்பு உணவு வழங்கி வருகின்றோம்.

ஜனவரி 2017 முதல் ஒரு நாள் முழுவதுக்குமான உணவுக்காக குறைந்த பட்சம் 200.00 டொலர்களை மாத்திரமே நாம் உங்களிடம் வேண்டி நிற்கின்றோம் என்பதை உதவி செய்யும் அன்பர்கள் கவனத்தில் கொள்க.

உங்களது உதவிகள் அனைத்தும் சரியான நேரத்தில் அவர்களைச் சென்றடைந்து உங்களது நிகழ்வுகள் சரியான திகதியில் நடைபெறும் என்பதை பணிவோடு தெரிவித்துக் கொள்ளுகின்றோம். உங்கள் உதவிகள் சரியான நேரத்தில் சென்றடைகின்றது என்பதை நீங்கள் அறிந்து கொள்ளும் ஒரு குறியீடாகவே போட்டோக்கள் 11ம் பக்கத்தில் பிரசுரமாகின்றன.

அன்புக்குரியவர்களே! மீண்டும் கூறுகின்றோம் உங்கள் வாழ்வில் – உங்கள் மனதில் பதிந்துள்ள இன்ப நாட்களை – நினைவு நாட்களை எண்ணி அன்றைய நாளில் இந்தப் பிள்ளைகளுக்கு உணவு வழங்குங்கள். வருடத்தில் ஒரு நாள் உணவு வழங்குவதற்கு முற்பதிவு செய்யுங்கள். அன்பளிப்பை 5 நாட்களுக்கு முன் தந்து உதவுங்கள். இவ்வாறு நீங்கள் உதவி செய்தால் எமது பணியை சீராகச் செய்ய முடியும் என்பதோடு எமக்கும் ஓர் நம்பிக்கையும் உற்சாகமும் பிறக்கும். அந்தப் பிள்ளைகளுக்கும் தங்கள் வாழ்வு ஒளி மயமாக மாறுகின்றது என்ற எண்ணம் வரும்.

புலம் பெயர்ந்த மனிதாபிமானம் உள்ளவர்கள் – மனித நேயம் உள்ளவர்கள் இருக்கும் வரை நாம் அநாதைகள் அல்ல என்ற நம்பிக்கை அவர்களுக்கு வளரும். இந்த நம்பிக்கை தான் அவர்களது வாழ்க்கை. அந்த நம்பிக்கையை நாம் உங்களது பெரும் உதவியோடு தாராளமாக ஏற்படுத்தியுள்ளோம். அதனைத் தொடர்ந்து செய்வதற்கு எம்மோடு இணையுங்கள்.

எங்கள் இனத்திற்காக – எங்கள் வாழ்வுக்காக மரணித்த அந்த மக்களின் பிள்ளைகளை – மாவீரர்களின் குழந்தைகளை பட்டினியால் வதைக்கலாமோ? ஒரு கணம் சிந்தியுங்கள் உறவுகளே! அந்தப் பிள்ளைகளின் பெற்றோரின் உயிர்த் தியாகம் தான் இங்கு எங்களது வாழ்வுக்கு வழி கோலியது என்பதை ஒரு கணம் சிந்திப்போமாக.

”தர்மம் தலை காக்கும்” “கோடி புண்ணியம் தேடி வரும். ஆயிரம் கோவில்களுக்குச் சென்று வழிபடுவதிலும் அன்ன தானம் வழங்குவதை விட உங்கள் பெயரால் பசியாறும் அந்தக் குழந்தைகளின் வாழ்த்து உங்களை ஆசீர்வதிக்கும்.

17 ஜனவரி 2026 முதல்23 ஜனவரி 2026 வரையான நாட்களில் உணவுக்கு உதவியவர்களின் நிகழ்வின் தொகுப்பு 11ம் பக்கத்தில் உள்ளது.

கனடியத் தமிழ் சமூகத்தின் மகத்தான ஆதர வோடு கடந்த செப்டம்பர் முதல் 14வது ஆண்டில் எமது அறப்பணி தொடர்கிறது என்ற மகிழ்வான செய்தியை உங்களுடன் பகிர்ந்து கொள்ளுகின்றோம்.

**மேலதிக விபரங்களுக்கு:-**

**ஈழநாடு பரமேஸ் 416 841 9600**

## 12வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு ஆறுமுகம் செல்லத்துரை

புங்குடுதீவு 6ம்வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் லண்டனை வதிவிடமாகவும் கொண்டிருந்த யாழ்.மத்திய கபே உரிமையாளர் அமரர் திரு ஆறுமுகம் செல்லத்துரை அவர்களது 12வது ஆண்டு நினைவு நாள் 23 ஜனவரி 2026 வெள்ளிக்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது நினைவாக அவரது குடும்பத்தினர் பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திரு ஆறுமுகம் செல்லத்துரை அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 13வது ஆண்டு நினைவஞ.சலி



### திருமதி தவேந்திரராணி தேவரத்தினம்

யாழ்ப்பாணம் கரவெட்டியைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திருமதி தவேந்திரராணி தேவரத்தினம் அவர்களது 13வது ஆண்டு நினைவுநாள் 26 ஜனவரி 2026 திங்கட்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திருமதி தவேந்திரராணி தேவரத்தினம் அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அவரது குடும்பத்தினருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக் கின்றார்கள். **“நல்லதை நினை நடப்பது நடக்கும்”**

## 10வது ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி ஸ்ரீபதி ஞானாம்பிகை

மாதகலைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டி ருந்த திருமதி ஞானாம்பிகை ஸ்ரீபதி அவர்களது பத்தாவது ஆண்டு நினைவு நாள் திதி 02 பெப்ரவரி 2026 திங்கட்கிழமையாகும். அன்றைய நாள் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கவுள்ளார்கள். திருமதி ஞானாம்பிகை ஸ்ரீபதி அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 31ம்நாள் நினைவஞ்சலி



### திருமதி கமலாம்பிகை கந்தையா

அனலைதீவு 7ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்ருந்த திருமதி கமலாம்பிகை கந்தையா அவர்களது 31ம்நாள் நினைவு நாள் 01 பெப்ரவரி 2026 ஞாயிற்றுக்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லம் அன்பு இல்லம் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திருமதி கமலாம்பிகை கந்தையா அவர்களை நினைவுகூர்ந்து பிரார்த்திக்கும் அன்னாரின் குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 18வது ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி தங்கராணி சடாச்சரசுந்தரம்

வல்வெட்டித்துறையைப் பிறப்பிடமாகவும் லண்டனை வதிவிடமாகவும் கொண்டிருந்த திருமதி தங்கராணி சடாச்சரசுந்தரம் அவர்களது 18வது ஆண்டு நாள் நினைவு நாள் 29 ஜனவரி 2026 வியாழக்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திருமதி தங்கராணி சடாச்சரசுந்தரம் அவர்களை நினைவுகூர்ந்து பிரார்த்திக்கும் அன்னாரின் குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 4வது ஆண்டு நினைவஞ்சலி



### செல்வி பிரசாந்தி அருச்சுனன்

வேலணையைப் பிறப்பிடமாகவும் கனடா Northyorkஐ வதிவிடமாகவும் கொண்டிருந்த செல்வி பிரசாந்தி அருச்சுனன் அவர்களது நான்காவது ஆண்டுத் திதி நினைவு நாள் 31 ஜனவரி 2026 சனிக்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். செல்வி பிரசாந்தி அருச்சுனன் அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அவரது குடும்பத்தினருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

# அன்பு இல்லக் குழந்தைகளுக்கு இந்த வாரம் உணவளித்து அவர்களின் தாயுமாகி தந்தையுமாகிய கனடா வாழ் கருணையாளர்கள்




25 ஜனவரி 2026 ஞாயிற்றுக் கிழமை கனடா Exeuitive woodwork Ltd ஊழியர்கள் அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்கள்.




26 ஜனவரி 2026 திங்கட்டிழமை கரவெட்டியைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி தபேந்திரராணி தேவரெத்தினம் அவர்களது 13வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்




27 ஜனவரி 2026 செவ்வாய்க்கிழமை கனடாவில் வசிக்கும் திரு திருமதி வசந்தகுமார் ராஜவினோதா தம்பதிகளின் செல்வப்புதல்வன் சஞ்சயன் வசந்தகுமாரின் 25வது இனிய பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் செல்வன் சஞ்சயன் தனது பெற்றோர்களுடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்.




29 ஜனவரி 2026 வியாழக்கிழமை வல்வெட்டித்துறையைப் பிறப்பிடமாகவும் லண்டனை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி தங்கராணி சடாச்சரசுந்தரம் அவர்களது 18வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்




31 ஜனவரி 2026 ஞாயிற்றுக்கிழமை வேலணையைப் பிறப்பிடமாகவும் கனடா Northyorkஐ வாழ்விடமாகவும் கொண்டிருந்த செல்வி பிரசாந்தி அருச்சுனன் அவர்களது 4வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்




01 பெப்ரவரி 2026 ஞாயிற்றுக்கிழமை இணுவிலைச் சேர்ந்த திருமதி தங்கரெத்தினம் நல்லதம்பி அவர்களது 13வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்




01 பெப்ரவரி 2026 ஞாயிற்றுக்கிழமை அனலைதீவு 7ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி கமலாம்பிகை கந்தையா அவர்களது 31ம் நாள் நினைவு நாளாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்




01 பெப்ரவரி 2026 ஞாயிற்றுக்கிழமை அனலைதீவு 7ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி கமலாம்பிகை கந்தையா அவர்களது 31ம் நாள் நினைவு நாளாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்




01 பெப்ரவரி 2026 ஞாயிற்றுக்கிழமை கனடாவில் வசிக்கும் திருமதி பராசக்தி தர்மலிங்கம் அவர்களது 72வது இனிய பிறந்த நன்நாளாகும். அன்றைய தினம் திருமதி பராசக்தி தர்மலிங்கம் அவர்கள் தனது குடும்பத்தினருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்.




02 பெப்ரவரி 2026 திங்கட்கிழமை கனடாவில் வசிக்கும் திரு திருமதி கஜேந்திரா ஜெய்குமாரி இணையர்களின் செல்வப்புதல்வன் ஹரிஸின் 15வது இனிய பிறந்த நன்நாளாகும். அன்றைய தினம் செல்வன ஹரிஸ் தனது பெற்றோர்களுடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்.




02 பெப்ரவரி 2026 திங்கட்கிழமை மாதகலைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி ஸ்ரீபதி ஞானாம்பிகை அவர்களது 10வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்

## 24வது இனிய பிறந்த நன்நாள் வாழ்த்துக்கள்



### செல்வன்

### சஞ்சயன் வசந்தகுமார்

கனடாவில் வசிக்கும் திரு,திருமதி வசந்த குமார் ராஜவினோதா தம்பதிகளின் செல்வப் புதல்வன் சஞ்சயனின் 25வது இனிய பிறந்த நன்நாள் 27 ஜனவரி 2026 செவ்வாய்க் கிழமையாகும். அன்றைய நாளில் செல்வன் சஞ்சயனும் அவரது பெற்றோர்களும் இணை ந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.

அகவை இருபத்திஐந்து காணும் செல்வன் சஞ்சயன் பல்கலையும் கற்றுப் பல்லாண்டு காலம் பார் போற்றும் பைந்தமிழ் மகனாக வாழ வாழ்த்தும் அவரது பெற்றோர்கள் உறவு களுடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தை களும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் வாழ்த்துகின்றார்கள். வாழ்க வளமுடன்!

# தமிழ்த் தேசியவாத அரசியலில் அணுகுமுறை மாற்றங்கள்! சுமந்திரனுடனான நேர்காணலில் வெளிப்பட்ட விடயங்கள்

இலங்கையின் இனப்பிரச்சினைக்கான தீர்வு, அரசியலமைப்பு மாற்றம், தமிழ்ப் பிரதேசங்களின் அபிவிருத்தி, மாகாண சபைகளுக்கான தேர்தல் மற்றும் அதிகாரம், ஆட்சிலிருக்கும் தேசியமக்கள் சக்தியின் செயற்பாடுகள், தமிழரசுக் கட்சியின் எதிர்காலச் செயற்பாடுகள் எனப் பல விடயங்களையும் குறித்து இலங்கைத் தமிழரசுக் கட்சியின் செயலாளரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமாகிய ஜனாதிபதி சட்டத்தரணி திரு. எம்.ஏ. சுமந்திரனுடன் உரையாடினோம். இலங்கை அரசியற்பரப்பிலும் தமிழர்களின் அரசியலிலும் சுமந்திரனின் அடையாளமும் குரலும் முதன்மையானது. என்பதால் அனைத்துத் தரப்பினரோடும் உரையாடக் கூடியவராகவும் அனைத்துத்தரப்பினரும் உரையாடும் ஒருவராகவும் சுமந்திரன் காணப்படுகிறார். இது அவரைக் குறித்த கவனத்தையும் அதேவேளை சில சர்ச்சைகளையும் உருவாக்கியிருக்கிறது. இந்த நிலையில் அவருடன் மேற்கொள்ளப்பட்ட இந்த நேர்காணல் இங்கே முக்கியத்துவம் பெறுகிறது – கருணாகரன்

1.இலங்கையில் மிகப் பெரிய பிரச்சினைகளாகத் தொடரும் இனப்பிரச்சினை, பொருளாதார நெருக்கடி ஆகியவற்றுக்குத் தீர்வைக் காண்பது எப்படி? இதற்கான சரியான வழிமுறைகளைப் பின்பற்றுவதற்கு ஆட்சியாளர்களால் முடியாதிருப்பது ஏன்?

பதில்:- எந்தவொரு பிரச்சனையும் தீர்க்கப்படாமல் இருப்பதற்கு முக்கிய காரணம், இந்தத் தீவில் சிங்கள பௌத்தர்கள் பெரும்பான்மையாக இருந்தாலும் உலகிலும், ஏன் இந்தப் பிராந்தியத்திலும், அவர்கள் எண்ணிக்கையில் மிகவும் குறைவானவர்கள். எனவே அவர்களுக்கு இயல்பாகவே ஒரு பீதி உளவியல் ரீதியான அச்சம் இருக்கிறது. அரசியல் தீர்வு விடயத்தில் இது வெளிப்படையாகத் தெரிகிறது. அதனால் தான் அவர்கள் பௌத்தத்திற்கும் சிங்களத்திற்கும் முதலிடத்தைக் கொடுக்க வேண்டும் என்று முயற்சிக்கிறார்கள். பொருளாதார விடயங்களிலும் தங்களை மற்றவர்கள் விழுங்கி விடுவார்கள் என்ற பயம் உள்ளது, இது சுயாதீனமாக முடிவுகள் எடுப்பதைத் தடுக்கிறது. ஆட்சியாளர்கள், மக்களுக்கு அவர்களது பயம் நீங்கும்படியான பிரச்சார நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். அப்பொழுது தான் மாற்றமும் தீர்வும் முன்னேற்றமும் நிகழும்.

2.மக்களுடைய உணர்வுகளும் தேவைகளும் பாராளுமன்றத்திலும் ஆட்சியிலும் தொடர்ந்து புறக்கணிக்கப்படுவது எதற்காக?

பதில்:- முழுமையாக அப்படிப் புறக்கணிக்கப்படுவதாகச் சொல்ல முடியாது. ஒரு சில தருணங்களில் அதிகாரப் போதை காரணமாக மக்களது உணர்வுகளையும் தேவைகளையும் ஆட்சியாளர்கள் மறந்துவிடுகிறார்கள்.

3.அப்படிச் சொல்ல முடியாதே! மக்களுடைய உணர்வுகளும் தேவைகளும் புறக்கணிக்கப்பட்டதால் தானே நாட்டில் பிரச்சினைகள் மேலும் மேலும் கூடிச் சென்றிருக்கின்றன. புதிய பிரச்சினைகள் ஏற்படுவதைத் தவிர்க்க முடியாது. அது உலக வழமை. பழைய பல பத்தாண்டுகளாகத் தீர்க்கப்படாமல் இருக்கும் பல்வேறு பிரச்சினைகள் தொடர்வதற்குக் காரணம், மக்களுடைய உணர்வுகள் புறக்கணிக்கப் பட்டதனால் தானே?

பதில்:- மக்களுடைய உணர்வுகள் மதிக்கப்படுவதால் மாத்திரம் பிரச்சனைகள் தீராது. பல சந்தர்ப்பங்களில் இவை இரண்டிற்கும் எவ்வித தொடர்பும் கிடையாது. மாறாக சில சமயங்களில் மக்களின் உணர்வுகளை புண்படுத்தாமல் இருக்க நினைப்பதனாலேயே பிரச்சனைகளையும் தீர்க்க முடியாமல் இருக்கும்.

4.பாராளுமன்ற ஜனநாயகம் அர்த்தமிழந்த ஒன்றாக மாறுவதை எப்படிப் பார்க்கிறீர்கள்?

பதில்:- அதற்கும் காரணம் மக்கள் தான். அவர்கள் பொறுப்போடும் தூர நோக்கோடும் தங்களது தெரிவுகளை மேற்கொண்டால் பாராளுமன்றத்தில் ஜனநாயகம் மேலோங்குவதைக் காணலாம். குறுகிய நோக்கங்களுக்காக தவறானவர்களைத் தெரிவு செய்தால் பாராளுமன்ற ஜனநாயகம் அர்த்தமற்றதாக மாறி விடும்.

5. மாற்றத்துக்கான ஆட்சி, System Change என்றெல்லாம் சொல்லி அதிகாரத்துக்கு வந்திருக்கும் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம், மெய்யாகவே மாற்றத்திற்கான வழியில் தான் பயணிக்கிறதா?

பதில்:- ஓரளவு மாற்றம் தெரிகிறது. இது ஆரம்பம் மட்டும் தான் என்று சொல்கிறார்கள். ஆனால் அவர்களது பல செயற்பாடுகள் மாற்றத்தை நோக்கினதாகவே தென்படவில்லை. இதுவும் பழைய குருடி கதவைத் திறடி என்றுதான் முடியும்.

6. அவ்வாறில்லை என்றால், அதைச் சரியான திசையில் செலுத்துவதற்கான வழிமுறைகள் என்ன? இதில் எதிர்க் கட்சிகளின் திறனும் அர்ப்பணிப்பும் எப்படி உள்ளது? எப்படி அமைய வேண்டும்?

பதில்:- எதிர்க்கட்சிகள் தொடர்ச்சியாக அரசாங்கத்தை சவாலுக்கு உட்படுத்த வேண்டும். அதற்கான திறனோ அர்ப்பணிப்போ பிரதான எதிர்க் கட்சியிடம் இருப்பதாகத் தெரியவில்லை.

7 நாட்டின் தேவை, மக்களின் எதிர்பார்ப்பு, சிறுபான்மைத் தேசிய இனங்களான தமிழ் பேசும் சமூகங்களின் நியாயமான உரிமைகளில் எல்லாம் தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் நிலைப்பாடும் செயற்பாடும் (நடைமுறைகள்) எப்படி உள்ளது?

பதில்:-தமிழ்பேசும் மக்களின் உரிமைகள் சார்ந்த விடயங்களை இந்த அரசு நியாயமான முறையில் அணுகுவதாக தெரியவில்லை. அப்படி ஒரு தேசிய இனப்பிரச்சனை இருப்பதையே அவர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. அதனால் எந்தச் செயற்பாடும் அதை ஒட்டியதாக இல்லை.

8. முன்னைய ஆட்சியாளர்களுக்கும் தேசிய மக்கள் சக்திக்கும் இடையில் உள்ள வேறுபாடுகள் என்ன? ஒன்றுமைகள் என்ன?



பதில்:- தீர்க்கப்படாத இனப்பிரச்சனை ஒன்று இருக்கிறது என்பதை ஏற்றுக் கொள்ளாத நிலைப்பாடு முன்னைய ஆட்சியாளர்களுக்கும் இவர்களுக்கும் இடையே உள்ள ஒற்றுமையைக் காட்டுகிறது. ஊழல் விவகாரங்கள் மிக குறைவாக காணப்படுவது தான் வேற்றுமை.

9. ஒப்பீட்டளவில் ‘தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் பரவாயில்லை. முன்னேற்றகரமானது’ என்ற அபிப்பிராயம் உள்நாட்டிலும் சர்வதேச சமூகத்திலும் உண்டு. இப்படியான சூழலில் இந்த அரசாங்கத்தோடு பல விடயங்களில் சேர்ந்து செயற்படும் வாய்ப்புள்ளது அல்லவா!

பதில்:- ஆம். ஆனால் எவரையும் சேர்த்து செயற்படும் எண்ணம் தேசிய மக்கள் சக்திக்கு அறவே கிடையாது.

10. அப்படியென்றால், இது கதவைச் சாத்திக் கொண்டு மூடப்பட்ட அறைக்குள் குடித்தனம் நடத்துவதைப் போன்ற ஒரு ஆட்சியா? அரசியல் சொல்லாடலில் இதை ஏகத்துவத்தின் சர்வாதிகார இயல்பு (The authoritarian nature of monotheism) என்று சொல்லலாமா?


பதில்:- ஆம். நிச்சயமாக அப்படித் தான்.

11.தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்துடன் தமிழரசுக் கட்சி எத்தகைய அணுமுறையைப் பேண விரும்புகிறது? ஏனென்றால், ஆட்சிக்கு வருவதற்கு முன்பு, தேசிய மக்கள் சக்தியுடன் சிநேகபூர்வமானதொரு உறவு தனிப்பட்ட ரீதியில் உங்களுக்கும் தமிழரசுக் கட்சிக்கும் இருந்தது. அந்த உறவை ஆட்சியிலிருக்கும் போது மேலும் வளர்த்தெடுக்க முடியாமலிருப்பது ஏன்?

பதில்:- தேசிய மக்கள் சக்தி உறுப்பினர்களோடு தனிப்பட்ட சிநேகிதம் இருந்தது. ஆனால் ஆட்சியாளர்களான பின்பு அவர்களது அரசியல் நகர்வுகள் பலவற்றை நாம் பகிரங்கமாக எதிர்க்க வேண்டிய கட்டாய தேவை ஏற்பட்டது. அதை நாம் செய்கிறபோது அவர்கள் அதனை ஏற்றுக் கொள்கிற மனப் பக்குவம் உள்ளவர்களாகத் தெரியவில்லை. அந்தச் சூழலில் முன்னர் இருந்த சிநேகிதத்தைப் பேண முடியாதுள்ளது.

(14ம் பக்கம் பார்க்க)

சிவமயம்



ஸ்ரீ கைலாசம்
சைவசமய கிரியைகள் சேவை

சமயதீட்சை
அந்திமக்கிரியை (மரணச்சடங்கு)
அந்தியேட்டி (தர்ப்பை சுடுதல்)

ஆகியவற்றை ஈழத்து சைவ பாரம்பரிய முறையில் செவ்வனே செய்து கொள்வதற்கு
சைவக்குருக்களை
தொடர்பு கொள்ளவும்
“இணுவில் திருவூர்”
சிவஸ்ரீ. M.S. வைத்தியநாதன் குருக்கள்
647.629.5468
msvkurukkal@gmail.com

# யாழ்ப்பாணத்தில் பொங்கிய அநுர:- தேசிய மக்கள சக்தியின் வியூகம் என்ன?

யாழ்ப்பாணத்துக்கு வந்த அனுர குமார காலால் நடந்தார் கைகளால் உணவை எடுத்தார் வாயால் சாப்பிட்டார் கண்களால் பார்த்தார் வாயால் சிரித்தார் என்று சமூக வலைத்தளங்களில் அரசியல் விமர்சனப் பதிவுகள் உலாவுகின்றன.



ஏன் இந்தப் பதிவுகள் என்றால், ஜனாதிபதியின் ஒவ்வொரு அசைவையும் அசாதாரணமானதாக அபூர்வமானதாக, எளிமையானதாகச் சித்திரித்து, அவருடைய ஊடகப்பிரிவு குறிப்பாக டிஜிட்டல் புரோமோஷன் அணி கவர்ச்சியான காணொளிகளாக கவர்ச்சியான காணொளிகளாக வெளியிட்டு வருகிறது. ரிக்ரொக் தலைமுறையின் ஒரு பகுதி அதனை ஆர்வத்தோடும் எதிர்பார்ப்போடும் பார்க்கின்றது. அனுர பலாலியில் நடந்ததால் அவருக்குப் பிறஷர் குறைந்ததோ இல்லையோ, தமிழ் அரசியற் பரப்பில் ஓர் பகுதியினருக்குப் பிறஷர் ஏறுகிறது.

அனுரவை கதாநாயகராக கட்டமைக்கும் காணொளிகள் அரசாங்கத்தின் திட்டமிட்ட பிரச்சார விளம்பரங்கள் தான். எல்லாரும் செய்வதைத் தான் அனுரவும் செய்கிறார். ஆனால் அவருடைய ஊடகப் பிரச்சார அணி அதனை ஒரு செயற்கரிய செயலாக சித்திரிக்கின்றது. அதைத் தான் மேற்கண்டவாறு தமிழ் தேசிய ஆர்வலர்கள் விமர்சிக்கிறார்கள்.

தமிழ்த் தேசிய தரப்புகள் குறிப்பாக மேற்கண்ட பதிவுகளைப் போடுபவர்களும் உட்பட பெரும்பாலானவர்கள், ஒருவர் மற்றவரை அல்லது ஒரு கட்சி மற்றக் கட்சியை வில்லன் ஆக்கி, துரோகி ஆக்கி ஒருவர் மற்றவர் மீது மலத்தை அள்ளி வீசும் போது. இரண்டு தரப்பிலும் மலம் படுகிறது. இரண்டு தரப்புமே நாறுகின்றன. இதனால் தமிழ்த் தேசியப் பரப்பில் யாருமே கதாநாயகராக எழ முடியவில்லை. இந்த வெற்றிடத்திற்குள் அனுர ஒரு கதாநாயகராக இறக்கப்படுகிறார். தமிழ்த் திரை நாயகர்களின் எழுச்சியான பாடல்களின் பின்னணியில் அவர் நாயக நடை போடுகிறார். இது தமிழ்த் தேசியக் கட்சிகள் விட்ட வெற்றிடத்தை அரசாங்கம் திட்டமிட்டு நிரப்பும் ஒரு பிரச்சார உத்தி.

ஆனால் இது தனிய ஒரு பிரச்சார உத்தி மட்டுமல்ல, அதை விட ஆழமான ஆபத்தான ஓர் அரசியல் வியூகம் அங்கே உண்டு. அனுர கடந்த வாரம், யாழ்ப்பாணத்தில் வைத்து பின்வருமாறு கூறினார் முன்னர் வடமாகாணத்துக்கு தனி ஆட்சி தேவை என்று வடமகாண மக்கள் கூறினார்கள்.. ஆனால் முதன் முதலாக யாழ் மக்கள் இன்று எங்களுடைய ஆட்சியை தங்களுடைய ஆட்சி என்று நம்புகிறார்கள்.. அவர் பயன்படுத்திய சொற்களுக்கு அரசியல் பரிமாணம் உண்டு என்று எடுத்துக் கொண்டால் அவர் தமிழ் மக்களின் போராட்டத்தை வடக்குக்குள் மட்டும் சுருக்குகிறார். அது வடக்கின் பிரச்சினை என்று காட்டப் பார்க்கிறார். கிழக்கில் அந்தப் பிரச்சினை இல்லை என்றும் அங்கே பொருள் கொள்ளலாம். அவர் மட்டுமல்ல கோத்தபாய ராஜபக்சவும் இனப்பிரச்சினையை வடக்குக்கு மட்டுமான பிரச்சினையாக, ஒரு பொருளாதாரப் பிரச்சினையாகச் சுருக்கப் பார்த்தார். இது ஒரு தெளிவான நிகழ்ச்சி நிரல். கிழக்கில் பிரச்சினை இல்லை என்று காட்டுவது.அல்லது வடக்கை மட்டும் ஃபோக்கஸ் பண்ணுவதன் மூலம் வடக்கையும் கிழக்கையும் தெளிவாகப் பிரிப்பது.

இங்கு மேலும் முக்கியமாகக் கவனிக்கப்பட வேண்டிய ஒரு விடயம் உண்டு. ஒரு ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்ட பின் குறுகிய கால கட்டத்துள் வடக்கிற்கு அதிகம் வருகை தந்தவர் அனுர தான். அது மட்டுமல்ல, அவருடைய வருகைகளின் போது அவரை நோக்கித் திட்டமிட்டு மக்கள் குவிக்கப்படுகிறார்கள். அது தானாகத் திரண்ட கூட்டம் என்று அவருடைய ஊடகப் பிரிவு சொல்லலாம். ஆனால் அரச பேருந்துகள் அதற்குப் பயன்படுத்தப்படுகின்றன என்பது பொங்கல் விழாவின் போது அவதானிக்கப்பட்டது. ஆனால் இதேயளவு கவனக்குவிப்பு கிழக்கை நோக்கி இல்லை. வடக்கோடு ஒப்பிடுகையில் கிழக்கில் செல்பி அரசியல் பெரிய அளவில் இல்லை.

கடந்த பொங்கல் விழாவில் அனுர பின்வருமாறும் பேசினார் பார்க்காத பழகாத எங்களை நம்பினீர்கள். உங்களை நாங்கள் கைவிட மாட்டோம் இது கடந்த நாடாளுமன்ற தேர்தலில் தேசிய மக்கள் சக்தி பெற்ற வெற்றியை அவர்களே எதிர்பார்க்கவில்லை என்பதைக் காட்டுகிறது. அது எதிர்பாராமல் கிடைத்த வெற்றி. ஆனால் உள்ளூராட்சி சபைகளில் அவர்கள் எதிர்பார்த்த வெற்றி கிடைக்கவில்லை. தமிழரசுக் கட்சி குறிப்பாக சுமந்திரன் கடுமையாக உழைத்து தேசிய மக்கள் சக்தியின் வெற்றியின் பருமனைக் குறைத்தார். ஆனால் மாகாண சபையில் மீண்டும் தன் மேலாண்மையை நிலை நாட்ட வேண்டும் என்று தேசிய மக்கள் சக்தி கருதுகின்றது. அதை நோக்கி அவர்கள் ஏற்கனவே உழைக்கத் தொடங்கி விட்டார்கள்.

ஜனாதிபதியும் அமைச்சர்களும் வடக்கை நோக்கி அதிகமாக வருவது அந்த நோக்கத்தோடு தான். ஜனாதிபதியை தமிழ்மக்கள் மத்தியில் ஒரு கதாநாயகனாகக் கட்டியெழுப்புவதும் அந்த நோக்கத்தோடு தான். தமிழ்த் தேசியக் கட்சிகளுக்கு இடையே காணப்படும் பிடுங்குப்பாடு அரசாங்கத்துக்கு அனுகூலமானது. தமிழ்த் தேசியக் கட்சிகளுக்கு இடையில் காணப்படும் முரண்பாடுகளையும் குறிப்பாக தமிழரசுக் கட்சிக்குள் காணப்படும் குழு மோதல்களையும் சுட்டிக் காட்டி அமைச்சர் சந்திரசேகரன் அண்மைக் காலங்களில் பேசி வருகிறார். அதற்கு சிவஞானம் பதில் சொல்லுகிறார். சிவஞானத்தின் பதில் ஒலிவாங்கிகளுக்கு முன்னுக்கு கூறப்படுவதாக இருக்கக் கூடாது. அது செயலில் காட்டப்பட வேண்டும்.

அடுத்த மாகாண சபைத் தேர்தலை ஆகக்கூடிய விரைவில் வைப்பதை இந்தியா விடும்புகிறது என்பது எல்லாருக்கும் தெரிகிறது. எனவே மாகாண சபைத் தேர்தலில் தன்னுடைய வெற்றியை உறுதிப்படுத்துவதற்காக அரசாங்கம் கடுமையாக உழைக்கின்றது. ஏற்கனவே கிராம மட்டங்களில் அவர்கள் உருவாக்கி வரும் பிரஜா சக்தி என்ற கட்டமைப்புக்கு அவர்கள் வறுமை ஒழிப்பு என்ற கவர்ச்சியான நிறத்தைப் பூசலாம். ஆனால் நடைமுறையில் அது பிரதேச சபைகளுக்குச் சமாந்தரமானது. பிரதேச அதிகாரங்களைக் கவரும் நோக்கிலானது. அதைவிட முக்கியமாக அரச கட்டமைப்பு ஒன்றுக்கூடாக, அரச வளங்களைப் பயன்படுத்தி ஆளுங்கட்சியின் அடிமட்ட வலையமைப்பைப் பலப்படுத்தும் கட்சி அரசியல் உள்நோக்கம் அங்கே உண்டு என்று சந்தேகிக்கப்படுகிறது. அது தொடர்பாக அண்மையில் நல்லூர், திவ்வியஜீவன சங்க மண்டபத்தில் நடந்த கருத்தரங்கில் ஐங்கரநேசசன் பேசினார், பிரஜா சக்திக்கு எதிராகத் தான் நீதிமன்றம் செல்லப்போவதாக சுமந்திரன் கூறியிருக்கிறார்.

அதாவது தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் அடுத்த மாகாண சபையை இலக்கு வைத்து இயங்குகின்றது. ஆனால் வடக்கை அவர்கள் குறிவைப்பது அதற்காக மட்டும் அல்ல. அது அதை விட ஆழமானது. வடக்கை வென்றெடுத்தால், கிழக்கு தானாக விழுந்துவிடும் என்று அவர்கள் நம்புகிறார்கள்.வடக்குத்தான் பிரச்சனை. எனவே அங்கே அடிக்க வேண்டும். அங்கே வெல்ல வேண்டும். என்று அவர்கள் திட்டமிடுகிறார்கள்.

இது ஒருவிதத்தில் முதலாம் கட்ட ஈழப்போரின் போது ஜெயவர்த்தன வகுத்த வியூகத்தின் மறுவளமான வடிவம் ஆகும். ஜெயவர்த்தனாவின் தளபதியாக இருந்த சிறில் ரணதூங்க ஒரு நேர்காணலில் கூறியது போல, வடக்குக் கிழக்கு இணைப்பைத் துண்டித்து விட்டால், அதாவது வடக்கையும் கிழக்கையும் இணைக்கும் பிரதேசத்தை குடியேற்றங்களின் மூலம் துண்டித்து விட்டால், தாயகக் கோட்பாடு புவியியல் ரீதியாக சிதைக்கப்படும். அடுத்ததாக கிழக்கை படை நடவடிக்கைகள், திட்டமிட்ட அரச குடியேற்றங்கள் மூலமும் தமிழ் - முஸ்லீம் முரண்பாடுகளை, வடக்குக்-கிழக்கு முரண்பாடுகளை ஊக்குவிப்பதன் மூலமும் தோற்கடித்து விட்டால், தாயகம் நடைமுறையில் பலவீனமடைந்து விடும். கிழக்கை வென்றெடுத்தால், வடக்கு மட்டும் தாயகமாக நின்று பிடிக்காது என்று ஜெயவர்த்தன கணக்குப் போட்டார்.

இப்பொழுது தேசிய மக்கள் சக்தியானது அந்த வியூகத்தின் அடுத்த கட்டத்தைப் பரிசோதிக்கின்றதா? வடக்கை வீழ்த்தினால், கிழக்கு தானாக விழுந்துவிடும் என்று அவர்கள் நம்புகிறார்கள். ஏற்கனவே ஒரு வழக்கின்மூலம் வடக்கையும் கிழக்கையும் சட்டரீதியாகப் பிரித்தது ஜேவிபி என்பதை இங்கு சுட்டிக்காட்ட வேண்டும். எனவே வடக்கு-கிழக்கு அதாவது தாயகத்தைத் துண்டாடும் வியூகம் இதில் உண்டு.இந்த வியூகத்தை எதிர் கொள்ள வேண்டும்.பிரஜா சக்திக்கு எதிராக வழக்குப் போடுவதால் மட்டும் இந்த வியூகத்தைத் தோற்கடித்து விட முடியாது. பலமான தமிழ்த் தேசியப் பதில் வியூகம் ஒன்று வேண்டும்.

## இலங்கை தமிழரசுக்கட்சியின் சிதைவு:-

(16ம் பக்கத் தொடர்ச்சி) வெளியில் தான் நிற்கின்றனர். அவர்களும் கட்சியிலுள்ள உண்மையான விசுவாசிகளும் ஒன்றிணைந்து கட்சியை வழிப்படுத்த முடியுமா எனச் சிந்திக்க வேண்டிய நேரம் இதுவாகும். முதலில் செய்ய வேண்டியது தற்காலிகமாக கட்சியை வழிநடத்துவதற்காக நடுநிலையான உறுப்பினர்களைக் கொண்ட அவையொன்றை உருவாக்க வேண்டும். அதன்பினர் நீதிமன்றத்திலுள்ள வழக்கை மீளப்பெறுதல், பொதுச்சபைக்கான உறுப்பினர்களை மீளத்தெரிதல், புதிய பொதுச்சபை ஊடாகக் கட்சியின் நிர்வாக ஆட்சிச் சபையை உருவாக்குதல் போன்றன அந்த அவையின் மேற்பார்வையின் கீழ் இடம் பெறவேண்டும். இதற்கு தற்போது கட்சியிலுள்ள அனைவரும் ஒத்துழை க்க வேண்டும். உண்மையாகவே கட்சியையும் மக்களையும் நேசிப்பவர்களாக இருந்தால் நிச்சயம் அவர்கள் ஒத்துழைப்பார்கள். யாரைத் தேர்வது யாரை விடுவது என்பது கட்சி உறுப்பினர்களின் முடிவாக இருக்க வேண்டும். அதனை ஏனையவர்களும் ஏற்று நடக்கவேண்டும். அதேபோல யாரைத் தமது தலைவர்களாக ஏற்பது என்பதை பின்னர் தேர்தல்களில் மக்கள் முடிவு செய் வார்கள். இதுபோன்ற வழிகளைக் கைவிட்டு சட்ட ஓட்டைகளையும் குறுக்கு வழிகளையும் பின்பற்றி உட்கட்சி மோதல்களை வளர்த்து கட்சியைக் கொண்டு செல்ல முயன்றால் எஞ்சப்போவது கட்சியின் பெயரும் சின்னமும் மட்டுமே. இதற்குச் சிறந்த எடுத்துக்காட்டு தற்போதைய TULF. (தினக்குரல்)

# தமிழத் தேசியவாத அரசியலில் அணுகுமுறை மாற்றங்கள்! சுமந்திரனுடனான நேர்காணலில் வெளிப்பட்ட விடயங்கள்

(12ம் பக்கத் தொடர்ச்சி)





**12. தமிழ் அரசியற் தரப்பினர் கோருகின்ற எதிர்பார்க்கின்ற வலியுறுத்துகின்ற அரசியல் அதிகாரத்தை (சமஸ்டி உள்ளடங்கலான தீர்வை) வழங்குவதற்கான அரசியல் உள நிலை ஆட்சியாளர்களிடத்திலும் இல்லை. ஆட்சிக்கு வெளியே உள்ள சிங்கள அரசியலாளர்களிடத்திலும் சிங்களச் சமூகத்திடமும் இல்லை. அரசியலமைப்பு மாற்றம், அரசியற் தீர்வு ஆகியவற்றை எட்டுவதாக இருந்தால், சர்வஜன வாக்கெடுப்பு நடத்த வேண்டும். இவ்வாறான ஒரு சூழலில் எப்படித் தமிழ்மக்கள் எதிர்பார்க்கின்ற தீர்வைப் பெறுவது?**

பதில்:- எந்த அரசியல் தீர்விற்கும் சர்வஜன வாக்கெடுப்பு நடத்தியே ஆக வேண்டும் என்பது எமது நிலைப்பாடு. அது இல்லாமல் எந்த தீர்வும் நீடித்து நிலைக்காது. அது முடியாத காரியமல்ல. ஆட்சியிலிருக்கும் கட்சியும் நாமும் கூட்டாக மக்கள் முன் சென்று தீர்வை விளக்கினால் இது இலகுவாக சாத்தியப்படும்.

**13.தமிழ்த் தேசியவாத அரசியலை முன்னெடுக்கும் தரப்புகள் அனைத்தும் ஒன்றிணைய வேண்டும்' என்ற கோரிக்கையின் நடைமுறைச் சாத்தியமென்ன? தற்போது இந்த விடயத்தில் ஒரு இணக்க மனநிலை ஐக்கியத்துக்கான சூழல் தென்படுகிறது. அதேவேளை 'இது நேர்மையான உறவாக இருக்கப் போவதில்லை. சந்தர்ப்பவாதக் கூட்டு' என்ற பேச்சுகளும் சமாந்தரமாக உள்ளது. மெய்யாகவே தமிழ்க் கட்சிகளின் ஐக்கியத்தை உருவாக்குவதற்கு உங்களுடைய உளப்பூர்வமான எண்ணங்களும் நடவடிக்கைகளும் என்ன?**

பதில்:- தமிழ்த் தேசியக் கட்சிகள் ஒரு அணியில் சேர்ந்து இயங்குவது சாத்தியமான ஒரு விடயமே. தங்கள் கட்சிகளின் தனித்துவத்தை இழந்து விடாமல் அரசியல் தீர்வு விடயத்தில் இணங்கிச் செயற்படலாம். தேர்தல் கூட்டு இருந்தாலும் இல்லா விட்டாலும் தீர்வு விடயத்தில் இணைந்து செயல்படுவது அத்தியாவசியமானதும் கூட.

**14.தமிழரசுக் கட்சி, கட்சிக்கு உள்ளே (ஒழுக்காற்று நடவடிக்கைகளில்) இறுக்கமாகவும் வெளியே ஏனைய அரசியற் தரப்புகளோடு இணக்கமாகவும் செயற்படுகிறது. புதிய தலைமையில் ஒரு பண்பு மாற்றத்தை உணர முடிகிறது. கட்சியின் எதிர்காலத்தைக் குறித்து நிதானமாகச் சிந்திப்போரிடத்திலும் தமிழ்ச் சமூகத்தின் அரசியலைப் பற்றி அக்கறைப்படுவோரிடத்திலும் இதற்கு எத்தகைய வரவேற்புண்டு?**

பதில்:- இதற்கு பாரிய வரவேற்பு உண்டு. இப்போது தான் கட்சி கட்டுப்பாட்டோடு செயற்படுகிறது என்பது அனைவருடைய கருத்தாக உள்ளது. ஒற்றுமையில் பலம் உண்டு என்பதனால் மற்றைய கட்சிகளோடு இணக்கமாகச் செயற்பட வேண்டிய தேவை உள்ளது என்பதையும் அனேகமானோர் புரிந்து வைத்துள்ளார்கள்.

**15. பாராளுமன்றத்தினால் செய்ய முடியாத ஆட்சி மாற்றச் சூழல் ஒன்றை மக்கள் தமது 'அரகலய' (2022 Sri Lankan protests) போராட்டத்தின் மூலமாக நிறைவேற்றியிருக்கிறார்கள் இனப்பிரச்சினைக்கான தீர்வு, அரசியலமைப்பு மாற்றம் உள்ளிட்ட முக்கியமான வேலைகளையும் அப்படித் தான் செய்ய வேண்டும் என்பதைத் தானே பிந்திய நிகழ்ச்சிகள் காட்டுகின்றன. அப்படியென்றால் மக்கள் போராட்டத்தோடு நீங்களும் எதிர்க்கட்சிகளும் ஒன்றிணைய வேண்டியது அவசியமல்லவா?**

பதில்:- அரகலயவில் நாமும் பங்கு கொள்ள வேண்டும் என்று அந்த வேளைகளில் நான் பல தடவை சொல்லி இருக்கிறேன். ஆனால் அரசியலமைப்பு மாற்றம் இறுதியில் ஒரு சட்ட முறைமையினூடாகத் தான் செய்யப்பட வேண்டும். அது மட்டுமல்ல, மக்களோடு சேர்ந்து அறகல போன்ற போராட்டங்களில் ஈடுபடுவது ஒன்று. ஆனால் மற்றைய எதிர்க்கட்சிகளோடு இணைந்து செயல்படுவது என்பது வித்தியாசமானது. யாரோடு எதற்காக இணைவது என்பது முக்கியமானது.

**16. தமிழ்த் தேசியவாத அரசியலில் புத்துணர்வற்ற புதிய சிந்தனைகளற்ற சம்பிரதாயத் தன்மையே மேலோங்கியுள்ளது என்ற குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது. உலக மாற்றங்களையும் பிராந்திய உள்நாட்டு நிலவரங்களையும் உய்த்துணர்ந்து செயற்படக் கூடிய தன்மை போதாதென்றும் சொல்லப்படுகிறது. இதற்கான காரணங்கள் என்ன?**

பதில்:- தமிழ்த் தேசியவாத அரசியல் ஆயுதப் போராட்டமாகப் பரிணமித்த போது ஜனநாயகப் போராட்டம் எப்படி இருந்ததோ, அதே பாணியில் போருக்குப் பின்னரான அரசியலையும் நகர்த்தியதே இதற்குக் காரணம். அதே பாணியில் பயணிப்பதற்கு வலுவான காரணங்கள் இருந்த போதும் 3 தசாப்த இடைவெளியை அனுசரித்து சில அணுகுமுறை மாற்றங்களை செய்திருக்க வேண்டும்.

**17 பல்வேறு நாடுகளின் தலைவர் கள், தூதுவர்கள், பிரதானிகளோடு பேசி வரும் உங்களுடைய அனுபவத்தில் தமிழ் மக்கள் எதிர்பார்க்கின்ற போர்க் குற்ற விசாரணை, அரசியல் தீர்வு, அரசியலமைப்பு மாற்றம் போன்றவற்றுக்கான அழுத்தத்தை இலங்கை அரசுக்கு ஏற்படுத்தக் கூடிய வாய்ப்புகள் தென்படுகின்றனவா?**

பதில்:- ஒரு நியாயமான அரசியல் தீர்வுக்கு நிச்சியமாக அவர்கள் அழுத்தம் கொடுப்பதற்கு தயாராக இருப்பார்கள். அதை அடைவதற்கு போர்க்குற்ற விசாரணையை உபயோகிப்பார்கள்.

**18.பௌத்த விரிவாக்கம், சிங்கள மேலாதிக்கம் போன்றவற்றை நடைமுறையிலும் (ஆட்சிமுறையிலும்) அரசியலமைப்பில் முதன்மைப்படுத்தியும் வைத்திருப்பது பன்மைத்துவத்துக்கும் ஜனநாயகத்துக்கும் அச்சுறுத்தல் அல்லவா! இதைக் குறித்துத் தானே வெளியுலகச் சமூகத்தின் கவனத்தைத் திருப்ப வேண்டும். அப்படித் தமிழ்த்தரப்பு எங்கேனும் செயலாற்றியுள்ளதா?**

பதில்:- ஆம். எல்லாத் தருணங்களிலும் இதை உதாரணமாக எடுத்துக் காட்டியிருக்கிறோம்.

**19.இனப்பிரச்சினைத் தீர்வுக்கும் அரசியலமைப்பு மாற்றத்துக்கும் பொருளாதார நெருக்கடிக்கும் அரசியல் கட்சிகளுக்கு அப்பால் புத்திஜீவிகள், பல்கலைக்கழகத்தின் அரசியல் மற்றும் சமூக ஒருங்கிணைப்புத் துறையினரின் பரிந்துரைகள் எதையும் முன் வைப்பதில் அக்கறையற்றிருப்பது ஏன்?**

பதில்:- போர்ச் சூழலில் அப்படியானவர்கள் ஒதுங்கி இருக்கவே விரும்பினார்கள். இப்போதும் சமூக வலைத்தளங்களினூடாக செய்யப்படும் அவதூறுகள் காரணமாக பலர் இப்படியான பொது விடயங்களில் ஈடுபட விரும்புவதில்லை.

**20 இந்தியாவின் அரசியல், பொருளாதார பங்களிப்புகளைப் பற்றி உங்கள் பார்வை என்ன?**

பதில்:- இந்தியா இந்தப் பிராந்திய வல்லரசு என்பதையும் தாண்டி ஒரு உலக வல்லரசாக மாறியுள்ளது. இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி இதற்கான முக்கிய காரணம். மிக அண்டை நாடான நாம் இந்தியாவின் வளர்ச்சியை எமதாக்கிக் கொள்ள வேண்டும். அதற்கு இந்தியாவின் பங்களிப்பு எமது அரசியலிலும் கட்டாயமாக இருக்க வேண்டும். அது தமிழ் மக்களுக்கு ஒரு போதும் கேடாக அமையாது.

**21.தமிழரசுக் கட்சி 75 ஆண்டுகளைக் கடந்து பயணிக்கிறது. ஆனாலும் அது முன் வைத்த அரசியல் கோரிக்கை இன்னும் நிறைவேறவில்லை. இடையில் பல தலைவர்களின் காலம் கடந்து விட்டது. கட்சியின் செயலாளர் என்ற வகையில் தமிழ் மக்களுடைய அரசியல் உரிமைப் பிரச்சினைக்கான தீர்வும் தமிழ்ப் பிரதேசங்களின் மேம்பாடும் உங்களுடைய தலைமைத்துவத்தில் எட்டப்படுமா? அதற்கான புதிய பொறிமுறைகளை வகுத்துள்ளீர்களா?**

பதில்:- ஆம். எமது கட்சியின் இலக்கு விரைவில் எட்டப்பட வேண்டும். அது இலங்கை மக்களின் பெரும்பான்மையவரின் இணக்கத்தோடு மட்டுமே அடையப்படலாம். அதிகாரப் பகிர்வு சகல மக்களுக்கும் நன்மை பயக்கும் என்பதை அனைவரும் உணர வேண்டும். அதற்கான வேலைத்திட்டம் ஒன்றை இந்த வருடத்தில் ஆரம்பிக்க உள்ளேன். இந்த வருடத்தோடு SWRD பண்டாரநாயகா இலங்கைக்கு சமஷ்டி என்ற எண்ணக் கருவை அறிமுகம் செய்து 100 ஆண்டுகள் நிறைவாகின்றது. அதை மையமாக வைத்து இந்த வேலைத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டால், அது சிங்கள மக்கள் பலரது ஆதரவையும் பெற உதவும் என்பது எனது நம்பிக்கை.

**20.ஆட்சியிலிருக்கும் தரப்பின் ஒத்துழைப்போடு தீர்வுக்கான வேலைத் திட்டத்தை மேற் கொண்டாலும் எதிர்த் தரப்பிலுள்ள கட்சிகளின் ஆதரவின்றி இது சாத்தியமாகுமா? சமஸ்டி என்ற சொல்லை ஏற்றுக் கொள்ளக்கூடிய உளநிலை சிங்களத் தரப்பிடமுண்டா?**

பதில்:- சிங்களக் கட்சி எதுவும் சமஷ்டி என்ற சொல்லை ஏற்றுக் கொள்ள மாட்டார்கள். ஆகையால் பெயர் பலகையில் தொங்கிக் கொண்டிருக்காமல் அர்த்தமுள்ள விதத்தில் மீளப் பெறப்பட முடியாத அதிகாரப் பகிர்வு முறையை அடைய வேண்டும். அதற்கு நிச்சயமாக எதிர்த் தரப்பு கட்சிகளின் ஆதரவையும் பெற வேண்டும்.

**21. அரசியற் தீர்வில் முஸ்லிம்களின் பங்கேற்பும் ஆதரவும் வேண்டுமே?**

அதிகாரப் பகிர்வுக்குமுஸ்லிம்களின் ஆதரவுஎப்போதுமே இருந்திருக்கிறது. அலகு விடயத்தில் அவர்களுடன் ஒரு இணக்கப்பாட்டுக்கு வந்தாக வேண்டும்.

# யார் முருகன்? யார் சூரன்?

தமிழ் ரப் பாடகர் வாகீசனைத் தூக்கியது அவருடைய முருகன் பாடல். அப்பாடலில் முருகன் ஒரு கடவுளாக மட்டும் சித்தரிக்கப்படவில்லை. அவர் தமிழ் மக்களைக் காக்கும் ஒரு தலைவராகவும் வர்ணிக்கப்படுகிறார். அதாவது விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தலைவரை மறைமுகமாக அது சுட்டுகிறது என்று பொதுவான விளங்கிக் கொள்ளப்படுகிறது.

இவ்வாறு தனது முருகன் பாடலுக்குள் உட்பொதிந்துள்ள அரசியலுக்கு ஊடாகவும் கொண்டாடப்படுகின்ற ஒரு ரப் பாடகரைக் கொண்ட அதே சமூகத்தில் தான், அண்மையில் தேசிய மக்கள் சக்தியின் யாழ் மாவட்ட உறுப்பினர் ஒருவர் அனுரவை முருகனோடு ஒப்பிட்டு முகநூலில் எழுதியிருந்தார்.

அனுரவை தோழராக சகோதரராக ஏழைகளுக்கு இனியவராக செல்ஃபி நாயகனாக இன்னபிறவாக சித்திரித்த அரசியல் விசுவாசம், அதன் அடுத்த கட்டமாக அவரை கடவுளுக்கு நிகராகச் சித்தரிக்கும் ஒரு வளர்ச்சிக்கு வந்திருக்கிறது. தேசிய மக்கள் சக்தியின் தமிழ் உறுப்பினர்களில் ஒருவர் அவ்வாறு வர்ணித்துள்ளார். ஒரு சிங்களத் தலைவரை அவருடைய தமிழ் அடியார் ஒருவர் இவ்வாறு தெய்வ நிலைக்கு உயர்த்துவது என்பது இதற்கு முன் காணப்பட்டிராத ஒன்று.

சிங்களத் தலைவர்களைப் போற்றும் தமிழ்த் தொண்டர்கள் இதற்கு முன்னரும் இருந்திருக்கிறார்கள். ஆனால் அப்பொழுது டிஜிட்டல் புரோமோஷன் என்பது இருக்கவில்லை. தவிர யுத்த காலங்களில் இனமுரண்பாடு கூர்மையாக இருந்தபோது சிங்களத் தலைவர்களைப் பகிரங்கமாகப் போற்ற தமிழர்கள் துணியவில்லை. இப்பொழுது ஆயுத மோதல்கள் இல்லாத ஓர் அரசியல் சூழலில், அனுர அரைக்காற் சட்டையோடு நடக்கிறார். பாதுகாப்பு வேலிகளைத் தாண்டி வந்து செல்பி எடுக்கிறார். தமிழ் மக்களில் ஒரு பகுதியினர் கைகளை நீட்டி அவரை அழைக்கிறார்கள். மூதாட்டிகளும் சிறுவர்களும் நெருங்கிச் சென்று அணைக்கிறார்கள். இந்தக் காட்சிகளை அரசாங்கத்தின் டிஜிட்டல் புரோமோஷன் அணி கவர்ச்சியான காணொளிகளாக சந்தையில் விற்கிறது.

அனுர எங்கே நாயகனாகிறார்? அல்லது நாயகன் ஆக்கப்படுகிறார்?

அவருடைய எளிமை உடல் மொழி போன்றன அவரை விளம்பரப்படுத்த வசதியாக உள்ளன. இதற்கு முன்னிருந்த சிங்களத் தலைவர்கள் பாதுகாப்பு வேலிகளைத் தாண்டி வர முடியாதவர்கள். தமிழ் மக்கள் அவர்களை நெருங்கி அணைக்க முயற்சிக்கவில்லை மட்டுமல்ல, அவ்வாறு அணைக்க வரும் தமிழர் ஒரு மனிதக் குண்டாக இருக்கலாம் என்று அச்சப்படும் அரசியல் சூழல் இரு தசாப்தங்களாக இருந்தது.

அனுர அந்தப் பயமின்றி தமிழ் மக்களை நெருங்கக்கூடிய அரசியல் சூழல் இப்பொழுது உண்டு. தவிர அவருடைய கட்சிக்காரர்கள் தமிழ் மக்களை அவரை நோக்கிக் கொண்டு செல்கிறார்கள். அரசாங்கத்தின் டிஜிட்டல் புரோமோஷன் அணி அதைக் காணொளிகள் ஆக்கி, வைரல் ஆக்குகிறது. இது ஒன்றுடன் ஒன்று தொடர்புடைய தெளிவான ஒரு பிரச்சார நிகழ்ச்சி நிரல். பலாலியில் அவர் அரைக்காற் சட்டையோடு நடந்த போதும் வடமராட்சியில் ஒரு வயோதிபப் பெண் அவரை அணைத்த போதும், பாதுகாப்பு வேலிகளைத் தாண்டி தமிழ் மக்கள் தங்கள் பிள்ளைகளை அவரிடம் கொடுத்து செல்ஃபி எடுக்கும் போதும், அரசாங்கத்தின் டிஜிட்டல் புரமோஷன் அணி அதைக் கவர்ச்சியான பிரச்சாரப் பண்டமாக மாற்றுகிறது. இது திட்டமிட்டுச் செய்யப்படுகிறது. அதாவது தமிழ் மக்கள் மத்தியில் அனுரவை ஒரு நாயகனாகக் கட்டியெழுப்புவது என்பது திட்டமிட்டுச் செய்யப்படுகின்ற ஒரு பிரச்சார உத்தி. அது தான் உண்மை. ஆனால் அவ்வாறு




அனுரவை ஒரு நாயகனாகக் கட்டியெழுப்பும் அளவுக்கு தமிழ்த்தேசியப் பரப்பில் ஒரு வெற்றிடம் நிலவுகிறது என்பதும் அதே அளவு உண்மை.

அனுரவைப் போல தமிழ்ப் படப் பாடல்களின் பின்னணியில் நாயக நடை போட தமிழ் மக்கள் மத்தியில் தலைவர்கள் அல்லது செயல்பாட்டாளர்கள் இல்லையா? அல்லது இருப்பவர்களைக் கொண்டாட இந்தச் சமூகம் தயாரில்லையா? இப்பொழுது அரங்கில் காணப்படும் தமிழ் ஆளுமைகளில் யாரையுமே அவ்வாறு கொண்டாட முடியாத ஒரு நிலைமை ஏன் தோன்றியது?

தமிழ்த்தேசிய அரசியலானது ஒருவர் மற்றவரை வில்லன் ஆக்கிக் கொண்டிருக்க துரோகி ஆக்கிக் கொண்டிருக்க யாருமே கதாநாயகராக கதாநாயகியாக மினுங்க முடியவில்லை.

ஒருவர் மற்றவரை ஏற்றுக் கொள்ளாத, சந்தேகிக்கின்ற, குற்றச்சாட்டுகின்ற,ஓர் அரசியல் சூழலில் யாரும் யாரையும் அங்கீகரிக்கத் தயாரில்லை. அரசியல் தலைவர்களாக இருந்தாலும் சரி, சமூகத் தலைவர்களாக இருந்தாலும் சரி, சமயத் தலைவர்களாக இருந்தாலும் சரி, யாரும் புகழோடு இருக்க முடியாது. சமூகத்தில் யாரெல்லாம் துருத்திக் கொண்டு மினுங்கிக் கொண்டு மேலெழுகிறார்களோ, அவர்கள் எல்லோரின் மீதும் விமர்சனங்கள் அவதூறுகள்.

கடந்த 16 ஆண்டுகளில் தமிழ் மக்கள் மத்தியில் எந்த ஓர் உள்ளூர் தலைவரும் சரி மாவட்ட மட்டத் தலைவரும் சரி தேசியமட்டத் தலைவரும் சரி தொடர்ச்சியாக ஜனவசியத்தைத் தக்க வைத்துக் கொள்ள முடியாமல் போனது ஏன்?

தமிழ்மக்கள் யார் சொன்னால் கேட்பார்கள்? யாரை வாழும் முன்னுதாரணமாகப் பார்க்கிறார்கள்? யாருமே வாழும் முன்னுதாரணமாக இல்லாத ஒரு சமூகமா இது? தியாகிகளைப் போற்றும் ஒரு சமூகத்தில் உயிருள்ள வாழும் முன்மாதிரிகள் ஒருவரும் இல்லையா? ஒருவர் மற்றவரை சந்தேகிக்கின்ற அல்லது அங்கீகரிக்காத ஒரு நிலைமை என்பது ஒரு சமூகத்தின் கூட்டுணர்வை கூட்டுச் செயற்பாட்டைப் பாதிக்கும். இது கட்சிகளில் தொடங்கி,சமூக நிறுவனங்கள் ஆலய அறக் கட்டளைகள், திருச்சபைகள்,பழையமாணவ சங்கங்கள் என்றிவ்வாறாக முழுச்சமூகத்துக்குமான ஒரு பொது வியாதியாக மாறிவருகிறது.

சமூக வலைத்தளங்களுக்கு முற்பட்ட காலத்தில் மொட்டைக் கடிதம் இருந்தது. மல முட்டி இருந்தது. இப்பொழுது இரண்டும் இணைந்து பேக் ஐடிகளாக, முகம் காட்டா முகநூல் கணக்குகளாக மாறி விட்டன. மல முட்டி என்பது, தமிழரசுக் கட்சியும் தமிழ் காங்கிரசும் இரு துருவங்களாக இருந்த காலகட்டத்தில் இருந்த ஒரு தோற்றப்பாடு. தமது கட்சி எதிரியைத் தாக்குவதற்கு, அசிங்கப்படுத்துவதற்கு மண்பானையில் மலத்தைச் சேகரித்துக் கொண்டு வந்து அரசியல் எதிரியின் வீட்டின் முற்றத்தில் அல்லது வாசலில் பானையை உடைத்து விடுவார்கள்.

ஆயுதப் போராட்டத்திற்கு முன்னர் காணப்பட்ட இந்த மல முட்டி அரசியல் மொட்டைக் கடிதத்தோடு இணைந்து முழுச் சமூகமும் நாறும் ஒரு நிலைமை வளர்ந்து வருகிறது. ஒரே கட்சிக்குள்ளேயே இரண்டு அணிகள் ஒன்று மற்றதன் மீது மலத்தை வாரி வீசும்போது இரண்டுமே நாறுகின்றன. அண்மையில் மட்டக்களப்பில் சுமந்திரன் அவ்வாறான முகங்காட்டா முகநூல் பக்கங்களைக் குறித்துப் பேசியிருக்கிறார்.

முகங்காட்டா முகநூல் பக்கங்கள், தொண்டர்களை ஏவி வழக்குத் தொடுக்கும் தலைவர்கள், தனது கட்சிக்காரனை அல்லது தன்னை விமர்சிப்பவரை மடக்குவதற்கு வழக்குப் போடுவேன் என்று மிரட்டும் அரசியல்வாதிகள், தன் கட்சிக்காரனுக்கு எதிராக தென்னிலங்கை மையக் கட்சி ஒன்றின் சிங்கள நாடாளுமன்ற உறுப்பினரை நாடாளுமன்றத்தில் பேச வைக்கும் தமிழ் அரசியல்வாதிகள் சமூகத்தில் யாராவது மினுங்கிக் கொண்டு மேலெழுந்தால் அவர்களைக் காலால் மிதித்துச் சப்பையாக்கி விடக் காத்திருக்கும் சமூக வலைத்தள நீதிபதிகள் என்றிவ்வாறாக தமிழ்ச்சமூகம் அதன் மாண்பை இழந்து கொண்டு போகிறது.

ஒருகாலம் திட்டமிட்டு வெறுப்பர்களை உற்பத்தி செய்த வெறுப்புப் பிரச்சாரத்தைக் கட்டவிழ்த்து விட்ட,

கட்டுரையாளர்:
யாழ்ப்பாணத்தில் இருந்து
– நிலாந்தன் –



தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் நடவடிக்கைகளில் இப்பொழுது மாற்றம் தெரிகிறது. ஆனால் உள்ளதில் பெரிய கட்சியாகிய தமிழரசுக் கட்சியோ நாறிக் கொண்டிருக்கிறது.

சிங்கள நாடாளுமன்ற உறுப்பினராகிய தயாசிறீயை, சிறீதரனுக்கு எதிராக நாடாளுமன்றத்தில் பேச வைத்தது யார் என்பது எல்லாருக்கும் தெரியும். தனது உட்கட்சி முரண்பாட்டைக் கையாள்வதற்கு இவ்வாறு தென்னிலங்கை மையக் கட்சி ஒன்றின் சிங்கள நாடாளுமன்ற உறுப்பினரைக் கருவியாகக் கையாள்வது என்பது தமிழ்த் தேசிய அரசியல் எங்கே வந்து நிற்கிறது என்பதைக் காட்டுகிறது. அதேசமயம் சிறீதரன் அரசியலமைப்பு பேரவையில் படைப் பிரதானிகளுக்கு ஆதரவாக வாக்களித்திருக்கிறார் என்ற விடயம் அவரைப் பொது வெளியில் அம்பலப்படுத்த, அவமானப்படுத்தத் தேவையான வாய்ப்புகளை வழங்குகிறது.

கடந்த இரண்டு ஆண்டுகளாக தமிழரசுக் கட்சிக்குள் தீர்க்கப்படாத உட்கட்சி முரண்பாடு இடக்கிடை நாடாளுமன்றத்திலும் அடிக்கடி ஊடக ஒலிவாங்கிகளுக்கு முன்னரும் அசிங்கமான விதங்களில் வெளிப்படுகிறது. கட்சியின் கூட்டுணர்வை, சகோதரத்துவத்தைக் கவனத்தில் எடுத்து உட்கட்சிப் பிரச்சனையை உட்க்கட்சிக்குள்ளேயே தீர்க்க முடியாத அளவுக்கு கட்சி பலவீனமாக உள்ளது. தமிழரசுக் கட்சிக்குள் இப்பொழுது பலமான தலைவர்கள் இல்லை என்பதுதான் கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு மேலான யதார்த்தம். சுமந்திரனாலும் கட்சியைத் தனது பூரண கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முடியவில்லை. சிறீதரனாலும் முடியவில்லை.

யாழ்ப்பாணத் தேர்தல் தொகுதியில் தனக்கென்று நிலையான வாக்கு வங்கியைக் கொண்டிருப்பவர் சிறீதரன். கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் யாழ்குடா நாட்டுக்குள் தமிழரசுக் கட்சிக்கு ஆசனம் கிடைக்கவில்லை. தேர்தல் தொகுதி என்ற அடிப்படையில் கிளிநொச்சியில் சிறீதரன் பெற்ற வெற்றியும் இல்லையென்றால் தமிழரசுக் கட்சிக்கு யாழ்ப்பாணத்தில் ஆசனமே இல்லை.


எல்லாவிதமான குற்றச்சாட்டுகளுக்கும் அப்பால் கிளிநொச்சியில் இப்பொழுதும் சிறீதரனுக்கு நிலையான வாக்கு வங்கி உண்டு. யாழ்குடா நாட்டில் மட்டுமல்ல, தமிழரசு கட்சிக்குள் நிலையான வாக்கு வங்கியைக் கொண்ட ஒருவர் அவர். தமிழரசுக் கட்சிக்குள் அவரைத் தோற்கடித்தாலும், கிளிநொச்சியில் அவரைத் தோற்கடிக்கலாமா என்பதனை இனிமேல் தான் பரிசோதிக்க வேண்டும்.

ஆனால் சிறீதரனை அவமானப்படுத்தி அவருடைய மாவட்டத்துக்குள்ளேயே முடக்க இன்றுவரை சுமந்திரனால் முடியவில்லை. கடந்த இரண்டு ஆண்டுகளிலும் கட்சிக்குள் சுமந்திரன் தன்னுடைய நிலையை ஒப்பீட்டளவில் பலப்படுத்தி வந்தாலும் வாக்காளர்கள் மத்தியில் அவர் பலமாக உள்ளாரா என்பதை இனிமேல் தான் பரிசோதிக்க வேண்டும்.

இந்த முரண்பாடுகளின் மத்தியிலும் தமிழரசுக் கட்சி பலமாக உள்ளது என்ற ஒரு தோற்றம் வெளியே தெரிகிறது. ஏன் தெரியுமா? அது வெல்லக் கூடிய கட்சி (22ம் பக்கம் பார்க்க)

# இலங்கை தமிழரசுக்கட்சியின் சிதைவு:- நன்மை பெறப் போவது யார்?

கட்டுரையாளர்:
யாழ்ப்பாணத்தில் இருந்து
- க. அருந்தவபாலன் -



சுதந்திர இலங்கையில் தமிழ் மக்களுக்கான அரசியலில் அன்று தொடக்கம் இன்று வரையும் பிரதான பங்கினை வகித்து வரும் ஒரு கட்சியெனில் அது தமிழரசுக்கட்சியாகத் தான் இருக்க முடியும். அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸிலிருந்து பிரிந்து 1948டிசம்பர் 18ஆம் திகதி எஸ்.ஜே.வி. செல்வநாயகம், வன்னியசிங்கம், நாகநாதன் போன்ற தலைவர்களால் முறைப்படி உருவாக்கப்பட்ட இக்கட்சி, அவர்களைப் போன்ற பல தலைவர்களின் வியர்வையும் இரத்தத்தமும் பாய்ச்சப்பட்டு தமிழர் தாயகமெங்கும்



கிளைவிட்டு வளர்க்கப்பட்ட ஓர் அரசியல் கட்சியாகும். இது 1972 இல் தமிழர் ஐக்கிய முன்னணி என உருவாக்கப்பட்டு பின்னர் தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணி (TULF) எனப்பெயர் மாற்றப்பட்ட அரசியல் கூட்டினுள் சங்கமித்து உறங்கு நிலையிலிருந்தது. பின்னர் 2001 இல் உருவாக்கப்பட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் TULF என்ற வடிவிலேயே பங்காளியாகி 2004 ஆம் ஆண்டு வரை இருந்து வந்தது. 2004இல் விடுதலைப் புலிகளுக்கும் TULF இன் தலைவர் ஆனந்தசங்கரிக்கும் இடையில் ஏற்பட்ட முரண்பாட்டின் காரணமாக தமிழத் தேசியக் கூட்டமைப்பின் தேர்தல் சின்னமாக உதயசூரியனுக்குப் பதிலாக வீடு முன்னிலைப்படுத்தப்பட்டதால் TULF இன் இடத்தை தமிழரசுக்கட்சி பிடித்துக் கொண்டது. அவ்வாறு தமிழசுக்கட்சியின் சின்மான வீடு பயன்படுத்தப்பட்டாலும் கூட யுத்தம் முடிவடையும் காலம் வரையிலும் கூட்டமைப்பின் ஏனைய பங்காளிகளுக்கு நிகராகவே அக்கட்சியும் இருந்து வந்தது.

ஆனால் பின்னர் 2010 தேர்தலுடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினது காட்சிகளும் அணுகுமுறைகளும் வேகமாக மாறத் தொடங்கின. முக்கிய தலைவர்கள் சிலரால் கூட்டுகளைச் சிதைத்துத் தமது நோக்கங்களுக்கு இசைந்தவகையில் தமிழரசுக்கட்சியை தனித்துப் பலப்படுத்தும் காரியங்கள் அரங்கேற்றப்படத் தொடங்கின. பங்காளிக் கட்சிகள் ஒவ்வொன்றாக வெளியேறல், பங்காளிக் கட்சிகளினூடாக வாய்ப்புப் பெற்றுத் தேர்தலில் வென்றவர்களை தமிழரசுக் கட்சிக்குள் உள்வாங்குதல், தனது கட்சியின் மூத்த மற்றும் நீண்டகால உறுப்பினர்களை கட்சியிலிருந்து அகற்றுதல், PLOTE இனை உள்வாங்குதல் என்ற மாற்றங்களின் வரிசையில் இறுதியாக 2022 இல் உள்ளூராட்சி மன்றங்களுக்கான வேட்பு மனுக்களுடன் எஞ்சியிருந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் முற்றாகச் சிதைந்து தமிழரசுக்கட்சி தனித்துச் செயற்படத் தொடங்கியது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அங்கீகரிக்கப்பட்ட ஒரு அரசியல் கட்சியாகப் பதிவு செய்யப்படாதிருந்தமை, சம்பந்தனிடம் கூட்டமைப்பின் தலைமை வழங்கப்பட்டிருந்தமை, தமிழரசுக்கட்சியின் சின்னமான வீடு கூட்டமைப்பின் தேர்தல் சின்னமாகத் தொடர்ந்திருந்தமை, தாயகமெங்கும் அக்கட்சியின் பழைய வேர்கள் உயிருடன் இருந்தமை, தனித்தரீதியில் ஏனைய கட்சிகளுக்கான மக்கள் ஆதரவு கீழ்மட்டத்தில் இருந்தமை போன்றன 2010க்குப் பின்னரான காலத்தில் தமிழரசுக்கட்சி தனித்துச் செல்வதைத் தூண்டிய பிரதான காரணிகளாக இருந்தன.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புச் சிதைக்கப்பட்டமை மற்றும் தமிழரசுக்கட்சி தனியாகச் சென்றமை இரண்டினாலும் தமிழ் மக்களுக்கு மட்டுமன்றி தமிழரசுக்கட்சிக்கும் எந்த நன்மையையும் அளிக்கவில்லை. பதிலாகத் தமிழ் மக்களுக்கும் அவர்களின் உயிர் மூச்சான தமிழ்த் தேசியத்துக்கும் பலத்த சேதத்தையே அது விளைவித்தது. அரசியலில் கட்சிகள் பிரிவதும் கூட்டுச ்சேர்வதும் இயல்பானவை தான். ஆனால் பிரிவு அல்லது கூட்டு எதுவாயினும் அது முன்னரை விட உயர்வைத் தந்திருக்க வேண்டும். இதற்குச் சிறந்த எடுத்துக்காட்டு காங்கிரஸில் இருந்து வெளியேறி உருவாக்கப்பட்ட தமிழரசுக் கட்சியும், பின்னர் உருவாக்கப்பட்ட தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணி (TULF) மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு போன்றன. மாறாக அவ்வாறான முடிவுகள் பின்னடைவுகளைத் தந்தால் எடுக்கப்பட்ட முடிவு தவறானது என்பதை உணர்த்தும். தமிழ்த் தேசியக் கூட்டமைப்புச் சிதைக்கப்பட்டமை அத்தகைய ஓர் எதிர்விளைவையே தோற்றுவித்து வருகிறது என்பது சமகால அரசியல் காட்சிகள். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சிதைவுக்குப் பிரதான காரணியாக இருந்த தமிழரசுக்கட்சி தொடர்ந்து தன்னைப் பலப்படுத்தி தமிழ்த் தேசியத்தைக் காக்கும் அரசியல் பாதையில் சென்றிருந்தால் தமிழ் மக்களின் அரசியல் பலம் மட்டுமன்றி அக்கட்சியின் பலமும் பெருமளவுக்கு நிலைத்திருந்திருக்கும். கூட்டமைப்பின் சிதைவு கூட ஒரு பேசுபொருளாக இருந்திருக்காது. ஆனால் அக்கட்சி அவ்வாறு செயற்படாததன் காரணமாக மட்டுமன்றி வேறு பல காரணங்களாலும் இன்று தன்னையே காக்க முடியாத ஓர் இக்கட்டான நிலைக்கு தள்ளப்பட்டுள்ளதையும் காணமுடிகிறது.

ஒரு புறத்தில் தமிழரசுக்கட்சிக்கான மக்கள் ஆதரவுத்தளம் படிப்படியாக குறைந்து செல்லும் அதேவேளை அக்கட்சி வெளித் தெரியக் கூடிய வகையில் இரண்டாகப் பிளவுபட்டுள்ளதையும் அப்பிளவு நாளுக்காள் விரிவடைந்து வருவதையும் காண முடிகின்றது. இது அக்கட்சிக்கு மட்டுமன்றி தமிழ் மக்களுக்கும் மிக மோசமான ஒரு விளைவையே தோற்றுவித்து வருகிறது. ஏலவே சுட்டிக்காட்டியது போல அக்கட்சிக்கான ஆதரவுத்தளம் படிப்படியாகச் சுருங்கி வந்தாலும ்கூட இன்றும் தமிழ்மக்களின் அதிகளவு ஆதரவு பெற்ற மற்றும் தாயகம் முழுவதும் வேரூன்றி நிற்கும் ஒரே கட்சி அதுவாகும்.

அவ்வாறான ஒரு கட்சியின் வீழ்ச்சி தமிழ் மக்களுக்கு எதிர்காலத்தில் இன்னும் மோசமான விளைவையே தோற்றுவிக்கும். அதேவேளை இவ்வீழ்ச்சி வேறு சில தரப்புகளுக்கு இனிப்பாக அமையக்கூடும். தமிழ்த் தேசியக் கட்சியொன்றின் வீழ்ச்சி இன்னொரு தமிழ்த்தேசியக் கட்சியால் பதிலீடு செய்யப்பட முடியுமானால் கவலைப்படத் தேவையில்லை. மாறாக அவ்வீழ்ச்சி தமிழ்த்தேசியத்துக்கு எதிரான அல்லது ஆதரவற்ற கட்சிகளைகளையும் நபர்களையும் பலப்படுத்துமானால் அதுபற்றி தமிழ் மக்கள் அதிகளவு கரிசனை கொள்ளவேண்டியது அவசியமாகும்.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் இன்றைய நிலைக்கு யார் காரணம்? அக்கட்சியின் பிரதான தலைவர்கள் எல்லோரும் அதற்குப் பொறுப்புக் கூற வேண்டியவர்களே. குற்றம் செய்தவர்கள் மட்டுமல்ல அக்குற்றச் செயலுக்கு உடந்தையாயிருந்தவர்களும் குற்றவாளிகளே. அந்தவகையில் கட்சியைத் தவறான பாதைக்கு இட்டுச்சென்றவர்கள் மட்டுமன்றி அதற்கு உடந்தையாக இருந்தவர்கள் மற்றும் அதனைக் கண்டும் காணாதவர்களாக இருந்தவர்கள் அனைவருமே பொறுப்பாளிகள் தான். ஓரிருவர் மீது முழுக்குற்றத்தையும் சுமத்தி விட்டு மற்றவர்கள் நிரபராதிகள் ஆகமுடியாது. அந்த வகையில் மறைந்த தலைவர்களான சம்பந்தன், மாவை சேனாதிராசா உட்பட இன்றைய தலைவர்கள் அனைவருமே கட்சியின் இன்றைய நிலைக்குப் பொறுப்பேற்க வேண்டும்.

இந்த நூற்றாண்டின் இன்று வரையான தமிழ் மக்களின் தேர்தல் அரசியல் என்பது விடுதலைப்புலிகள் சார்ந்த ஒரு அரசியல் தான். அவர்கள் இருந்தபோது நேரடியாக அதனை வழிநடத்தினார்கள். அதன் பின்னர் அவர்களால் மக்களிடையே உருவாக்கப்பட்ட தமிழ்த் தேசிய உணர்வினால், அவர்களால் காட்டப்பட்ட அரசியல் கட்சி என்ற வகையிலும் கூட்டமைப்பும் தமிழரசுக்கட்சியும் அவற்றின் பயனை அனுபவித்தன. ஆனால் அக்கட்சிகள் மக்களிடையே கட்டி வளர்க்கப்பட்ட அந்த உணர்வில் குளிர்காய விரும்பினவேயன்றி அதனைத் தொடர்ந்து தக்க வைப்பதிலோ அன்றி வளர்ப்பதிலோ ஆர்வம் காட்டவில்லை.

அது கட்சிக்கு மட்டுமல்ல இனத்தின் அரசியலுக்கும் அவசியம் என்பதை உணரத் தவறிவிட்டனர். பதிலாக தமிழரசுக்கட்சியின் முக்கிய தலைவர்கள் சிலர் அதற்கு எதிரான நிலைப்பாட்டை எடுக்க வேறு சிலர் அதனைப் பேணுவது போல நடிக்கத் தொடங்கினர். மக்களைப் பற்றிச் சிந்திக்காத, மக்களிடம் செல்லாத, மக்களை வழிப்படுத்தாத எந்த அரசியல்கட்சியும் நீண்டகாலத்துக்குத் தாக்குப் பிடித்து நிற்காது. தேர்தலுக்காக மட்டும் மக்களை நாடுவதும் தேசியம் பேசுவதும் அதன்பின்னர் அனைத்தையும் மறந்து விடுவதும் மக்களை அந்நியப்படுத்தவே வழிவகுக்கும். மக்களை மையப்படுத்திய அரசியலே உட்கட்சிப் பிரச்சினைகளை மட்டுமன்றி ஏனைய கட்சிகளுக்கிடையிலான முரண்பாடுகளையும் குறைக்கும். அதுவும் ஒருபுறத்தில் கடந்த காலத்தையும் அது தந்த உணர்வுகளையும் படிப்படியாக இழந்து வரும் சமூகம், மறுபுறத்தில் கடந்தகாலம் பற்றிய அறிவையும் உணர்வையும் அறிந்திராத சந்ததியின் வளர்ச்சி. இந்த இரண்டுக்கும் ஈடு கொடுக்கக் கூடிய அரசியல் கட்சிகளாலேயே நிலைத்து நிற்கமுடியும்.

தமிழரசுக்கட்சி இவ்வாறு மக்களிடமிருந்து அந்நியப்படுவதால் அதிக நன்மையடையப் போவது சிங்களத் தேசியக் கட்சிகளும் அரச்சுனா போன்ற அரசியல் கோமாளிகளும்தான். ஏற்கனவே இந்தக் போக்குத் தொழிற்படத் தொடங்கி விட்டது. அது இன்னும் வேகம் பெறக்கூடும். தமிழரசுக் கட்சியின் வாக்கு வங்கியை கவரும் நிலையில் ஏனைய தமிழ்க் கட்சிகள் இன்றில்லை என்பதே உண்மை. இதனால் அக்கட்சிகளின் வாக்குவங்கியில் சிறிய அதிகரிப்பு மட்டுமே சாத்தியம். இதன் மூலம் ஆளும் கட்சிகளும் அவற்றிற்கு ஆதரவான தமிழ்க்கட்சிளும், உதிரிகளும் அதிகம் நன்மையடைவதற்கான வாய்ப்புகளே எதிர் காலத்தில் அதிகரிக்கும். சிலவேளைகளில் தமிழரசுக்கட்சியின் ஒரு தரப்புக் கூட ஆளுங்கட்சிகளுக்கு ஆதரவான நிலைப்பாட்டை எதிர் காலத்தில் எடுக்கக்கூடும். இந்நிலைமை தமிழ் மக்களின் எதிர்கால அரசியலில் மட்டுமன்றி அவர்களின் உரிமைகளிலும் மிகமோசமான விளைவுகளைத் தோற்றுவிக்கக் கூடும்.

எனவே தமிழரசுக் கட்சியின் சிதைவைத் தடுத்து அதை தமிழ் மக்களுக்கான ஓர் அரசியல் இயக்கமாக மாற்றவேண்டிய கடமை தமிழ் மக்களுக்கு உள்ளது. இது தொடர்பான ஆதங்கம் அக்கட்சியின் உண்மையான விசுவாசிகளிடம் மட்டுமன்றி ஏனைய தமிழ்த் தேசியக் கட்சிகளிடமும் அதிகரித்து வருவதைக் காணமுடி கிறது. இந்த ஆதங்கத்தின் ஒரு வெளிப்பாடாகத்தான் மறவன்புலவு சச்சி ஐயாவின் கருத்துக்களைப் பார்க்க வேண்டும். அவரது சமயஞ் சார்ந்த அணுகுமுறையைத் தவிர்த்து விட்டுப் பாரத்தால் அக்கட்சியைக் காப்பாற்ற வேண்டுமென்ற பலரது எண்ணத்தை அது பிரதிபலிக்கிறது.

கிறிஸ்தவர் ஒருவரால் உருவாக்கப்பட்டு வழிநடத்தப்பட்ட ஒருகட்சியில் நீண்டகாலமாக முக்கிய செயற்பாட்டாளராக இருந்த ஒருவர் இன்று இவ்வாறு சொல்வதும் அதற்கு எதிர் வினையாற்றாது சமூகம் கடந்து செல்வதும் தமிழரசுக் கட்சியின் இன்றைய நிலையைத் தெளிவாகக் காட்டி நிற்கிறது. இது ஆரோக்கியமானது அல்ல. அக்கட்சியின் உண்மையான விசுவாசிகள் கட்டி வளர்த்த மூத்த உறுப்பினர்கள் பலர்

(20ம் பக்கம் பார்க்க)

# தமிழக தேர்தல் களம்:- சில கருத்துக்கள்!



சென்னைப் புத்தகக் காட்சிக்குச் சென்று திரும்பியவுடன் இலங்கையில் சந்தித்த ஊடகத்துறை நண்பர்கள் கேட்ட முதற்கேள்வி, தமிழ் நாட்டின் அரசியல் நிலவரம் எப்படி உள்ளது? வரப் போகின்ற சட்டமன்றத் தேர்தலில் யாருக்கு அல்லது எந்தத் தரப்புக்கு வெற்றி வாய்ப்பு அதிகம்? என்பதே.

தமிழ்நாட்டுக்குச் சென்று வந்த ஒருவருடன் பேசுவது, அங்குள்ள கள நிலவரத்தை அறிவதற்குக் கூடுதலாக உதவக் கூடும் என்பது அவர்களுடைய எதிர்பார்ப்பு.

நான் சென்றது புத்தகக் காட்சிக்காக. அங்கே என்னுடைய நான்கு நூல்களின் வெளியீடு. சக எழுத்தாளர்களின் நூல் வெளியீடுகளிலும் உரையாடல் அரங்குகளிலும் கலந்து கொண்டேன். இவை முடிய இலக்கிய, பதிப்புத் துறையைச் சேர்ந்த சில நண்பர்களைச் சந்தித்தேன். அடுத்துச் செய்தது, வீட்டுக்கு (இலங்கைக்கு) எடுத்து வருவதற்கு சில பொருட்களை வாங்குவதற்காக நண்பர்களோடு கடைக்குச் சென்றது. இந்தச் சிறிய நிகழ்ச்சி நிரலில் எந்த அரசியல் சந்திப்புகளும் இல்லை. முந்திய சென்னைப் பயணங்களில் தவறாமல், சில அரசியல் தலைவர்களையும் அரசியற் செயற்பாட்டாளர்களையும் ஊடகர்களையும் சந்தித்துப் பேசுதுண்டு. இந்தத் தடவை அதற்கான அவகாசம் இருக்கவில்லை. மட்டுமல்ல, அதற்கான உந்துதலும் இல்லை. காரணங்கள் —

1.தேர்தலுக்கான ஆயத்தப் பணிகளில் அரசியற்தலைவர்கள் தீவிரமாக இருந்தனர். அதற்கிடையில் எமக்கு நேரம் ஒதுக்கிக்கொள்ளக் கேட்பது அவ்வளவு பொருத்தமானதல்ல.

2.ஈழத்திலே நம்முடைய அரசியலையே ஈடேற்ற முடியாமல், திணறிக் கொண்டிருக்கிறோம். ஈழப்போராட்டம் சிதைந்து தெருவிலே நாறிக் கிடக்கிறது. அறுபது ஆண்டுகாலப் போராட்டத்தில் எதையுமே பெறாதிருப்பது மட்டுமல்ல, அதிலிருந்து எந்தப்பாடத்தையும் படிக்க விருப்பமின்றிய மக்கள் கூட்டமாக இருக்கிறோம். அதாவது நம்முடைய அரசியலையே கொண்டு நடத்த முடியவில்லை. இந்த நிலையில் தமிழகத்தின் அரசியல் தேர்தல் பற்றி நாம் என்ன அவர்களுக்குச் சொல்ல முடியும்?

3. தேர்தல் வெற்றி தோல்விகள், தேர்தற் கூட்டுகள் பற்றிய செய்திகளும் பேச்சுகளுமே சென்னைத் தெருக்களையும் ஊடகங்களையும் நிறைத்திருந்தன. ஓட்டோ ஓட்டுநர்கள், ஊபர் சாரதிகள், கடைக்காரர்கள், கடற்கரையில் காற்று வாங்கிக் களிப்பவர்கள் தொடக்கம் சந்திப்போரில் பெரும்பாலானோரும் தேர்தல் நிலவரத்தைப் பற்றிய தங்கள் அபிப்பிராயங்களையும் விருப்பங்களையும் வெளிப்படுத்திக் கொண்டேயிருந்தனர். அதை அறிவதில் இந்தப் பயணத்தில் ஆர்வம் காட்டினேன்.

இது தான் என்னுடைய பயணத்தில் நடந்தவைகளும் நான் கவனித்தவையும் என்றேன். அவர்கள் விடுவதாயில்லை. ஊடகத்துறையினரின் குணமே இது தான். தாம் எதிர்பார்க்கின்ற விடயத்தில் ஒரு சிறு துரும்பாவது தமக்குக் கிடைத்து விடாதா? என்ற தீவிரத்தில் விடாப்பிடியாக முயன்று கொண்டேயிருப்பார்கள்.

அரசியற் தலைவர்களையும் கட்சிகளின் பிரமுகர்களையும் விட மக்கள் தான் முக்கியமானவர்கள். அதுவும் தேர்தல் காலத்தில் அவர்களுடைய அபிப்பிராயங்களுக்கே பெறுமதி அதிகம். அவர்கள்தான் வாக்களிப்பவர்கள். மாற்றங்களை நிகழ்த்தக் கூடிய வல்லமை உடையவர்கள். ஆகவே அங்கே மக்கள் என்ன சொல்கிறார்கள்? அதைச் சொல்லுங்கள் என்று பிடித்துக் கொண்டார்கள்.

என்னுடைய அவதானிப்பைச் சொன்னேன். சென்னையில் எழுத்தாளர்களில் பெரும்பாலானோர் தி.மு.கவின் ஆட்சி தொடர வேண்டும் என்றே விரும்புகிறார்கள். தமிழ்நாட்டின் வளர்ச்சியிலும் சாதிய ஒடுக்குமுறையை மட்டுப்படுத்தியதிலும் மொழி, பண்பாட்டு அடையாளங்களைக் காப்பாற்றி, வளர்க்கும் முயற்சிகளிலும் தி.மு.க அளித்த வரலாற்றுப் பங்களிப்புகள் முக்கியமானவை. அண்ணாத்துரை, கருணாநிதி எனத் தொடர்ந்த உறுதியான இந்த வழிமுறையை இப்பொழுது ஸ்டாலின் தொடருகிறார். இதனை மேலும் வளர்த்து முன்னெடுக்க வேண்டிய தேவையும் பொறுப்பும் உள்ளது. என்பதால் நாம் மிக நிதானமாக இந்தத் தேர்தலையும் கையாள வேண்டும்.

தி.மு.க இல்லை என்றால், தமிழ் நாட்டில் பா.ஜ.கவின் கைதான் மேலோங்கும். அது மாநிலத்தின் சுயாதீனத்தையே அடியோடு அளித்து விடும். இப்போதே மத்திய அரசின் ஏவலாளைப் போல ஆளுநர் செயற்படுகிறார். தி.மு. க இல்லை என்றால் மாநிலத்தின் அதிகாரம் மத்திய அரசிடமே குவியும். பா.ஜ.க வின் வேலையே அது தான். அதற்கு நாம் இடமளிக்க முடியாது... என்றவாறு சொல்கிறார்கள்.

இன்னொரு நிலையில் இவர்களிற் பலருக்கும் தி.மு.கவில் தொடருக்கின்ற குடும்ப ஆட்சி உவப்பானதாக இல்லை. கருணாநிதிக்குப் பிறகு ஸ்டாலினை ஏற்றுக் கொள்கின்றவர்கள், உதயநிதியின் இடையீட்டையும் ஆதிக்கத்தையும் விரும்பவே இல்லை. பலரும் இதை வெளிப்படையாகவே சொல்கிறார்கள். தி.மு.க என்ற பகுத்தறிவுக் கட்சியில் இப்படிக் குடும்ப ஆட்சிக் கட்டமைப்புத் தொடருவது முரண். பிரபுத்துவ அம்சங்கள் தி.மு.கவுக்குள் வளர்ச்சியடைந்து வருகிறது. இதற்கு வழிகோலியவர் கருணாநிதி. இது தி.மு.கவைப் பலவீனப்படுத்துகிறது. அதாவது எதிர்காலத்தில் கட்சியையும் இது பலவீனப்படுத்தும். மாநிலத்தில் தி.மு.கவின் செல்வாக்கையும் ஆட்சித் தகுதியையும் கேள்விக்குள்ளாக்கும் என்கிறார்கள். இதனை அவர்கள் விமர்சனமாக முன்வைப்பதை விடக் கவலையோடு சொல்கிறார்கள்.

வெளியே உள்ள அச்சுறுத்தல் மிகுந்த அபாய ஆபத்தை எதிர்கொள்ள வேண்டிய பொறுப்புடன் வரலாற்றுக் கடமையுடன் கருணாநிதியின் குடும்பம் நடந்து கொள்ள வேண்டும். கட்சியில் மூப்பு, திறமை, பங்களிப்பு போன்றவற்றின் அடிப்படையில் ஜனநாயக ரீதியில் பொறுப்புகளும் அதிகாரமும் அளிக்கப்பட வேண்டும். இல்லையென்றால், இதுவரையில் அவர்கள் (கருணாநிதி தரப்பினர்) ஆற்றிய பங்களிப்புகளும் பணிகளும் பெறுமதியற்றுப் போய் விடும். நேரு குடும்பத்தின் செல்வாக்கு எப்படி அழிந்து மங்கி மறைந்து போய்க் கொண்டிருக்கிறதோ, அதைப் போல கருணாநிதி குடும்பத்தின் வரலாறும் அமையக் கூடாது. காங்கிரஸை நேரு குடும்பத்தின் சொத்துப் போலாக்கியதன் விளைவே, இப்போதும் காங்கிரஸ் மீள எழு முடியாதிருக்கிறது. மட்டுமல்ல, அந்த இடத்தில் பா.ஜ.க என்ற தீய சக்தி வந்து வலுப்பெற்றுள்ளது. அதே நிலை தமிழ்நாட்டிற்கும் தி.மு.கவுக்கும் வரக் கூடாது. தி.மு.கவை ஆதரிப்பது என்பது நியாயமான ஒரு ஆட்சித் தரப்பை வலுப்படுத்துவதற்கே அன்றி, ஒரு குடும்பத்தின் நலனுக்காக இல்லை. ஆகவே இந்த அடிப்படையை ஸ்டாலினும் உதயநிதியும் புரிந்து கொள்ள வேண்டும் என்பதே எங்களுடைய விருப்பம் என்று சொன்னார்கள்.

மேலும் அவர்கள் இன்னொன்றையும் சொன்னார்கள். இந்தத் தேர்தல், தி. மு. கவுக்குச் சவாலானது தான். இந்தச் சவாலுக்கு இரண்டு காரணங்கள் உண்டு. ஒன்று, ஊழல் குற்றச்சாட்டு. தி. மு.க வுக்கும் ஊழலுக்கும் தொடர்பு உள்ளது. நிரூபிக்கப்பட்ட குற்றச்சாட்டுகள் இல்லை என்றாலும் மக்களின் மனதில் தி.மு. க ஊழலுடன் சம்மந்தப்பட்டே உள்ளது என்ற நம்பிக்கை பலரிடத்திலும் உள்ளது. அதை யாருமே மறுக்கவில்லை. மறுக்கவும் முடியாது. ஊழல் இருப்பதால் தான் கட்சிக்குள் ஜனநாயகத்தைப் பேண முடியவில்லை. கட்சியின் மூத்த உறுப்பினர்களைப் பொறுத்த வரையில் தமது அடையாளம், தமது பதவி, தமக்கான அங்கீகாரம் போன்றவற்றை விடவும் தாம் உழைத்துக் கொள்வதற்கான இடமிருந்தால் போதும் என்றே சிந்திக்கிறார்கள். ஆகவேதான், கட்சிக்குள் அதற்கான வாய்ப்பை மட்டும் தேடிக்கொள்கிறார்கள். அவர்களைப் பொறுத்தவரையில் உதயநிதியின் மகன் வந்து பொறுப்பை எடுத்துக் கொண்டாலும் பிரச்சினையில்லை. தமது வருவாய்க்கான வாய்ப்பிருந்தால் போதும் என்றே பார்க்கிறார்கள். ஊழல் இல்லாத ஆட்சியொன்றை வழங்க வேண்டும் என்ற உணர்வு இல்லாமல் போய் விட்டது. ஊழல்பற்றி மக்களிடம் உள்ள நியாயமான உணர்வை மதிப்பதற்கு முடியாமல் இருக்கிறார்கள்.

கட்டுரையாளர்:-
கிளிநொச்சியில் இருந்து
– கருணாகரன் –



இரண்டாவது காரணம், தி.மு.க வில் தொடரும் குடும்ப ஆட்சியும் அதிகாரமும். ஐம்பது ஆண்டுகளைக் கடந்த ஒரு பெரிய பகுத்தறிவுக் கட்சிக்குள்ளே பெருந்தலைவர்கள் இல்லை. அல்லது அவர்களைக் கட்சி அங்கீகரிக்கத் தயாரில்லை என்பது அதனுடைய பகுத்தறிவுச் சிந்தனைக்கும் கோட்பாட்டுக்கும் எதிரானது என்று தலையைக் குனிகிறார்கள். கட்சிக்குள் அடிமைத்தனம் வளர்ந்துள்ளதன் அடையாளமே இதுவாகும்.

இதையெல்லாம் நீங்கள் தி.மு.கவின் உயர் மட்டக் கவனத்துக்குக் கொண்டு செல்ல்லாம் அல்லவா என்று கேட்டேன்.

தி,மு.கவின் உயர் மட்டத்தில் நம்முடைய பேச்சைக் கேட்கக்கூடியவர்களுக்கு அதிகாரம் இல்லை. அதிகாரத்தில் இருப்பவர்கள் இதையெல்லாம் கேட்க மாட்டார்கள். அவர்களுக்குக் காதுகளில்லை என்றார் ஒரு மூத்த எழுத்தாளர்.

அப்படியென்றால் என்னதான் முடிவு? என்று கேட்டேன்.

நெருக்கடி தான். ஆனால் எதையும் மக்கள் தீர்மானித்துக் கொள்வார்கள். அதுதானே வரலாறு என்று சொல்லி மெதுவாகப் பலரும் நகர்ந்து விட்டனர்.

சிலரோ 'தி.மு.கவே இந்தத் தடவையும் வெற்றியைப் பெறும்' என்று அடித்துச் சொல்கிறார்கள். ஆனால் 'அந்த வெற்றி சவாலானதாக இருக்கும். சிலவேளை தி.மு.க கூட்டணி தோற்கடிக்கப் படலாம். அப்படித் தோற்கடிக்கப்பட்டாலும் அதுவும் சவாலான கடினமான தோல்வியாகவே இருக்கும்' என்றனர்.

இதையெல்லாம் விலகியதாகவே ஓட்டோ ஓட்டுநர்கள், ஊபர் சாரதிகள், கடைக்காரர்கள், விடுதிக் காப்பாளர்கள், விடுதிகளில் பணி செய்வோர் போன்ற சாதாரணர்களின் அபிப்பிராயம் உள்ளது. அவர்களிடம் தி.மு.க மீதான கோபமே உள்ளது. இவர்கள் தான் பொது மக்களின் உளநிலையைப் பிரதிபலிப்பவர்கள். தினமும் பல ஆயிரக் கணக்கானோருடன் உறவாடுகின்றவர்கள். இவர்களில் ஒரு சாரார் தமிழ்நாடு வெற்றிக்கழகத்தின் தலைவரும் நடிகருமான விஜய் வெற்றியடைவார் என்று சொல்கிறார்கள். அப்படி அவருக்கு வெற்றி கிடைக்காது விட்டாலும் தங்களுடைய வாக்குகள் விஜய்க்குத் தான் என்று உறுதியுடன் சொல்கிறார்கள்.(23ம் பக்கம் பார்க்க)

# (சு)தந்திரம் தட்டிக் கேட்க ஆளில்லா விட்டால் தம்பி...?

கட்டுரையாளர்:-
- அழகு குணசீலன் -





இலங்கை அரசியலில் பெரும்பான்மை என்பது வெறும் எண்கணிதம் மட்டும் அல்ல உளவியலையும் உள்வாங்கிக் கொண்ட கருத்தியல். இவை இரண்டும் ஒன்று சேரும் போது அதன் உருமாற்றம் அரசியலில் ஆணவம், அகம்பாவம், கர்வம், திமிர், ஏதேச்சாதிகாரம், ஏகபோகம் போன்ற குணாம்சங்களை கொண்டதாக மாறுகிறது. இந்த வகையில் சுதந்திரத்திற்கு பின்னரான அனைத்து பெரும்பான்மை அரசாங்கங்களுடனும் இலங்கையின் அனுபவம் கசப்பானதாகவே இருந்து வருகிறது. இதற்கு தேர்தலுக்கு முன்னர் சிவப்பு சாயம் பூசப்பட்டு இப்போது சாயம் வெளிறிக் கொண்டிருக்கின்ற இன்றைய ஜே.வி.பி என்.பி.பி. ஆட்சி அதிகாரமும் விலக்கல்ல.

ர்த்தமுள்ள பொறுப்புக் கூறல் வழிமுறைகள் இல்லாது இருக்கும் வரை பிரச்சார வாக்குறுதிகள் அதிகாரத்தை வெல்வதற்காக வடிவமைக்கப்பட்ட வெற்று வாக்குறுதிகளாகவே இருக்குமே அன்றி உண்மையான உறுதிமொழிகளாக இல்லை என்பதை 78 வது (சு)தந்திர தினத்தின் போதும் இலங்கை அரசியல் மக்களுக்கு மீண்டும் மீண்டும் நினைவு ஊட்டி நிற்கிறது.

பெரும்பான்மை என்பது இங்கு சிங்கள பௌத்த எண்ணிக்கை, உளவியல் பெரும்பான்மையை கொண்ட கொழும்பு அதிகார பீடத்தை மட்டும் கருத்தில் கொள்ளவில்லை. மாறாக வடக்கு கிழக்கு தமிழ், இந்து பெரும்பான்மையையும் இந்த குணாம்சத்தில் இருந்து பிரித்து நோக்கமுடியாது. தெற்கில் கொழும்பு மையம் போன்று வடக்கில் இது யாழ்ப்பாண மையத்தை கொண்டது. இதனால்தான் இரண்டு மையங்களும் சந்தர்ப்பங்களுக்கு ஏற்ப தமக்கிடையே சமரசம் செய்து கொள்கின்றன. யாழ். மையவாதமும் தமிழ் மக்களின் (சு)தந்திரம் பற்றி பேசுகிறது. ஆனால் அரசியலுக்காக தெற்கில் வெள்ளையாகயாகவும் வடக்கில் கறுப்பாகவும் நிறந்தீட்டப்படுகிறது.

இந்த இரு பெரும்பான்மைகளும் சந்திரனையும், நட்சத்திரங்களையும் தங்கள் சொந்த குழந்தைகளுக்கு பிடித்து வருவதாக பொய் பேசும் பெற்றோர்களைப் போன்றவர்கள். அரசியல் ஏமாற்றுக்காரர்கள். இதனால் ஒரு பக்கம் சுதந்திர நாள் கொண்டாட்டம், மறுபக்கம் கரிநாள் துக்கம். மக்களின் சமூக, பொருளாதார, அரசியல் தேவைகளுக்கான அர்த்தமுள்ள பொறுப்புக்கூறலை தவிர்த்து, அதற்கான செயற்பாட்டு அரசியலை தவிர்த்து மாயமானுக்கு பின்னால் மக்களுக்கு வழிகாட்டுகிறார்கள்.

தென்னிலங்கையில் இடம் பெறும் நிகழ்வுகளை அவதானிக்கும் போது அரசாங்கத்தின் ஒரு (சு)தந்திர அரசியலாகவே தெரிகிறது. கொழும்பு கொதிநிலையில் இருக்கிறது. அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் சாகும் வரையான உண்ணாவிரதப் போராட்டம் தொடர்கிறது. ஏழு ஆண்டுகளாக அபிவிருத்தி உத்தியோகத்தர்களாக கடமையாற்றும் அவர்கள் தங்களுக்கு ஆசிரியர் நியமனங்களை கோருகிறார்கள். இந்த பட்டதாரிகளுக்கு அநுர அரசாங்கத்தை ஆட்சியில் அமர்த்தியதில் பெரும் பங்குண்டு. காலிமுகத்திடல் அரகலய முதல் பாராளுமன்ற பொதுத்தேர்தல் வரை தேர்தல் வாக்குறுதிகளை நம்பி கடுமையாக தேர்தல் வேலைகளில் ஈடுபட்டவர்கள். உண்ணாவிரதிகள் மரணப்படுக்கையில் இருக்கிறார்கள்.

யுத்தம் முடிவுக்கு வந்து ஒன்றரை தசாப்தங்களை கடந்தும், தற்போதே மக்களின் தொகையை விடவும் படையினரின் பிரசன்னம் நிகழ்வுகளில் அதிகமாக இருக்கும் போது மேலும் 32 ஆயிரம்பேரை பொலிஸில் சேர்க்க முனைப்பு நடக்கிறது. கல்விச் சீர்திருத்தம் நடைமுறையில் வெற்றியளிக்க கல்வியில் நிலவும் 'இரட்டைத்தன்மை நீக்கப்பட வேண்டும். அதில் ஒன்று நகர கிராமிய பாடசாலைகளுக்கு இடையிலான ஆசிரியர் பங்கீட்டு ஏற்றத்தாழ்வு. இது போன்ற கல்வி தேவைகளை புறந்தள்ளினால் கல்விச் சீர்திருத்தம் மீண்டும் நகர பாடசாலைகளுக்கே பிரயோசனப்படும். பின்தங்கிய பகுதிகளில் சீர்திருத்தத்தை நடைமுறைப்படுத்துவதற்கான அடிப்படை, கட்டாய தேவைகளை பூர்த்தி செய்யாமல் கல்வி சீர்திருத்தம் நடைமுறைப்படுத்தப்படுவது ஐதார்த்தமற்றது. இதன் ஆசிரியர் நியமனங்களை தவிர்த்து பொலிஸாரை நியமிப்பதன் மூலம் அடைய முடியாது. வேண்டுமானால் கல்விச்சீர்திருத்த குறைபாடுகளை சுட்டிக் காட்டும் மக்கள் போராட்டங்களை ஒடுக்கலாம்.

மறுபக்கத்தில் அரச மருத்துவ அதிகாரிகளின் தொழிற்சங்க போராட்டம். கட்சிக் கொடியில் சுத்தியலும், அரிவாளும், சிவப்பு நிறமும் எவ்வளவு ஏமாற்று வித்தை என்பதை தொழிற்சங்கங்களை கையாளும் சீத்துவத்தில் தெரிகிறது. அரசாங்கம் அடி பணிய மாட்டாது என்று சிவப்பு சட்டையை அணிந்து கொண்டு அமைச்சர் சூளுரைக்கிறார்.

இவர்கள் தொழிலாளர்களின் நலன்கள் பற்றியும், தொழிற்சங்க ஜனநாயக உரிமைகள் பற்றியும் பேசாத மேடைகளை மக்கள் தேர்தல் காலத்தில் கண்டதில்லை. அரச மருத்துவ அதிகாரிகள் தொழிற்சங்கம் சம்பளத்தை உயர்வு கேட்கிறார்கள் என்பது மட்டும் அரசாங்க தரப்பால் உரத்து உச்சரிக்கப்படுகிறது. ஆனால் அவர்கள் மக்களுக்கு வைத்திய சேவையை வழங்குவதற்கான கருவிகள், உபகரணங்கள், மருந்துகள், மனிதவளம் இல்லை என்றும் அதற்கான அடிப்படைகளை நிவர்த்தி செய்யுமாறும் கோருகிறார்கள். வைத்திய சேவைக்கான வசதிகளும், வளங்களும் இன்றி மக்களுக்கு சேவை செய்வது எப்படி?

மலையக மக்கள் புயல் பாதிப்புக்கு நிவாரணம் கோரி, ஒரு நாள் கூலியை செலவு செய்து கொழும்புக்கு வந்திருக்கிறார்கள். அவர்களை சந்திக்க,பேச அரசதரப்பு மட்டும் அல்ல மலையக மக்களின் வாக்குகளை பெற்ற மலையக அரசாங்க எம்.பிக்களும் அந்த பக்கம் தலை வைத்தும் படுக்கவில்லை. குருநாகல், அநுராதபுரம் பகுதிகளில் புயலினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு காணியும், 50 இலட்சமும் வழங்கப்படும் போது மலையக மக்கள் புறக்கணிக்கப் பட்டிருப்பதாகவும், இது அப்பட்டமான இன ஒதுக்கல் என்றும் கூறி தென்னாபிரிக்க இனவாதத்துடன் ஒப்பிட்டிருக்கிறார் மனோகணேசன் எம்.பி.

புயலால் பாதிக்கப்பட்டவர்களுக்கான வீடமைப்பை ஏற்கனவே உள்ள இந்திய வீடமைப்பு உதவியுடன் முடிச்சுப் போட்டு வெறும் 20 இலட்சம் ரூபாவுடன் கணக்கை முடிக்கப்பார்க்கிறது அநுர அரசாங்கம். பாராளுமன்றத்தில் ஜனாதிபதி காணியும், 50 இலட்சமும், காணி இல்லை என்றால் ஒரு கோடியும் என்று அறிவிக்கும் போது அது சிங்களவர்களுக்கு மட்டுமே என்று அறிவித்திருந்தால் அவர் (சு)தந்திர தினம் கொண்டாடுவதில் அர்த்தம் இருக்கிறது (?). மனோகணேசன் இந்திய தூதரகத்தின் மூலம் கொடுக்கும் அழுத்தமும், ஐ.நா. அதிகாரிகளிடம் முறையிட்டும், மலையக மக்களின் அழுகுரல் இன்னும் ஜனாதிபதியின் காதுகளில் விழவில்லை.

இவற்றை விடவும் மின்சார சபை ஊழியர்களின் கோரிக்கைகள் வேறு. அரசாங்க கணக்கில் நிதி இல்லாமல் திருப்பப்பட்ட 75 நிவாரண காசோலைகள் என்று சிறுபிள்ளைத்தனமான அரசியலே செய்யப்படுகிறது. இது ஒரு நிதிமோசடி, ஏமாற்று, வங்கியில் பணம் இல்லாமல் காசோலை வழங்குதல் போன்ற சட்டப்பிரச்சினை. தங்கள் இயலாமையை மறைக்க அரசாங்கம் அதிகாரிகளின் தலையில் கட்டி விடுவதுடன், அவர்கள் மீது அரசியல் பழிவாங்கல்களையும் செய்கிறது. அரசாங்கத்தின் அழுத்தம் காரணமாக அதிகாரிகளின் இராஜினாமாக்கள் தொடர்கிறது. இந்த சூழலில் தான்

(சு) தந்திர தினத்தை 100 மில்லியன் ரூபாய் செலவில் கடந்த வருடத்தை விடவும் 30 மில்லியன் அதிகமாக செலவு செய்து கொண்டாட அரசாங்கம் தீர்மானித்துள்ளது. அத்துடன் ஏற்கெனவே அவசரகாலச் சட்டம் அமுலில் உள்ள நிலையில், முக்கிய சேவைகள் பலவற்றை அத்தியாவசிய சேவைகளாக பட்டியலிட்டு இரவோடிரவாக வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது. அரசாங்கம் மக்களை விடவும் தன்னை பாதுகாக்க அனைத்து ஏற்பாடுகளையும் செய்கிறது.

அதிகாரம் எங்களிடம் இருக்கிறது, அரசு எங்களிடம் இல்லை என்று ஒரு ஏகபோக ஏதேச்சிகார கருத்தை வெளியிட்டிருக்கிறார் அமைச்சர் லால் கந்த. ஏற்கெனவே நீதித்துறையையும், பௌத்தபீடத்தையும் அவர்களின் சீருடையையும் குறிப்பிட்டு அவமானப்படுத்தியவர் இவர். மக்கள் ஜே.வி.பி.ஃ என்.பி.பி.க்கு வழங்கிய அதிகாரம் அரசாங்கத்தை கொண்டு நடாத்துவதற்கான மக்களுக்கும் ஜே.வி.பி.க்கும் இடையிலான ஒப்பந்தம். இதை சட்டவாக்கம், நீதி, நிர்வாகம் என்பனவற்றின் சுதந்திரமான இயக்கத்தில் அரசாங்கம் விட்டு விடவேண்டும். இங்கு கட்சி அரசியல் செய்யமுடியாது. லால் கந்த கூறுவது போன்று சிறிலங்கா ஜனநாயக சோஷலிசக் குடியரசை மக்கள் ஜே.வி.பி.க்கு குத்தகைக்கு விடவில்லை. அரசு என்பது எதிர்க்கட்சிகளையும் உள்ளடக்கியது. லால் கந்தவின் கருத்து தனிக்கட்சி ஆட்சியை கோரி நிற்கிறது. கடந்த ஒன்றரை வருடத்தில் இந்த ஆட்சி எவ்வளவு பலவீனமாகி இருக்கிறது என்பதற்கு இது சான்று.


பாராளுமன்றத்தில் ஆளுந்தரப்பு அறுதிப் பெரும்பான்மையை பெற்றிருந்த காலங்களில் இந்த எதேச்சிகாரப்போக்கு எப்போதும் இருந்துள்ளது. இது மக்கள் வழங்கிய ஜனநாயக அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்வதாகும்.

1970, 1977, 1989 மற்றும், ராஜபக்சாக்களின் காலங்களிலும், இன்றைய ஜே.வி.பி.ஃ என்.பி.பி. ஆட்சியிலும் இது தொடர்கிறது. ஜே.வி.பி.யின் இந்த எதேச்சாதிகார போக்குக்கு எதிராக பாராளுமன்ற தேர்தல் முடிந்து ஆறு மாதங்களுக்குப் பிறகு நடைபெற்ற உள்ளூராட்சித் தேர்தலில் மக்கள் தாங்கள் வழங்கிய ஆதரவை மீளப் பெறத் தொடங்கினர். இன்றைய நிலையில் ஆட்சியாளர்களுக்கான மக்கள் ஆதரவு தென்னிலங்கையிலும், வடக்கு கிழக்கிலும், மலையகத்திலும் குறைந்து விட்டது. இதனால் தான் சட்டச் சிக்கலுக்குள் மாகாணசபை தேர்தல் முறையை இழுத்து மாகாணசபைத் தேர்தலை நடாத்தாமல் அரசாங்கம் இழுத்தடிக்கிறது.

நாமல் ராஜபக்சவின் நுகேகொட பொதுக்கூட்டம், ரணில் சஜீத் இணைவில் ஏற்பட்டு வரும் முன்னேற்றம், வடக்கு கிழக்கில் தமிழ்தேசிய கட்சிகளின் ஒன்றிணைவு, தமிழரசு முஸ்லீம் காங்கிரஸ் புரிந்துணர்வு அதிகரிப்பு, சிவப்பு லேபல் கொள்கலன்கள் விடுவிப்பு ஊழல், நிலக்கரி இறக்குமதி ஊழல், ஜே.வி.பி. தொழிற்சங்க தலைவருக்கு குறைந்த ரெண்டரில் சொகுசு வாகமொன்றை விற்பனை செய்தது, சில அமைச்சர்களுக்கு எதிரான சொத்து குவிப்பு முறைப்பாடுகள், ஈஸ்டர் படுகொலைகள் விசாரணையில் ஏற்படாத முன்னேற்றம், ஐ.எம்.எப். நிபந்தனைகளுக்கு ஊடாக பயனிக்க வேண்டிய கட்டாய அழுத்தமும் அரசாங்க தரப்பில் வெளிப்படத்(22ம் பக்கம் பார்க்க)

# சமஷ்டி நூற்றாண்டும் தமிழரசுக்கட்சியும்!

இலங்கை அரசியலில் சமஷ்டி சிந்தனை பிறந்து நூறாண்டுகளாகி றது. சிங்கள தேசியவாத நாயக்க வம்ச ஆளுமை எஸ்.டபிள்யூ ஆர்.டி. பண்டாரநாயக்கா இலங்கை சமூக, பொருளாதார, அரசியல் பன்மைத்துவ கட்டமைப்புக்கு சமஸ்டி– கூட்டாட்சி முறைமையே பொருத்தமானது என்று 1926இல் கருத்துருவாக்கத்தில் ஈடு பட்டார். அதற்கான அவசியத்தையும்,



நியாயத்தையும் முன் வைத்தார். இலங்கைத் தீவை கண்டி, கரை யோரம், வடக்கு கிழக்கு என்று சுயாட்சி பிராந்தியங்களாக பிரித்து கூட்டாட்சி அரசியல் கட்டமைப்பை நிறுவுவது அவரது கருத்தாக இருந் தது.

அப்போது சமஷ்டி முறைமையானது இன ஒற்றுமையை பாதிக்கும் வகை யிலான ஒரு இனவாத கருத்தியல் என்று ஜேம்ஸ்.ரட்ணம் பண்டார நாயக்காவின் கருத்துக்கு எதிராக பேசி யும், எழுதியும் விவாதத்தில் ஈடுபட் டார். இதனால் சிங்களவர் தமிழரை ஒரு சிறுபான்மை தேசிய இனமாக அங்கீகரித்து இலங்கைத்தீவின் ஆட்சி அதிகாரத்தை பகிர்ந்து கொள்ள முன் வந்ததற்கு மட்டும் அன்றி அதை இன வாதம் என்று தமிழரே எதிர்த்ததற்கும் தட்டிக் கழித்ததற்கும் நிராகரித்ததற்கு மான சமஷ்டி நூற்றாண்டு இந்த 2026.

இந்த நூற்றாண்டு குறித்து நிலமும், புலமும் அறிந்த பத்திரிகையாளர் டி.பி.எஸ்.ஜெயராஜ் கொழும்பு பத்திரிகை ஒன்றுக்கு எழுதிய கட்டுரை இலங்கை அரசியல் பரப்பில் அதிக கவன ஈர்ப்பை பெற்றுள்ளது. வரலாற்றை திரும்பிப் பார்ப்பதற்கும், கலந்துரையாடல்களுக்கும், தமிழர் அரசியலில் மாற்று அணுகுமுறை தேவை என்ற கருத்தையும் இன்றைய தலைமுறைக்கு சொல்லியிருக்கிறது.

1949இல் எஸ்.ஜே.வி.செல்வநாயகம் தலைமையில் தமிழரசுக்கட்சி –சமஷ்டி கட்சி நிறுவப்பப்பட்டு இதே சமஷ்டிக் கோரிக்கையை வடக்கு கிழக்கு தமிழர் களுக்கு ஒரு அரசியல் கோரிக்கையாக முன் வைத்தது. அந்த தமிழ்த்தரப்பு சமஷ்டி கருத்தியலும் முக்கால் நூற்றா ண்டை கடந்து விட்டது. தமிழரசு கட்சியானது தற்போது எஸ்.ஜே.வி. செல்வநாயகம் தான் சமஷ்டியின் தந்தை என்ற கோதாவில் அற்ப அரசி யல் செய்வதுடன் பண்டா– செல்வா ஒப்பந்தத்தை கிழித்தெறிந்ததையே அரசியல் முதலீடாக கொண்டிருக் கிறது.

சிங்கள, பௌத்தர்களின் எதிர்ப்பால் பண்டாரநாயக்கா 1957 யூலை 26 இல் ஒப்பமிடப்பட்ட, நகலை கிழித் தெறிந்ததை பிரச்சாரம் செய்யும் தமிழரசுக்கட்சி, முதலில் சமஷ்டி யோசனையை முன் வைத்தது ஒரு சிங்களத்தலைமை என்பதையும், அதை நிராகரித்தது தமிழர் தரப்பே என்பதையும் அடக்கி வாசிக்கிறது.

அண்மைய செய்திகள், பதிவுகளின் படி சமஷ்டி கோரிக்கையை கொண்டு இழுக்க புதிய அரசியல் அணுகுமுறை ஒரு மாற்று அரசியல் பாதை அவசியம் என்பதை தமிழரசுக்கட்சியின் பதில் செயலாளர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்திருக்கிறார். பண்டாரநாயக்கா வின் சமஷ்டி நூற்றாண்டை மைய மாக வைத்து அதற்கான வேலைத் திட்டம் ஒன்றை இந்த வருடத்தில் ஆரம்பிக்க உள்ளேன் என்று தெரிவித்துள்ளார் சுமந்திரன். அவரது இந்த கருத்து அந்த வேலைத்திட்டம் குறித்து தெளிவாகவோ, ஆழமாகவோ பேசவில்லை. எப்படியாயினும் தமிழர் அரசியலில் ஒரு மாற்று அணுகுமுறை காலத்தின் கட்டாயம்.

எம்.ஏ.சுமந்திரனின் கருத்தில் தென்னில ங்கை சிங்கள மக்கள் மத்தியில் 'சமஷ்டி' குறித்து நிலவும் 'அச்ச த்தை' போக்குவதும், 'தீர்வு' ஒன்றை எட்டும் நிலையில் அதற்கான சர்வஜன வாக்கெடுப்பில், அரசாங்க தரப்புடன் இணைந்து மேடையேறும் போது சமஷ்டிக்கான, சர்வஜன வாக்கெடுப்பில் வெற்றி பெறுவது ஒன்றும் கஷ்டமான காரியம் அல்ல என்றும் அவர் கூற வருகிறார் என்றே கொள்ள வேண்டும்.

சிங்களக் கட்சி எதுவும் சமஷ்டி என்ற சொல்லை ஏற்றுக்கொள்ள மாட்டார் கள். ஆகையால் பெயர்ப் பலகையில் தொங்கிக் கொண்டிருக்காமல் அர்த்த முள்ள விதத்தில், மீளப்பெற முடியாத அதிகாரப்பகிர்வு முறையை அடைய வேண்டும். அதற்கு நிட்சயமாக எதிர்த்தரப்பு கட்சிகளின் ஆதரவையும் பெற வேண்டும்.

இந்தியா இந்தப்பிராந்திய வல்லரசு என்பதையும் தாண்டி ஒரு உலக வல்லரசாக மாறியுள்ளது. இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி இதற்கான முக்கிய காரணம். மிக அண்டை நாடான இந்தியாவின் வளர்ச்சியை எமதாக்கி கொள்ள வேண்டும். அதற்கு இந்தியாவின் பங்களிப்பு எமது அரசியலிலும் கட்டாயமாக இருக்க வேண்டும். அது தமிழ் மக்களுக்கு ஒரு போதும் கேடாக அமையாது''.

சுமந்திரன்பத்தியாளர் சிவராசா கருணா கரன் உடனான நேர்காணல் கூறிய இரண்டு கருத்துக்களும் மிகவும் முக்கியமானவை மட்டும் அன்றி பிராந்திய அரசியல் ஜதார்த்தம் கொண் டவை. ஆனால் இந்தியாவை பயன் படுத்தல் என்பதில் அதன் வரையறை யில் தமிழ்த்தேசிய பாராளுமன்ற அரசியல் பரப்புக்கு உள்ளேயும், வெளி யேயும், புகலிடச் சூழலிலும் முரண் பாடான நிலைப்பாடுகள் உண்டு என்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டும்.

இதில் முக்கியமான இன்னொரு விடயம் என்னவெனில் சுமந்திரன் இந்தியாவை பயன்படுத்தல் என்ற கருத்தோடு தென்னிலங்கை தீவிர சிங்கள பௌத்த பேரினவாதத்தை எவ்வாறு எதிர்கொள்ளப் போகிறார் என்பது தான்.

சிங்கள மக்களுக்கு சமஷ்டி குறித்து இருக்கும் அச்சத்தை அகற்ற சுமந் திரனின் இந்தியாவை பயன்படுத்தல் எந்தளவுக்கு உதவப்போகிறது? அதுவும் இலங்கைக்கும் இந்தியாவு க்குமான உறவானது முற்றிலும் பொருளாதார நலன் சார்ந்த உறவாக நாளாந்தம் மாறிக்கொண்டிருக்கின்ற நிலையில், இனப்பிரச்சினை தீர்வுக்கான ஒரு அரசியல் அழுத்தம் இந்தியாவில் இருந்து எதிர்பார்க்கக்கூடியதா?

இதை சிங்கள தேசம் குறிப்பாக தென்னிலங்கை முற்போக்கு சக்திகள் கூட இந்திய அழுத்தத்தை எப்படி நோக்கப் போகிறார்கள்? சுமந்திரனின் 'இந்தியாவை பயன்படுத்தல்' என்ற கருத்து சிங்கள மக்களுக்கு மேலும் அச்சத்தை ஏற்படுத்தி சிங்கள, பௌத்த பேரினவாதத்தின் பக்கம் சிங்கள மக்களை அணி திரட்ட மாட்டாது என்பதற்கு என்ன உத்தரவாதம்?

இந்தியாவுக்கு இலங்கையின் பொரு ளாதார நெருக்கடி காலம், இயற்கை அனர்த்த நிவாரண முகாமைத்துவ உதவிக்காலம், சர்வதேச நாணய நிதிக்கு இலங்கைக்கு சார்பாக பிணை நின்றகாலம்.... என்ற பல வாய்ப்புகள் இனப்பிரச்சினை குறித்து குறைந்த பட்சம் அர்த்தமுள்ள தீர்வு குறித்து பேச பல சந்தர்ப்பங்கள் கிடைத்தன. ஆனால் வடக்கு,கிழக்கு தமிழ்தேசிய அரசியல்வாதிகள் கொழும்புக்கு படை யெடுத்து இந்தியப் பிரதிநிதிகளை சந்திக்கும் போது தமிழ் தேசியத்தின் பலவீன அரசியல் பற்றியே அதிகம் அறிவுறுத்திய இருக்கிறது.

இந்த பலவீனம் காரணமாகவும், கொழும்பின் பலம் காரணமாகவும் தான் டெல்லியிடம் ஈழத்தமிழர்கள் தங்கியிருக்கிறார்கள் என்பதை இந்திய வெளியுறவுத்துறை புரிந்து இருக் கிறதா? கொழும்பினதும், தமிழ்தரப் பினதும் பலவீனங்களை இதுவரை இந்திராகாந்தி, ராஜீவ்காந்தியினால் மட்டுமே பயன்படுத்த முடிந்திருக் கிறது. அதையும் புலிகளும், புலிக்கு பயந்த கட்சிகளும், அமைப்புக்களும், அவர்களை நியாயப்படுத்திய தாயக, புகலிட சக்திகளுமே கெடுத்தார்கள். பண்டாரநாயக்காவுக்கு ஒரு தமிழரான ஜேம்ஸ் இரட்ணம் போன்று ராஜீவ் காந்திக்கு ஒரு தமிழ் அமைப்பாக புலிகள் குறுக்கே நின்றார்கள். இதனால் சிங்கள தேசமே அனைத்துப் பயன் களையும் அள்ளியது. இந்த புள்ளியில் சுமந்திரனின் அது தமிழ் மக்களுக்கு ஒரு போதும் கேடாக அமையாது. என்ற வார்த்தைகளை அழுத்திக் கூற வேண்டியுள்ளது.

தமிழ் மக்களுக்கு விளைவிக்கப்பட்ட கேட்டுக்கு புலிகளும், ஜே.வி.பி.யும் பங்குதாரர்கள். இந்திய இலங்கை சமாதான உடன்படிக்கைக்கு எதிரான தங்கள் நடவடிக்கையை ஜே.வி.பி. இந்திய மேலாதிக்கத்திற்கு எதிரானது என்றும், இனவாதம் இல்லை என்றும் நியாயப்படுத்துவது அரசியல் அபத் தம். இன்றைய பிராந்திய, உலகப் பொருளாதார ஒழுங்கில் இந்திரா ராஜீவ்காந்தி காலங்கள் மீண்டும் உயிர்த்தெழப் போவதில்லை. அது மட்டுமின்றி இந்திய பொருளாதார மேலாதிக்கத்தை தவிர்த்து ஓடுவதை அநுர அரசாங்கத்தினாலும் நினைத்து பார்க்க முடியாது. சிங்கள, பௌத்த மேலாதிக்க அதிகாரத்தை பாதுகாக்க எந்த மேலாதிக்க சக்திகளோடும் கூட்டுச் சேர தயார் என்பதை நிரூபிக்க ஜே.வி.பி.ஃஎன்.பி.பி. அரசாங்கத்திற்கு சில மாதங்களே தேவைப்பட்டன.

எம்.ஏ.சுமந்திரனின் கடந்த 15 ஆண்டு கால பாராளுமன்றமன்ற அரசியல் உட்கட்சி ஜனநாயகம் மட்டும் அன்றி வெளிப்படைத்தன்மையும் அற்றது. அவர் கூறுகின்ற பெயர்ப் பலகையில் தொங்கிக்கொண்டிருக்காமல் என்கின்ற அந்த பலகைக்கு பின்னால் கஜேந்திர குமார் பொன்னம்பலத்திற்கும், மதியா பரணம் ஆபிரகாம் சுயந்திரனுக்கும் இடையிலான கருத்து மோதல் ஒழிந்து இருக்கிறது. இது ஒற்றை யாட்சி ஏக்கயராட்சிய வரைவிலக்கண அரசியல் வித்துவ செருக்கு. ஏக்கய ராட்சியவுக்கு வேறு பெயர் சமஷ்டி என்று தமிழ்மக்களுக்கு காட்டும் அதேவேளை சிங்கள மக்களுக்கு அதை மறைக்கும் வெளிப்படைத் தன்மையற்ற அரசியல் ஏமாற்றே சுமந்திரன் கூறுகின்ற பலகை கதை. சிங்கள மக்களையும், அவர்களின் அரசியல் தலைமைகளையும் கூட்டா ட்சிக்கு பதிலாக ஏக்கயராட்சிய என்ற வார்த்தையை பிரதியீடு செய்து ஏமாற் றலாம் என்று சுமந்திரன் நினைப்பது அரசியல் சிறுபிள்ளைத்தனம்.

இந்த ஒழித்து பிடித்து விளையாடும் அரசியலை விட்டு விட்டு சிங்கள மக்களின் நம்பிக்கையை இனப்பிரச்சி னைக்கான தீர்வுக்கு பெறவேண்டு மானால் அரசியல் நேர்மையுடன் தமிழரசுக்கட்சி – தமிழ்த்தேசிய கூட்ட மைப்பு மற்றும் சகல தமிழ் கட்சி களும், தங்கள் பங்குக்கு செய்ய வேண்டிய வேறு அரசியல் வேலைகள் நிறையவே உள்ளன. அதை அவர்கள் செய்யவேண்டும்.

(அடுத்தவாரம் தொடரும்)

# பயங்கரவாதத்தில் இருந்து அரசைப் பாதுகாப்பது NPP தமிழ்மக்களுக்கு காட்டும் மாற்றம்?

கடந்த செவ்வாய்க்கிழமை, யாழ்ப்பாணம் தந்தை செல்வா கலையரங்கில், ஒரு கலந்துரையாடல் ஏற்பாடு செய்யப்பட்டது. சட்டத்துக்கும் கொள்கைகளுக்குமான யாழ்ப்பாண கற்கை நிலையத்தால் ஒழுங்கு செய்யப்பட்ட இக்கருத்தரங்கில், அரசாங்கம் பயங்கரவாத தடைச் சட்டத்துக்கு பதிலாக ஒரு புதிய சட்டத்தை கொண்டு வர இருக்கும் பின்னணியில் அந்த சட்ட மூலத்தின் வரைவை குறித்த ஒரு கலந்துரையாடலாக அது அமைந்திருந்தது.

சட்டத்துக்கும் கொள்கைகளுக்குமான யாழ்ப்பாண கற்கை நிலையத்தின் பணிப்பாளர்.குருபரன் பயங்கரவாதத்திலிருந்து அரசைப் பாதுகாக்கும்'' ஒவ்வொரு பகுதியாக விரிவாக எடுத்துக் கூறினார். அதன்பின் அது தொடர்பாக அங்கு வந்திருந்தவர்கள் கருத்து தெரிவித்தார்கள்.அரசாங்கம் புதிய சட்ட வரைவை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கவிக்கும் பின்னணியில், அது தொடர்பான குடிமக்கள் சமூகங்களின் கருத்தை கேட்டு தொகுத்து அனுப்புவதும் அக்கருத்தரங்கின் நோக்கங்களில் ஒன்று என்று கூறப்பட்டது.

பயங்கரவாத தடைச் சட்டத்தை அகற்ற வேண்டும் என்றுதான் தமிழ் மக்கள் பல தசாப்தங்களாக கூறி வருகிறார்கள் போராடி வருகிறார்கள். அதற்கு பதிலாக ஒரு புதிய சட்டத்தை கொண்டு வருமாறு கேட்கவில்லை. இன்று இக்கட்டுரையானது புதிய சட்ட வரைபில் உள்ளடக்கப்பட்ட சட்ட ரீதியிலான ஏற்பாடுகளை ஆராயப்போவதில்லை. மாறாக இக்கட்டுரையின் நோக்கம் என்னவென்றால் ஒரு புதிய சட்டம் ஏன் அரசாங்கத்துக்குத் தேவையாக இருக்கிறது? அதிலும் குறிப்பாக தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்திற்கு ஏன் தேவையாக இருக்கிறது? என்பதைச் சற்று ஆழமாகப் பார்ப்பது தான்.

சட்டம் என்பது தேவ சபையில் நிறைவேற்றப்படும் புனிதமான ஆவணம் அல்ல. அதை மனிதர்கள்தான் உருவாக்குகிறார்கள். யார் அந்த மனிதர்கள் என்றால்,ஒரு நாட்டின் நாடாளுமன்றத்தில் யார் பெரும்பான்மையாக இருக்கிறார்களோ அவர்கள் தான். இதை இன்னும் நடைமுறை வார்த்தைகளில் சொன்னால், அந்த நாட்டை ஆட்சி செய்யும் அரசாங்கத்தின் பிரதிநிதிகள் ஒரு சட்டத்தை நாடாளுமன்றத்தில் நிறைவேற்றுகிறார்கள். எனவே அரசாங்கத்தின் கொள்கை எதுவோ அதுதான் சட்டமாக நிறைவேற்றப்படும். அரசு நிரந்தரமானது. அரசாங்கம் குறிப்பிட்ட காலத்துக்கு ஒருமுறை தெரிவு செய்யப்படுவது. இதில் அரசுக் கொள்கையை மீறி அரசாங்கம் போக முடியாது. எனவே அரசின் கொள்கை எதுவோ அதை அரசாங்கம் தன்னுடைய புதிய நிலைமைகளுக்கு ஏற்ப சட்டமாக நிறைவேற்றுகின்றது. அல்லது ஏற்கனவே இருக்கும் சட்டங்களைத் திருத்துகின்றது.

இலங்கைத் தீவின் அரசுக் கட்டமைப்பு எனப்படுவது சிங்கள பௌத்த உணர்வுகளை அதிகம் பாதுகாக்கும் ஒரு சிங்கள பௌத்த அரசுக் கட்டமைப்பு என்பது உலகம் முழுவதற்கும் தெரியும்.அந்த சிங்கள பௌத்த அரசுக் கட்டமைப்பின் கொள்கைகள் எவையோ அவைதான் சட்டமாக்கப்படும். இந்த அடிப்படையில் பயங்கரவாத தடைச் சட்டத்திற்கு பதிலாக கொண்டுவரப்படும் புதிய சட்டத்தின் பின்னால் உள்ள அரசாங்கத்தின் உளவியலை விளங்கிக் கொள்ள வேண்டும். பயங்கரவாத தடைச் சட்டம் கடந்த பல தசாப்தங்களில் தமிழ் மக்களுக்கு எதிராக மட்டுமல்ல சிங்கள மக்களுக்கும் முஸ்லிம் மக்களுக்கும் எதிராகப் பயன்படுத்தப்பட்டிருக்கிறது.

தமிழ் மக்களின் ஆயுதப் போராட்டத்தை நசுக்கும் அரச நடவடிக்கைகளின் ஒரு பகுதியாகத்தான் பயங்கரவாத தடைச் சட்டம் உருவாக்கப்பட்டது. தமிழ் மக்களின் ஆயுதப்




போராட்டத்தை பயங்கரவாதமாக சித்திரித்து அதனை ஒடுக்குவதற்கு உரிய ஏற்பாடுகள் அங்கே உண்டு. எனினும் பின்னர் அது சிங்கள, முஸ்லிம் மக்களுக்கு எதிராகவும் பிரயோகிக்கப்பட்டது. ஜேவிபியின் இரண்டாவது ஆயுதப் போராட்டத்தின் போது ஜனாதிபதியாக இருந்த ஜெயவர்த்தன, தமிழ் ஆயுதப் போராளிகளை பயங்கரவாதிகள் என்று அழைத்தார். ஆனால் ஜேவிபியினரை நாசகார சக்திகள் என்று அழைத்தார். வார்த்தைகளுக்குள்ளும் நுட்பமாக இன முரண்பாடு?

மேலாக தமிழ் மக்கள் காலத்துக்கு காலம் வெவ்வேறு கோரிக்கைகளை முன்வைத்து வெவ்வேறு வடிவங்களில் போராடி வந்திருக்கிறார்கள்.போராடி வருகிறார்கள். தொடக்கத்தில் கடந்த நூற்றாண்டில் தமிழ் மக்கள் சத்யாக்கிரக வழியில் போராடினார்கள். ஆனால் அப்போது இருந்த அரசாங்கம் அதனை அரச வன்முறைகளின் மூலம் தோற்கடித்தது. அறவழிப் போராட்டத்தை தமிழ் தலைவர்கள் ஒரு கட்டத்துக்கு மேல் முன்னெடுக்கவில்லை. ஆனால் மேற்படி தலைவர்களால் உருவேற்றப்பட்ட தமிழ் இளையவர்கள் ஆயுதப் போராட்டத்தைத் தொடங்கினார்கள். அதுவும் பின்னர் 2009இல் தோற்கடிக்கப்பட்டது. இப்பொழுது கடந்த 16 ஆண்டுகளாக தமிழ் மக்கள் வெவ்வேறு கோரிக்கைகளை முன்வைத்து மீண்டும் அறவழியில் போராடி வருகிறார்கள்.

தமிழ் மக்கள் அறவழியில் போராடிய போது அதை சிங்கள பௌத்த அரச கட்டமைப்பு தன் போலீசார் மற்றும் படையினரின் மூலம் நசுக்கியது.அவசர காலச் சடடத்தைக் கையில் எடுத்து. பின்னர் ஆயுதம் போராட்டம் தொடங்கிய பொழுது அதனை நசுக்குவதற்கு சட்டரீதியாக பயங்கரவாத தடைச் சட்டத்தை கொண்டு வந்தது.ப யங்கரவாத தடை சட்டத்தைக் குறித்த விமர்சன பூர்வமான கட்டுரைகளை தொகுத்து மனித உரிமைக்கும் அபிவிருத்திக்குமான நிலையம் (CHRD) 2009 ஆம் ஆண்டு ஒரு நூலை வெளியிட்டது. இந்நூலின் அறிமுக உரையில் பேராசிரியர்.ஜெயதேவ் உயாங்கொட பின்வருமாறு கூறுகிறார்....

இலங்கையின் காலனித்துவத்திற்குப் பிந்தைய அரசியல் வரலாறு ஒரு தனித்துவமான பரிமாணத்தைக் கொண்டுள்ளது. 1971 முதல் பெரும்பாலான ஆண்டுகளில் நாடு ஏதேனும் ஒரு வகையான விதிவிலக்குச் சட்டதின் கீழ் அவசரகாலச் சட்டம் அல்லது பயங்கரவாதத் தடைச் சட்டம் ஆகியவற்றின் கீழ் ஆளப்பட்டுள்ளது. 1971 மார்ச்சில் அவசர நிலை அமலுக்கு வந்தது. அது 1976 வரை தொடர்ந்தது. ஒரு குறுகிய கால இடைவெளிக்குப் பிறகு, 1978 இல் அவசரநிலை மீண்டும் அறிமுகப்படுத்தப்பட்டது. அடுத்த ஆண்டு PTA அறிமுகப்படுத்தப்பட்டது. அடுத்தடுத்த ஆண்டுகளில் இலங்கை மக்கள் அவசரகாலச் சட்டம் அல்லது PTA இல்லாமல், அவ்வப்போது மிகக்குறுகிய காலத்திற்கு மட்டுமே சாதாரண சட்டத்தின் கீழ் வாழ வாய்ப்புக் கிடைத்தது, இவ்வாறு, சாதாரண சட்டம் விதிவிலக்காக இருந்து வருகிறது. இந்தக் கதையை சற்று நாடகத்தனமான மொழியில் மீண்டும் கூறினால், 1971 முதல். இலங்கையில் அவசரகாலச் சட்டம் 'சாதாரண' சட்டமாக இருந்து வருகிறது. மேலும் சாதாரண சட்டமானது,'அவசரகாலச் சட்டத்தின்' நிலைக்கு உயர்த்தப்பட்டுள்ளது''.

இது எதைக் காட்டுகிறது? சாதாரண சட்டங்களின் மூலம் இந்த நாட்டை ஆள முடியாத ஓர் அரசியல் சூழல் தொடர்ந்து நிலவி வருகிறது என்பதைத்தான். அசாதாரண சட்டங்களே சாதாரண சட்டங்களைப்போல தொடர்ச்சியாக பிரயோகிக்கப்படுவது, இந்த நாட்டின் சட்டச் சூழலை, ஜனநாயகச் சூழலை கேள்விக்கு உள்ளாக்குவது.

குறிப்பாக 2009இல் ஆயுதப் போராட்டம் தோற்கடிக்கப்பட்டு விட்டது என்று கூறிக் கொள்ளும் சிங்கள பௌத்த அரசுக் கட்டமைப்பானது, தொடர்ந்து எதற்கு எதிராக பயங்கரவாதத் தடைச் சட்டத்தை வைத்திருக்க வேண்டும்? ஏனென்றால் பயங்கரவாதத் தடைச் சட்டம் போன்ற ஒரு சட்டத்தை தமிழ் அரசியல் செயற்பாட்டாளர்களின் தலைக்கு மேல் தொங்க விடுவதன் மூலம், அவர்களைத் தொடர்ந்தும் ஒரு கட்டத்துக்கு மேல் போராட விடாமல் தடுக்கலாம்.த மிழ் மக்களின் அரசியல் எதிர்ப்பை பயங்கரவாதமாக சித்தரிக்கக் கூடிய சட்ட வாய்ப்புகளை அது எப்பொழுதும் பேணும். எனவே இங்குள்ள அரசியல் இராணுவ நோக்கம் எதுவென்றால்,தமிழ் மக்களை போராட முடியாத மக்களாகத் தொடர்ந்து பேணுவது தான்.

தமிழ் மக்களைப் போராடாமல் வைத்திருப்பதற்கு காலத்துக்கு காலம் பொருத்தமான சட்டங்களை அவர்கள் பயன்படுத்துவார்கள் என்பதற்கு இங்கு மற்றொரு உதாரணத்தை சுட்டிக் காட்ட வேண்டும். கோவிட்-19 பெருந்தொற்று ஏற்பட்ட காலகட்டத்தில் அரசாங்கத்திற்கு எதிராகப் போராடிய தமிழ்ச் செயற்பாட்டாளர்களுக்கு எதிராக தனிமைப்படுத்தல் சட்டம் பயன்படுத்தப்பட்டது.

காலத்துக்கு காலம் அவர்களுக்கு தமிழ் மக்களை அச்சுறுத்த, போராட விடாமல் தடுக்க ஏதாவது ஒரு சட்டம் தேவை.பல தசாப்தங்களாக தொடர்ச்சியாக பேணப்பட்டு வரும் இந்த அரசியல் பாரம்பரியத்தில் அனுரவும் மாற்றங்களை செய்யத் தயார் இல்லை என்பதைதான் புதிய சட்ட வரைபு காட்டுகின்றது.

கிட்டத்தட்ட 15 மாதங்களுக்கு முன்பு மாற்றத்தை வாக்களித்து ஆட்சிக்கு வந்த இந்த அரசாங்கமானது, பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் விடயத்தில் அதாவது தமிழ் மக்களை ஒடுக்கும் சட்ட ஏற்பாடுகளின் விடயத்தில் திருப்பகரமான மாற்றம் எதையும் செய்யத் தயாரில்லை என்பதைத்தான் புதிய சட்ட வரைபு காட்டுகின்றது.

இத்தனைக்கும் தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் அடித்தளமாக இருப்பது ஜேவிபி. அதுவும் இரண்டு தடவைகள் ஆயுதப் போராட்டம் நடத்திய இயக்கம்.இரண்டு தடவைகள் கொடூரமான விதங்களில் நசுக்கப்பட்ட ஓர் இயக்கம் .75 ஆயிரத்திற்கும் குறையாத அதன் தோழர்கள் கொல்லப்பட்டிருக்கிறார்கள். காணாமல் ஆக்கப்பட்டிருக்கிறார்கள். மிகக் கொடூரமான மனித குலத்தை அவமானப்படுத்தும் சித்திரவதைகளின் மூலம் அவர்கள் விசாரிக்கப்பட்டு,கொல்லப்பட்டார்கள்.எனவே பயங்கரவாதத் தடைச் சட்டம் போன்ற சட்டங்களின் ருசி எத்தகையது என்பது ஜேவிபிக்கு நன்கு விளங்கும்.


அது மட்டுமல்ல, சில ஆண்டுகளுக்கு முன்பு அதாவது ஜேவிபி எதிர்க்கட்சியாக இருந்த காலகட்டத்தில், பயங்கரவாதத் தடைச் சட்டத்துக்கு எதிராக தமிழரசு கட்சி முன்னெடுத்த போராட்டங்களில் ஜேவிபியும் பங்குபற்றியிருக்கிறது. அப்பொழுதெல்லாம் பயங்கரவாத தடைச் சட்டத்தை நீக்கவேண்டும் என்ற நிலைப்பாட்டை அவர்கள் வெளிப்படுத்தியும் இருக்கிறார்கள். ஆனால் ஆளுங்கட்சியாக வந்ததும் அவர்கள் தங்களுடைய முன்னைய வாக்குறுதிகள் அனைத்தையுமே கைவிட்டு விட்டார்களா?

இந்த அரசாங்கம் அரகலய போராட்டத்தின் விளைவு. அந்தப் போராட்டத்தை முன்னெடுத்த அமைப்புகள் அண்மையில் ஒன்று கூடி பயங்கரவாத தடைச் சட்டத்தை நீக்குமாறு வேண்டுகோள் விடுத்திருக்கின்றன. ஆனால் அந்தப் போராட்டத்தின் கனிகளை தேர்தல் வெற்றியாக மாற்றிய தேசிய மக்கள் சக்தியானது, புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தை கொண்டு வர முயற்சிக்கின்றது.

மாற்றம் என்பது ஜனாதிபதி அரைக்கால் சட்டையோடு யாழ்ப்பாணத்தின் தெரு ஒன்றில் உடற்பயிற்சி செய்வதோ, அல்லது தமிழ் மக்களோடு செல்பி எடுப்பதோ அல்ல.மாறாக தமிழ் மக்களை தொடர்ந்து அச்சுறுத்தலின் கீழ் வைத்திருக்கும் விடயங்களில் நிர்ணயகரமாக அரசியல் தீர்மானங்களை எடுப்பது தான்.

# ஐ.நா.வுக்கு குழி பறிக்கும் நோக்கில் டொனால்ட் ட்ரம்ப் அமைத்த சமாதான சபை

கட்டுரையாளர்:-
இலங்கையில் இருந்து
- வீ.தனபாலசிங்கம் -





அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தனது இரண்டாவது பதவிக் காலத்தின் முதலாவது வருடத்தில் முன்னெடுத்த கொள்கைகளும் நடவடிக்கைகளும் தேசிய மற்றும் சர்வதேசிய நடைமுறைகள் மற்றும் கடப்பாடுகள் மீதான அவரின் அலட்சியத்தை தெளிவாக காண்பித்தன. அவர் தொடக்கி வைத்த செயன்முறைகளும் கொள்கைகளும் அமெரிக்காவை மாத்திரமல்ல, ஏனைய நாடுகளையும் பல தசாப்தங்கள் பின்னோக்கித் தள்ளி விடும் ஆபத்தை தோற்றுவித்திருக்கின்றன. உலக ஒழுங்கு ஒன்று தலைகீழாக திருப்பப்படுகின்றது.

கடந்த மாத முற்பகுதியில் தென்னமெரிக்க நாடான வெனிசூலாவுக்குள் துருப்புக்களை அனுப்பி ஜனாதிபதி நிக்கலஸ் மதுரோவையும் அவரது மனைவியையும் அமெரிக்காவுக்கு கடத்திச் சென்றது சர்வதேச சட்டங்களை மீறிய செயல் என்ற சர்வதேச கண்டனங்களுக்கு நியூயோர்க் ரைம்ஸ் நேர்காணல் ஒன்றில் பதிலளித்த ட்ரம்ப் சர்வதேச சட்டம் தனக்கு தேவையில்லை என்றும் எந்தவொரு சர்வதேச சட்டத்துக்கும் நியமங்களுக்கும் கட்டுப்பட்டுச் செயற்பட வேண்டியது அவசியம் என்று தான் உணரவில்லை என்றும் கூறினார். இரண்டாவது உலகப் போருக்கு பின்னர் அமெரிக்காவும் சேர்ந்து உருவாக்கிய உலக ஒழுங்கின் நியமங் கள் தனது நாட்டுக்கு அநாவசியமான சுமையாக இருக்கின்றன என்றும் அவர் கூறினார். உண்மையில் சுமை என்று அவர் கூறியது ஐக்கிய நாடுகள் சபையையே யாகும்.

இரண்டாவது உலகப் போருக்கு பின்னர் போரின் கொடுமைகளில் இருந்து எதிர்காலச் சந்ததிகளை பாதுகாத்து மனித உரிமைகள் மீதான நம்பிக்கையை மீள உறுதிப்படுத்தவும் உடன்படிக்கைகள் மற்றும் சர்வதேச சட்டங்களில் இருந்து எழுகின்ற கடப்பாடுகள் மீதான மதிப்பையும் நீதியையும் பேணக்கூடிய ஒழுங்கு ஒன்றை நிறுவுவதற்காகவே 1945 ஒக்டோபரில் ஐக்கிய நாடுகள் சபை உருவாக்கப்பட்டது.

காலனித்துவ ஆதிக்கத்தில் இருந்து விடுபட்டு சுதந்திமான அரசுகளாக வெளிக் கிளம்பிய அரசுகளுக்கு உதவுவதும் அதன் நோக்கங்களில் ஒன்றாகும். ஆனால் இப்போது ஐக் ிய நாடுகளின் அதிகாரம் போக்கிரித்தனமான தலைவர்களினாலும் அரசுகளினாலும் கடுமையான சோதனைக்கு உள்ளாக்கப்படுகிறது. ஏற்கெனவே தனது முதலாவது பதவிக் காலத்தில் (2016 — 2020) ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை மற்றும் உலக சுகாதார நிறுவனம் போன்ற பல்வேறு சர்வதேச நிறுவனங்களை அவமதித்த ட்ரம்ப் 'அமெரிக்காவுக்கு அநாவசியமான ஒரு சுமை' என்று தான் கருதும் ஐக்கிய நாடுகளை பலவீனப்படுத்தும் நோக்கிலான செயற்பாடுகளில் வெளிப்படையாகவே இறங்கியிருக்கிறார்.

நாடுகளின் வளங்களைச் சுரண்டுவதற்காக தான் மேற்கொள்ளத் திட்டமிட்டிருக்கின்ற ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளுக்கு தடையாக எந்த இடையூறும் வந்து விடாதிருப்பதை உறுதி செய்வதற்காகவே ட்ரம்ப் ஐக்கிய நாடுகளை மலினப்படுத்தும் வியூகங்களை முன்னெடுக்கிறார் என்பதில் சந்தேகமில்லை.

டென்மார்க்கிற்கு சொந்தமான சுயாட்சிப் பிராந்தியமான கிறீன்லாந்து தீவை அமெரிக்காவுடன் இணைப்பதற்கான அவரது முயற்சிகள் காரணமாக ஐரோப்பிய ஒன்றிய நாடுகளுடன் ஏற்பட்ட கடுமையான முரண்பாடுகளுக்கு மத்தியில் உலக பொருளாதார அமைப்பின் வருடாந்த உச்சிமகாநாட்டில் பங்கேற்பதற்காக சுவிட்சர்லாந்தின் டாவோஸ் நகருக்கு சென்ற ட்ரம்ப் அங்கு 'சமாதான சபையை' (Board of Peace) கடந்த வியாழக்கிழமை (22) அங்குரார்ப்பணம் செய்து அதன் சாசனத்தையும் வெளியிட்டார்.

மத்திய கிழக்கில் காசா போரை முடிவுக்கு கொண்டு வந்து அந்த பள்ளத் தாக்கை மீளக் கட்டியெழுப்புவதற்கெனக் கூறிக் கொண்டு தனது திட்டத்தை கடந்த செப்டெம்பரில் அறிவித்த வேளையில் சமாதான சபையை அமைக்கும் தனது யோசனையை முதன் முதலாக முன் வைத்த அவர், பிறகு அந்த சபையின் பணி காசாவுக்கு அப்பால் உலகின் ஏனைய மோதல்களுக்கும் முடிவைக் காணும் நோக்கத்துக்காக விரிவுபடுத்தப்படும் என்றும் குறிப்பிட்டார். தனது சமாதான சபையில் இணைந்து கொள்ளுமாறு உலக நாடுகளின் தலைவர்களுக்கு அமெரிக்க ஜனாதிபதி அழைப்பு விடுத்த அதே வேளை, அவரின் திட்டம் ஐக்கிய நாடுகளின் பணிகளுக்கு பாதகமாக அமையும் என்று இராஜதந்திரிகள் சமூகம் எச்சரிக்கை செய்தது. டாவோஸ் நகரில் சமாதான சபையின் சாசனத்தை வெளியிட்டு வைத்து உரையாற்றிய ட்றம்ப், ஐக்கிய நாடுகளை மலினப்படுத்தும் தனது நோக்கத்தை மறைக்கவில்லை. அங்குரார்பணக் கூட்டத்தில் அமெரிக்காவின் முக்கியமான பல நேசநாடுகள் குறிப்பாக ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் பங்குபற்றுவதை தவிர்த்த போதிலும், அவர், ஒவ்வொரு நாடும் சமாதான சபையில் அங்கம் வகிக்க விரும்பு கின்றன என்றும் அது நாளடைவில் ஐக்கிய நாடுகளுக்கு போட்டியான அமைப்பாக மாறமுடியும் என்றும் கூறினார். இது அமெரிக்காவுக்கு அல்ல, உலகத்துக்கே உரித்தான அமைப்பு. காசாவில் நாம் வெற்றி பெற்றால் ஏனைய விவகாரங்களுக்கும் இதை விரிவுபடுத்த முடியும் என்று நான் நினைக்கிறேன்.

இதுவரையில் 59 நாடுகள் சாசனத்தை ஏற்றுக் கொண்டு சமாதான சபையில் இணைந்திருப்பதாக ட்ரம்ப் கூறியிருக்கின்ற போதிலும், அங்குரார்பண நிகழ்வில் 19 நாடுகளின் பிரதிநிதிகள் மாத்திரமே பங்கேற்றனர். இந்தியா, ரஷ்யா மற்றும் சீனா போன்ற நாடுகளின் தலைவர்களுக்கும் அவர் அழைப்பு விடுத்திருந்தார். அவரின் அழைப்பை ஏற்றுக்கொண்டு நிகழ்வில் கலந்து கொண்ட நாடுகளில் துருக்கி, சவுதி அரேபியா, இஸ்ரேல், பாகிஸ்தான், ஐக்கிய அரபு இராச்சியம், அசர்பைஜான், பரகுவே மற்றும் ஹங்கேரி ஆகிய நாடுகள் குறிப்பிடத்தக்கவை. நீங்கள் உலகில் மிகவும் பலம்பொருந்தியவர்கள் என்று அந்த நாடுகளின் பிரதிநிதிகள் மத்தியில் அமெரிக்க ஜனாதிபதி கூறினார்.

போருக்கு பின்னர் காசாவை மீளக் கட்டியெழுப்பும் பணிகளை கண்காணிப்பதற்காக ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு சபை 2025 நவம்பரில் நிறைவேற்றிய தீர்மானத்தின்(2803) மூலமாக சமாதான சபைக்கு அதிகாரமளித்தது. பதவிக்காலம் புதுப்பிக்கப்படாத பட்சத்தில் 2027 டிசம்பர் 31ஆம் திகதி வரை மாத்திரமே சமாதான சபை செயற்பட முடியும் என்று தெளிவான காலவரையறையை விதித்திருக்கும் அந்த தீர்மானம், சபையின் செயற்பாடுகள் குறித்து ஆறு மாதங்களுக்கு ஒரு தடவை பாதுகாப்பு சபைக்கு அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும் என்றும் கேட்டிருக்கிறது. சுயமாகவே பதவிக் காலத்தை நீடித்து சமாதான சபை தவறான ஒரு முன்மாதிரியாக அமைந்து விடாதிருப்பதை உறுதி செய்வதற்காகவே இந்த கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டன. ஆனால், அந்த சபை நிரந்தரமான அமைப்பு என்று ட்ரம்ப் கூறுகிறார். மோதல்களினால் பாதிக்கப்படுகின்ற அல்லது அச்சுறுத்தப்படுகின்ற உலகின் பாகங்களில் உறுதிப்பாட்டை மேம்படுத்துவதையும் சட்டபூர்வமான ஆட்சி முறையை நிலை நிறுத்துவதையும் நிலைபேறான சமாதானத்தை ஏற்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்ட ஒரு 'சர்வதேச அமைப்பு என்று சமாதான சபையை அதன் சாசனம் வர்ணிக்கிறது.


சபையில் நிரந்தர உறுப்புரிமையைப் பெறுவதற்கு நாடுகள் 100 கோடி அமெரிக்க டொலர்களை கட்டணமாகச் செலுத்த வேண்டும் என்ற அறிவிப்பு உலக நாடுகளின் தலைவர்களையும் இராஜதந்திர சமூகத்தையும் அதிர்ச்சியடைய வைத்திருக்கிறது. கட்டணம் அறவிடுவது பற்றி பாதுகாப்பு சபையின் தீர்மானத்தில் எதுவும் குறிப்பிடப்படவில்லை. அமெரிக்காவின் மூலமுதல் திட்டத்தை ஐக்கிய நாடுகள் ஆதரித்த போதிலும், சமாதான சபையின் தற்போதைய கட்டமைப்பும் ஆணையும் அமெரிக்காவினால் தன்னிச்சையாக மாற்றம் செய்யப்பட்டிருக்கிறது என்பது வெளிப்படையானது. சாசனத்தில் காசாவைப் பற்றி எதுவும் குறிப்பிடப்படவில்லை என்று அதன் உள்ளடக்கங்களை அந்தரங்கமாக அறிந்து கொண்ட முக்கியமான சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டிரு க்கின்றன.

சமாதான சபையின் தலைவராக ட்ரம்ப் தன்னை நியமித்திருக்கிறார். அதன் நிறைவேற்றுக்குழு அவரின் குடும்பத்தவர்களினாலும் முன்னாள் பிரிட்டிஷ் பிரதமர் ரொனி பிளயர் போன்ற நண்பர்களினாலும் நிரப்பப்பட்டிருக்கிறது. சர்வதேச இராஜதந்திர செயற்பாடுகளுக்கான பிரதான சர்வதேச நிறுவனமாக ஐக்கிய நாடுகளுக்கு இருக்கும் அந்தஸ்தை சூழ்ச்சித்தனமாக அபகரிக்கும் நோக்குடனான வாசகங்கள் சமாதான சபையின சாசனத்தில் காணப்படுகின்றன.


இந்தச் சபை பாலஸ்தீன நிபுணர்களை நியமிக்கும் என்ற போதிலும், பாலஸ்தீன தலைவர்கள் உள்ளடக்கப்படாமல் இருப்பது பாலஸ்தீனத்தை அங்கீகரித்த நாடுகளை திட்டமிட்டு அவமதிக்கும் ஒரு செயலாகும். பாலஸ்தீனர்களை இனப்படுகொலை செய்ததாக ஐக்கிய நாடுகளின் அமைப்புக்களினால் குற்றஞ் சாட்டப்படுகின்ற இஸ்ரேலிய பிரதமர் பெஞ்சமின் நெதான்யாகு சமாதான சபையில் உள்ளடக்கப்பட்டிருக்கின்ற அதே வேளை, பாலஸ்தீன ஜனாதிபதி முஹம்மட் அப்பாஸ் புறக்கணிக்கப்பட்டிருக்கிறார். இதன் விளைவாக, பாலஸ்தீனத்தின் எதிர்காலம் குறித்து ட்ரம்ப் எடுக்கும் அடாத்தானதும் நியாயப்பாடு இல்லாததுமான தீர்மான ங்களுக்கு உறுப்பு நாடுகள் இணக்கத்தை தெரிவிக்கக்கூடிய ஆபத்து இருக்கிறது.

இது இவ்வாறிருக்க, சமாதான சபையின் இலச்சினையும் கூட, முழுமையாக ட்ரம்புக்கு விருப்பமான தங்கத்தின் நிறத்தில் வடிவமைக்கப் பட்டிருப்பதையும் அமெரிக்க வரை. படத்தை கொண்டிருப்பதையும் தவிர, மற்றும் படி தோற்றத்தில் ஐக்கிய நாடு களின் இலச்சினையை ஒத்ததாகவே இருக்கிறது. ஒட்டு மொத்தத்தில் காசாவை மீளக்கட்டியெழுப்புவது என்ற போர்வையில் அமைக்கப்பட்டிருக்கும் சமாதான சபை சர்வதேச சட்டங்களை மீறுகின்ற ஒரு நபரின் தன்னகம்பாவத்துக்கு சேவைசெய்வதற்கான ஒரு சர்வதேச அமைப்பாகவே அமையப் போகிறது.

# இவ்வாரம் உங்களுக்கு எப்படி?




மேடராசி அன்பர்களே! காரியங்களில் தாமதம் உண்டாகும். உடற்சோர்வு மன சோர்வு வரலாம். மிகவும் வேண்டிய வரை பிரிய நேரிடும். கண்மூடித்தனமாக எதையும் செய்யாமல் யோசித்து செய்வது நல்லது. தொழில் வியாபாரம் தொடர்பான அலைச்சல் அதிகரிக்கும். லாபம் அதிகமாகும். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு வேலை பளு அதிகரிக்கும். தாய், தந்தையின் உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை.




ரிஷபராசி அன்பர்களே! வீண் பகை உண்டாகலாம். நண்பர்களிடம் இருந்து பிரிய வேண்டி இருக்கும். கவுரவ பங்கம் ஏற்படாமல் கவனமாக செயல்படுவது நல்லது. தொழில் வியாபாரத்தில் தேவையற்ற இடர்பாடுகள் அகலும். பார்ட்னர்களை அனுசரித்து செல்வது நல்லது. கடன் கொடுக்கும் போதும் வாங்கும் போதும் கவனம் தேவை. உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு குறிக்கோளற்ற வீண் அலைச்சல், இருக்கும்





மிதுனராசி அன்பர்களே! அதி முக்கிய காரியங்கள் சுபமாக நடக்கும். மனோதிடம் அதிகரிக்கும். பயன் தரும் காரியங்களில் ஈடுபடுவீர்கள். செல்வம் சேரும். வாகனம் வாங்க எடுத்த முயற்சி கைகூடும். பயணங்கள் மூலம் ஆதாயம் கிடைக்கும். வீடு மனை சார்ந்த வழக்குகளில் ஆதாயம் கிடைக்கும். தொழில் வியாபாரத்தில் இருந்த சிக்கல்கள் நீங்கி முன்னேற்றம் உண்டாகும். லாபம் அதிகரிக்கும். பழைய பாக்கிகள் வசூலாகும்.





கடகராசி அன்பர்களே! தன்னம்பிக்கை அதிகரிக்கும். அறிவுத்திறன் அதிகரிக்கும். பெயரும், புகழும் கூடும். தொழில் வியாபாரம் வளர்ச்சி பெறும். இது வரை இருந்த தொய்வு நீங்கும். லாபம் அதிகரிக்கும். இனிமையான பேச்சின் மூலம் வாடிக்கையாளர்களை தக்க வைத்துக் கொள்வீர்கள். உத்யோகத்தில் இருப்பவர்களுக்கு புதிய பதவி தேடிவரும். வேலை தேடுபவர்களுக்கு வேலை கிடைக்கும். பணி வெளியூர் செல்ல வேண்டி இருக்கலாம்





சிம்மராசி அன்பர்களே! பல வகையிலும் நற்பலன்கள் தேடி வரும். தெய்வபக்தி அதிகரிக்கும். பயணங்கள் மகிழ்ச்சி தரும். மனதில் சுய நம்பிக்கை அதிகரிக்கும். வாக்கு கொடுக்கும் முன் பார்த்து கொடுக்கவும். தொழில் வியாபாரத்தில் எதிர்பாராமல் ஏற்பட்ட சிக்கல்கள் தீரும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் கூடுதல் பணி சுமையை ஏற்க வேண்டி இருக்கும். பயண செலவு உண்டாகலாம்.




கன்னிராசி அன்பர்களே! எடுத்த முயற்சிகளில் சாதகமான பலன் கிடைக்கும். உடல் ஆரோக்கியம் உண்டாகும். எதிர்பாலினத்தாரால் நன்மை உண்டாகும். திட்டமிடாத செயல்களால் வீண் செலவு உண்டாகும். வீட்டை விட்டு வெளியில் தங்க நேரிடும். தொழில் வியாபாரம் தொடர்பான முக்கிய முடிவுகள் எடுப்பதில் தடுமாற்றம் உண்டாகும். லாபம் அதிகரிக்கும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் நீண்ட நேரம் பணியாற்ற வேண்டி இருக்கும்





துலாம்ராசி அன்பர்களே! வீண் வாக்குவாதங்கள் அகலும். எந்த காரியத்தையும் சிறிது முயற்சி செய்தால் வெற்றி பெறலாம். வாகன லாபம் ஏற்படும். எதிர்பார்த்த பணம் வந்து சேரும். தொழில் வியாபாரத்தில் இருந்த மந்த நிலை மாறி வேகம் பிடிக்கும். தேங்கி இருந்த சரக்குகள் விற்பனையாகும். லாபம் அதிகரிக்கும். உத்யோகத்தில் இருப்பவர்கள் சிறப்பான பலன் கிடைக்க பெறுவர். புதிய பொறுப்புகள் சேரும். வேலை தேடியவர்களுக்கு வேலை கிடைக்கும்





விருச்சிகராசி அன்பர்களே! நீண்ட நாட்களாக இருந்து வந்த காரிய தடைகள் நீங்கும். மனதில் இருந்த குழப்பம் ஏற்பட்டு நீங்கும். வீண் பிரச்சனைகள் நீங்கும். வெளிநாட்டு பயணங்கள் கைகூடும். தொழில் வியாபார சிக்கல்கள் நீங்கி நன்கு நடைபெறும். பங்குதாரர்களுடன் இருந்து வந்த சிக்கல்கள் நீங்கும். உத்யோகத்தில் இருப்பவர்களுக்கு பதவி உயர்வு கிடைக்கும். சிலருக்கு புதிய பதவி கூடுதல் பொறுப்புகள் கிடைக்கலாம்.








தனுசுராசி அன்பர்களே! எல்லா வகையிலும் நன்மை உண்டாகும். மற்றவர்களுக்கு உதவிகள் செய்து மதிப்பு கிடைக்க பெறுவீர்கள். குறிக்கோளற்ற பயணங்கள் உண்டாகும். விழிப்புடன் இருப்பது நல்லது. சுப செலவுகள் உண்டாகும். தொழில் வியாபாரத்தில் போட்டிகளை சந்திக்க வேண்டி இருக்கும். பார்ட்னர்களுடன் சுமூகமாக செல்வது நல்லது. உத்தியோகத்தில் இருப்பவர்கள் கடினமான பணிகளை செய்யவேண்டி இருக்கும்..




மகரராசி அன்பர்களே! துணிச்சலான சில முடிவுகளை எடுப்பதன் மூலம் நன்மைகளை தரும் காலகட்டமாக அமையும். மனதில் மகிழ்ச்சியான எண்ணங்கள் வரும். கோபத்தை கட்டுப்படுத்துவதன் மூலம் நட்பு, உறவினர்களிடம் சுமூகமான நிலை நீடிக்கும். வாகனங்கள் வாங்குவதில் இருந்த தடை நீங்கும். வழக்குகளில் சுமூக முடிவுகள் வந்து சேரும். தொழிலில் இருந்த குழப்பம் நீங்கி தைரியம் உண்டாகும்.




கும்பராசி அன்பர்களே! திடீர் மனக்கவலை உண்டாகும். எதிர்பாராத செலவு ஏற்படும். முயற்சிகளில் தடை ஏற்படும். உஷ்ண சம்பந்தமான நோய் உண்டாகலாம். தொழில் வியாபாரத்தில் இருப்பவர்கள் போட்டியை சந்திக்க வேண்டி இருக்கும். வாடிக்கையாளர்களிடம் கடுமையான பேச்சை தவிர்ப்பது நல்லது. உத்யோகத்தில் இருப்பவர்கள் கவனமாக பணிகளை மேற்கொள்வது நல்லது.




மீனராசி அன்பர்களே! எதிர்ப்புகள் விலகும். எல்லா நன்மைகளும் உண்டாகும். பயணம் மூலம் நன்மை கிடைக்கும். செய்யும் காரியங்களால் பெருமை ஏற்படும். புத்திசாதூரியம் கூடும். வழக்குகளில் இருந்து வந்த தேக்க நிலை மாறும். தொழில் வியா பாரத்தில் முன்னேற்றமான நிலை காணப் படும். வியாபார நிமித்தமாக வெளியூர் பயணங்கள் செல்ல வேண்டி இருக்கும். உத்யோகத்தில் இருப்பவர்கள் திறமையான பேச்சால் வெற்றி பெறுவர்.

வெள்ளிக்கிழமைகளில்
உங்கள் அபிமான
ஈழநாடு பத்திரிகையை
eelanadu.ca
மின்னிதழ்
மூலமாகவும் வாசிக்கலாம்.

# யார் முருகன்? யார் சூரன்?

(15ம் பக்கத் தொடர்ச்சி) என்று அந்தக் கட்சி உறுப்பினர்கள் நம்பி அந்தக் கட்சிக்குள் ஒட்டிக் கொண்டிருப்பது தான். நீண்ட பாரம்பரியத்தைக் கொண்ட, வடக்குக் கிழக்காக கீழ்மட்ட வலையமைப்பை கொண்ட ஒரு கட்சி அது. வெல்லக்கூடிய குதிரை என்பதால் அநேகர் கட்சிக்குள் ஒட்டிக் கொண்டிருக்கிறார்கள்.

கடந்த 75 ஆண்டுகளிலும் அந்தக் கட்சியில் வாக்காளர்களைப் பிரதிபலிக்கும் தலைவர்களும் கொழும்பை அனுசரித்துப் போகும் தலைவர்களும் இருந்ததுண்டு. இந்த இரண்டு பண்புகளினதும் கலப்புத்தான் தமிழரசுக் கட்சி. இந்த இரண்டு போக்குகளும் ஒன்று மற்றதை அனுசரித்துப் போனமை தான் கட்சியின் பலம். ஆனால் இப்பொழுது இந்த இரண்டு போக்குகளும் முரண்படும் ஒரு நிலை தோன்றியிருக்கிறது. இது கட்சியை எங்கே கொண்டு போய்விடும்?

தமிழரசுக் கட்சி சிதையுமாக இருந்தால் அந்த வெற்றிடத்தை நிரப்ப தமிழ்த் தேசியப் பேரவையால் முடியுமா? அது இப்பொழுதுவரை ஒரு பிரதான நீரோட்டக் கட்சிக்குரிய பண்புகளோடு காணப்படவில்லை. மாறாக மாற்று நீரோட்டக் கட்சியாகத் தான் காணப்படுகிறது.

இவ்வாறு தமிழ் தேசிய பரப்பில் கட்சிகளுக்குள்ளும் கட்சிகளுக்கு இடையிலும் ஒருவர் மற்றவரை வில்லன் ஆக்கும் மோதல்களால், தமிழ்த் தேசியப் பரப்பில் யாருமே கதாநாயகராக எழ முடியவில்லை.அந்த வெற்றிடத்தில் அரச பலத்தோடு, அரச வளங்களைப் பிரயோகித்து அனுர நாயகனாக இறக்கப்படுகிறார். கடந்த வாரம் முருகனாகப் பதவி உயர்த்தப்பட்டிருக்கிறார். அதாவது தமிழர்கள் ஒருவர் மற்றவரை சூரன்கள் ஆக்கிக் கொண்டிருக்க முருகன்கள் வெளியில் இருந்து குதிக்கிறார்களா? விக்னேஸ்வரனுக்கும் வாகீசனுக்கும் கையில் வேலைக் கொடுத்த ஒரு சமூகம், விரைவில் அனுரவிக்கும் ஒரு வேலைக் கொடுத்து விடுமோ?

# தமிழக தேர்தல் களம்:- சில கருத்துக்கள்!

(23ம் பக்கத் தொடர்ச்சி) கறைகள் தாராளமாகவும் ஏராளமாகவும் உண்டு. அவர்களுடைய ஒரே முதலீடு, மோடி தான். மோடியும் அமித்ஸாவும் எல்லாவற்றையும் பார்த்துக் கொள்வார்கள் என்று கைகளைக் கட்டிக் கொண்டிருக்கின்றனர் அ.தி.மு.கவினர். இப்படியொரு நிலை அ.தி.மு.கவுக்கு வரும் என்று தாம் நினைக்கவே இல்லை என்று அ.தி.மு.க வின் நெடுங்கால ஆதரவாளர் ஒருவர் கண்ணீர் விட்டார். எம்.ஜி.ஆர் இருந்திருந்தால் இப்படியெல்லாம் நடக்காது சார் என்று கைகளைப் பிடித்தார்.

தமிழ்நாடு வரலாற்று நெருக்கடிகளையும் சோதனைகள் பலவற்றையும் கண்டு வந்திருக்கிறது. அதனிடம் ஒரு அறிவார்ந்த நோக்கு நிலை எப்போதும் உண்டு. பெரியார், அண்ணாத்துரை, காமராஜர், கருணாநிதி எனப் பல ஆளுமைகளும் தலைவர்களும் உருவாக்கி வளர்த்தெடுத்த பாரம்பரியம் இது. இந்தத் தலைமுறை இதை எப்படிக் கையாளப் போகிறது, எப்படித் தொடரப்போகிறது என்பதைப் பார்க்க வேண்டும். தி.மு.ககூட்டணியின் அரசியல் வியூகம் எப்படி இருக்கப் போகிறது என்பதில் தான் எல்லாமே தங்கியுள்ளது.

# (சு)தந்திரம் தட்டிக் கேட்க ஆளில்லா விட்டால்..

(18ம் பக்கத் தொடர்ச்சி-) தன்மையின்மை, அனுபவமின்மை என்பனவற்றால் இடம் பெறும் தவறுகள் அரச சொத்து வீண்விரயங்கள் காரணமாக அரசாங்கத்திற்கான ஆதரவு ஒன்றரை ஆண்டில் மிகப்பெரும் வீழ்ச்சியை சந்தித்துள்ளது.

இதனை பாதிக்கப்பட்ட தரப்புக்களின் அவர்களைப் பிரதிநிதித்துவம் செய்யும் அமைப்புக்களின் கருத்துக்களை கேளாது அவர்களோடு பேசாது ஒரு தலைப்பட்சமான முடிவுகளை எடுத்து அரசாங்கம் செயற்படுகிறது. இதனால் ஒரு திட்டத்தை அறிவிப்பதும் மீளப்பெறுவதும், பின் போடுவதும், இன்னொன்றை அறிவித்து திசைகாட்டுவதும், அதிகாரிகளை குற்றம்சாட்டுவதும், பதவிவிலக அழுத்தம் கொடுப்பதும் அரசாங்கத்தால் மேற்கொள்ளப்படுகிறது. ஜனநாயகத்திற்கு முரணாக பெரும்பான்மையை பயன்படுத்தும் போக்கு கணக்காய்வாளர் நாயக நியமன இழுபறியில் தொடங்கி, பாராளுமன்ற உதவி செயவாளர், சட்டமா அதிபர் வரை வந்து நிற்கிறது. கடந்த காலங்களில் வேலை நிறுத்தங்களுக்கு பின்னால் ஜே.வி.பி. ஒழிந்திருந்தது. ஜே.வி.பி ஆட்சியில் அவர்கள் தொழிலாளர் நலன் சார்ந்து செயற்படுவார்கள் வேலை நிறுத்தங்கள் இடம் பெறாது என்று நம்பிய மக்களுக்கு ஜே.வி.பி. நம்பிக்கை துரோகம் செய்துள்ளது.

(சு)தந்திர தின கொண்டாட்டத்திற்கு வெளிநாட்டு தலைவர்கள் அதிதியாக அழைக்கப்படவில்லை. ஆகக்குறைந்தது இந்தியா, சீனாவில் இருந்தும் இல்லை. இது மேற்குலகுடன் அரசியல் வியாபாரம் செய்வதற்கும், மறு பக்கத்தில் நாமல் ராஜபக்சவுக்கு இந்திய குடியரசு தினத்தில் வழங்கப்பட்ட முக்கியத்துவத்திற்கும் அநுர அரசாங்கம் வழங்கும் (சு) தந்திர நகர்வு. மற்றொரு காரணம் இன்றைய நிலையில் வெளிநாட்டு தலைமைகள் அழைக்கப்பட்டால் அநுர ஆட்சியின் ஜனநாயக மறுப்பும், இனப்புறக்கணிப்பும், மதவேறுபாட்டு செயற்பாடுகளும், சட்டம், நீதி, நிர்வாகத்தில் அரசியல் தலையீடுகளும் அம்பலமாகி விடும். இதனால் அரசாங்கம் தற்பாதுகாப்பு ஏற்பாடாக இதை செய்துள்ளது என்றே கொள்ளவேண்டும். அதில் ஒன்று தான் அத்தியாவசிய சேவைகள் பிரகடனப்பட்டியல்.

எப்படியிருப்பினும் அநுர அரசாங்கத்திற்கும் இந்தியா, சீனாவுக்குமான உறவு வெறுமனே பொருளாதார நலன்கள் சார்ந்த உத்தியோகபூர்வ அரசாங்கங்களுக்கு இடையிலானது. ஜே.வி.பி.யை இந்தியாவும், சீனாவும் முதலாவது கிளர்ச்சியில் இனம்கண்டு கொண்டவை. பண்டாரநாயக்கா, ராஜபக்ச குடும்பங்களுக்கும் இந்தியா, சீனாவுக்குமான உறவு ஜே.வி.பி.கிளர்ச்சி ஒடுக்கப்பட்ட காலத்தையும் விஞ்சிய நீண்டகால நட்புறவு. இந்த வேறுபாட்டை இலங்கையின் பூகோள அரசியல் எப்போதும் வெளிப்படுத்தும். சீன உல்லாசப் பிரயாணிகளான சாதாரண மக்கள் மகிந்த ராஜபக்சவை அதிகாரம் அற்ற நிலையிலும் வீடு தேடிச்சென்று சந்திக்கிறார்கள் என்றால், அரசாங்க, பிரதான எதிர்கட்சி அரசியல் பிரமுகர்களை தவிர்த்து நாமல் ராஜபக்ச இந்திய குடியரசு தினத்தில் பிரதமர் மோடியுடன் கை குலுக்குகிறார் என்றால் அதன் பின்னணியில் உள்ள அரசியல் செய்தி தான் (சு) தந்திரதினத்திற்கான இலங்கை மக்களுக்கான இந்தியாவினதும், சீனாவினதும் செய்தி.

# தமிழக தேர்தல் களம்:- சில கருத்துக்கள்!

(17ம் பக்கத் தொடர்ச்சி) எதற்காக இப்படியொரு தீர்மானத்துக்கு வந்தீர்கள்?‘ என்று கேட்டேன். விலைவாசி ஏறியிருக்கு. வருமானத்தில் உயர்வில்லை. எந்தப் பிரச்சினையும் தீர்ந்த மாதிரித் தெரியவில்லை. கிராமங்களில் வளர்ச்சியே இல்லை. நகரத்தில் சும்மா ஷோ காட்டுகிறார்கள். அவ்வளவு தான். கிராமங்கள் அப்படியே பாழடைந்து கிடக்கின்றன. எனவே ஒரு மாற்றம் வருவதைத் தான் நாங்கள் விரும்புகிறோம் என்கின்றனர்.

‘நீங்கள் விரும்புகிற மாற்றத்தை விஜய் தருவார், செய்வார் என்பதற்கு என்ன உத்தரவாதம்? அவருக்கு அதற்கான அனுபவமும் ஆற்றலும் உண்டா? வெறும் சினிமா கவர்ச்சி மட்டும் போதுமா? என்று சில கேள்விகளைப் போட்டேன்.

தமிழ் நாட்டில் சினிமாக்காரன்கள் தானே ஆட்சியை நடத்துகிறார்கள். கலைஞர், எம். ஜி. ஆர், ஜெயல்லிதா, விஜயகாந் எல்லோரும் சினிமாக்காரர்கள் தானே! இப்ப உதயநிதி எத்தகைய அனுபவங்களோடு, துணைமுதல்வராக இருக்கிறார்? அவர் சினிமாக்காரர் இல்லையா? உதயநிதியை விட விஜய் திறமையாளர் இல்லையா? உதயநிதியை விட விஜய்க்கு மக்கள் ஆதரவு உண்டா இல்லையா?‘ என்று என்னை மடக்க முயற்சிக்கிறார்கள்.

இன்னொரு சாரார் பா.ஜ.க வை விரும்புகிறார்கள். ஒரு தடவை மாற்றத்துக்கு இடமளித்துப் பார்ப்போமே. எப்போதும் ஒரேதரப்பு ஆட்சியிலிருந்தால் அது தப்பாகி விடும். மாற்றிப் பார்த்தால் தான் நன்மைகள் தீமைகள் என்ன என்று விளங்கும். சில ஊடகங்களும் சில ஆய்வாளர்களும் பயங்காட்டுகிறார்கள். அது உண்மையா இல்லையா என்பதை நாம் நேரில் அறிய வேண்டாமா? என்று கேட்கிறார்கள். அவர்களுக்கு, பா.ஜ.கவின் நோக்கத்தையும் அது பிற மாநிலங்களில் செய்து வரும் அத்து மீறல்களையும் ஆட்சித் தவறுகளையும் சொன்னேன்.

‘அதெல்லாம் முழுசா உண்மை கிடையாது. வதந்தி தான்‘ என்று நம்முடைய கருத்தை ஏற்க மறுக்கிறார்கள். ஒரு சிலர் மட்டும் நாம் தெளிவுட்டும் விடயங்களைப் பற்றிச் சிறிது சிந்தித்து, தம்முடைய முடிவை மாற்றிக் கொள்ளும் உளநிலையுடன் உள்ளனர். ஆனால், இதற்குக் கடுமையாக வேலை செய்ய வேண்டும் என்றேன் ஊடக நண்பர்களிடம். அப்படியென்றால், அ.தி.மு.க, சீமானைப் பற்றியெல்லாம் பேச்சே இல்லையா?‘ என்று கேட்கிறார்கள் நமது ஊடகர்கள்.

ஈழத் தமிழ் ஊடகர்களுக்கு சீமான் இன்னும் ஒரு கவர்ச்சி முகம் தான். அ.தி.மு.க, பா.ஜ.க விற்குள் கரைந்து விட்டது. சீமானை, அவருடைய வாக்குத்தளத்தை விஜய் எடுத்துக் கொள்கிறார். இது தான் அங்குள்ள நிலவரமாக உள்ளது. இதை நான் ஒரு வெளிப்பார்வையாளராகத் தான் அவதானித்தேன்‘ என்று முடித்துக்கொண்டேன்.

தேர்தல் நிலவரத்தை அறிவதற்கு தி.மு.க உட்பட ஒவ்வொருதரப்பும் தமிழகம் முழுவதிலும் சர்வே (மதிப்பீட்டுக் கணக்கெடுப்பை) நடத்துகின்றன. தி.மு.கவில் செல்வாக்கு மிக்க நபராக, முதல்வர் ஸ்டாலினின் மருமகன் சபரீஸ்வரன் இருக்கிறார். தி.மு.கவில் கட்சிக்குள்ளே செல்வாக்கும் அதிகாரமும் உள்ள நபர் சபரீஸ்வரன் தான். இலங்கையில் ராஜபக்ஸக்களின் தரப்பில் பஸில் ராஜபக்ஸ இருந்தாரோ அப்படி. பஸில் எம்.பியாகவும் அமைச்சராகவும் கட்சியின் பொறுப்பு மிக்க பதவியிலும் வெளிப்படையாகவும் செயற்பட்டார். சபரீஸ்வரன் அப்படியல்ல. அவர் நிழல் முகம். ஆனால், உள்ளே இருந்து எதையும் தீர்மானிக்கும் கப்டன் அவர் தான். தி.மு.க வின் சார்பாக மேற்கொள்ளப்படும் சர்வே நடவடிக்கை, சபரீஸ்வரன் வேதமூர்த்தியின் தலைமையில் தான் நடக்கிறது.

இதைப் போல வெவ்வேறு கட்சிகளும் சர்வேயை மேற்கொள்கின்றன. அதற்காகப் பெருந்தொகை நிதி செலவழிக்கப்படுகிறது. நிபுணத்துவ நிறுவனங்கள் பயன்படுத்தப்படுகின்றன. தேர்தல் என்பது எளிய ஒரு ஏற்பாடு. மக்களின் நம்பிக்கையின் அடிப்படையில் நடக்கும் ஒரு ஜனநாயக நடவடிக்கை என்ற காலம் போய் விட்டது. இப்பொழுது அது பல்வேறு உத்திகள், தந்திரங்கள், ஏமாற்றுக்கலை எனப் பலவகையான ஏற்பாடுகளுடன் தொடர்புபட்ட ஒன்றாகி விட்டது.

மக்களின் உணர்வை நாடி பிடித்து அறிவதில் இருக்கும் ஆர்வமும் பதட்டமும் தேர்தல் காலத்தில் மட்டும் என்றில்லாமல், மக்களுடைய வாழ்க்கையின் நிலைவரம் எப்படி உள்ளது, அதை மாற்றுவதற்கான பொறிமுறைகளின் நடவடிக்கைகளின் வளர்ச்சி எப்படி உள்ளது என்று தொடர்ந்து அறிந்து கொண்டிருப்பதும் அதற்கான தீர்வுகளை வைப்பதுமே உண்மையான சர்வேயாக இருக்க வேண்டும்.

ஒரு வெளியாளின் பார்வை என்று இதைப் பார்த்தாலும் அடிப்படையில் ஒரு உண்மை உண்டு. மக்கள் இயல்பாகவே மாற்றத்தை விரும்புகிறார்கள். அந்த உணர்வு அவர்களுடைய நிறைவின்மைகளினால் உருவாகிறது. அதிற் குறிப்பாகப் பொருளாதார நெருக்கடி முதன்மையான பாத்திரத்தை வகிக்கிறது. இதில் ஊழல் ஒரு தீர்க்கமான பாத்திரமாகும். ஊழலுக்கு எதிரான மக்களின் உணர்வுகளைக் கையாள்வதில்தான் எதிர்த்தரப்புகள் கவனம் செலுத்துகின்றன. ஊழலின் பருமன் எவ்வளவு என்பது இங்கே முக்கியமானதல்ல. அந்தச் சொல் ஒரு அழகிய, ஆழமான அரசியல் முதலீடாக உருமாற்றம் பெறுகிறது. இலங்கையின் அனுபவம் கூட அது தான். போரை முடித்து வைத்தவர்கள், போரிலே வெற்றியடைந்தவர்கள் என்ற கதைகளை எல்லாம் மக்கள் தூக்கி எறிந்து விட்டு, ஊழலுக்கு எதிராகவே மக்கள் ஒன்று திரண்டார்கள். அதனுடைய விளைவே எவராலுமே மதிப்பிட முடியாதிருந்த தேசிய மக்கள் சக்தி (NPP) யின் வெற்றியாகும்.

உலகெங்கும் ஊழலுக்கு எதிரான ஆட்சி மாற்றம் என்ற ஒரு தோற்றம் உருவாக்கப்பட்டுள்ளது. தமிழ்நாட்டுத் தேர்தல் களத்தில் விஜய் கையில் எடுத்திருப்பதும் இதையே. ஆனால், அதை சினிமாக் சாகஸமாகவே அவர் கையாள்கிறார். இயல்பான மக்கள் எழுச்சியாக இல்லாமல் செயற்கையாக உருவாக்கப்படும் அரசியல் கூடுகைகள் வீண் செலவீனத்திலேயே போய் முடிவதுண்டு. எதிர்க்கட்சிகளும் விஜயை ஒரு சினிமாச் சாகஸக்காரராகவே அடையாளப்படுத்த முயற்சிக்கின்றன. ஆனாலும் இதை ஆதரிப்பதற்கும் ஒரு குழு உண்டு. அதில் விஜய் ரசிகநிலையில் உள்ள எழுத்தாளர்கள் சிலரும் இருக்கிறார்கள்.

விஜயைப் போல ஊழல் விவகாரத்தை அ.தி.மு.கவோ, பா.ஜ.க வோ இதை எடுக்க முடியாது. அவற்றின் கைகளில் (22ம் பக்கம் பார்க்க)

Chapel Ridge
FUNERAL HOME
& CREMATION CENTRE

Serving the Tamil Community OF GREATER TORONTO

உங்கள் உறவொன்றை பிரிந்து தடுமாறும் வேளையில் இறுதி நிகழ்வுகள் பற்றிய கவலை உங்களுக்கு வேண்டாம். அனுபவத்துடன் கூடிய அன்பான சேவையை வழங்குகின்றோம்.

At Need Funeral Arrangements

We provide a full range of service to families who have experienced a loss of a loved one, including:

• Vistation
• Funeral & Memorial Service
• Reception
• Burial • Cremation



Vilosanan Sivatharman
416-993-0826

மார்க்கம், மற்றும் மிசிசாகா நகரங்களில் எமது சேவை



Christeen Seevaratnam
416-258-6759

இறுதிச் சடங்கை நடத்துவதற்கான செலவை முன்கூட்டியே திட்டமிடலாமா?

Pre-Arranging: A Wise Choice...

FINANCIAL BENEFITS
• Lock in the cost at today's prices
• Convenient time payments
• Insured against early death

EMOTIONAL BENEFITS
• Letting your family know your wishes
• Peace of mind to you & your family
• Relieve the added stress & burden

8911 Woodbine Ave, Markham , ON, L3R 5G1 • www.chapelridgefh.com • Email: info@chapelridgefh.com




# அநுரவின் ஆட்சியிலும் மனித உரிமைகள் சார் கடப்பாடுகளை நிறைவேற்றுவதில் முன்னேற்றம் இல்லை- கண்காணிப்கம் விசனம்

பொருளாதார ஸ்திரத்தன்மையை உறுதிப்படுத்துவதற்கும் பொதுச் சேவைகளைப் பெற்றுக் கொள்வதில் நிலவும் சமத்துவமின்மைக்குத் தீர்வு காண்பதற்கும் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க தலைமையிலான அரசாங்கத்தினால் குறிப்பிடத்தக்க சில முயற்சிகள் மேற் கொள்ளப்பட்ட போதிலும், மனித உரிமைகள்சார் கடப்பாடுகளை நடைமுறைப்படுத்துவதில் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலான முன்னேற்றமே எட்டப்பட்டுள்ளது என மனித உரிமைகள் கண்காணிப்பகம் சுட்டிக் காட்டியுள்ளது.

2025ஆம் ஆண்டு உலகளாவிய ரீதியில் ஒவ்வொரு நாடுகளினதும் மனித உரிமைகள் நிலைவரம் தொடர்பில் மனித உரிமைகள் கண்காணிப்பகத்தினால் வெளியிடப்பட்டுள்ள விரிவான அறிக்கையில் இலங்கை தொடர்பில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:

இலங்கை தொடர்பில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் அலுவலகத்தினால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் இலங்கையில் பதிவான தன்னிச்சையான தடுத்துவைப்புகள், பொலிஸ்காவலின் கீழான சித்திரவதைகள் மற்றும் உயிரிழப்புக்கள் என்பன பற்றிய விபரங்கள் உள்ளடக்கப்பட்டிருப்பதுடன், கடந்தகால மீறல்களுக்குக் காரணமாக அமைந்த கட்டமைப்பு ரீதியான நிலைவரங்கள் இன்னமும் தொடர்வதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

கடந்தகால மீறல்களால் பாதிக்கப்பட்டவர்கள், அவர்களது குடும்பத்தினர் மற்றும் மனித உரிமைகள் செயற்பாட்டாளர்கள் உள்ளிட்டோர் பாதுகாப்புத் தரப்பினரின் தொடர் அச்சுறுத்தல்களுக்கு முகங்கொடுத்துவருவதுடன், குறிப்பாக வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் பெரும்பாலும் அரச அதிகாரிகளினாலேயே காணி உரிமைகள் மற்றும் மத உரிமைகள் என்பன மீறப்படுகின்றன.

அதேவேளை 1983 - 2009 ஆம் ஆண்டு வரை நடைபெற்ற ஆயுதப் போராட்டத்தின் போது நிகழ்த்தப்பட்ட மிகமோசமான போர்க்குற்றங்கள் தொடர்பில் பொறுப்புக்கூறலை உறுதி செய்வதற்கு அரசாங்கங்கள் தவறியிருக்கின்றன. தேசிய நல்லிணக்கம் சார்ந்த வாக்குறுதிகளின் இடையே, தமிழ் மற்றும் முஸ்லிம் சமூகங்கள் மத்தியில் நம்பிக்கையைக் கட்டியெழுப்புவதற்கு அநுரகுமார திசாநாயக்க அரசாங்கம் மிகச் சொற்ப விடயங்களையே செய்திருக்கிறது. அதேபோன்று சுயாதீன வழக்குத் தொடுநர் அலுவலகத்தை ஸ்தாபித்தல், பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்குதல் மற்றும் நிகழ்நிலைக்காப்புச் சட்டத்தில் திருத்தங்களை மேற்கொள்ளல் என்பன உள்ளடங்கலாக சட்ட மறுசீரமைப்புக்கள் தொடர்பில் அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட வாக்குறுதிகளும் இன்னமும் நிறைவேற்றப்படவில்லை. அதுமாத்திரமன்றி இலங்கையின் குற்றவியல் தண்டனைச் சட்டக் கோவையின் பிரகாரம் ஓரினச்சேர்க்கை மற்றும் அது சார்ந்த நடவடிக்கைகள் குற்றமாக்கப்பட்டுள்ளன.

உலக உணவுத்திட்டத்தின் தரவுகளின் பிரகாரம் மூன்றில் ஒன்று பங்கு சிறுவர்கள் மந்தபோசணையினால் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். பெரும் எண்ணிக்கையான குடும்பங்கள் கல்வி மற்றும் சுகாதாரம் உள்ளிட்ட தமது உரிமைகளை அனுபவிப்பதற்கு அவசியமான பொருட்கள், சேவைகளைப் பெற்றுக் கொள்வதில் நெருக்கடிகளுக்கு முகங் கொடுத்திருக்கின்றன. அநுரகுமார திசாநாயக்க அரசாங்கத்தில் சமூகப்பாதுகாப்பு செலவினங்கள் மிகக்குறைந்த மட்டத்திலேயே பேணப்படுவதனால், பல்வேறு உரிமைகள் பாதிக்கப்பட்டுள்ளன. சர்வதேச நாணய நிதியத்தின் செயற்திட்டத்துக்கு அமைவாக அரசாங்கத்தினால் நடைமுறைப்படுத்தப்படும் கொள்கைகள், ஏற்கனவே நலிவுற்ற நிலையில் இருக்கும் மக்கள் மீதான நிதியியல் மீட்சி சார்ந்த அழுத்தங்களை மேலும் தீவிரப்படுத்தியுள்ளது.

இருப்பினும் ஊழலை முறியடிப்பதில் ஓரளவு முன்னேற்றம் அடையப்பட்டிருக்கிறது. குறிப்பாக அரச நிதியின் முறைகேடான பயன்பாட்டுக்காக முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க கைது செய்யப்பட்டு, பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டார்.

அடுத்ததாக இலங்கை அரசாங்கத்துக்கும் தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்துக்கும் இடையில் இடம்பெற்ற 26 வருடகால யுத்தத்தில் சுமார் 100,000 க்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டனர். இக்காலப்பகுதியில் அரச படையினர் சித்திரவதைகள், சட்ட விரோதப் படுகொலைகள், பாலியல் வன்புணர்வு, பாலியல் வன்முறைகள், வலிந்து காணாமலாக்கல் மற்றும் பொதுமக்கள் மீதான ஒடுக்குமுறைத் தாக்குதல்கள் உள்ளிட்ட மிகமோசமான மீறல்களில் ஈடுபட்டனர். அதேபோன்று தற்கொலைக் குண்டுத் தாக்குதல், பொதுமக்களுக்கு எதிரான தாக்குதல்கள் மற்றும் சிறுவர் போராளிகள் உள்ளிட்ட மீறல்களில் விடுதலைப் புலிகள் இயக்கமும் ஈடுபட்டது.

இம்மீறல்கள் தொடர்பில் நீதியை நிலைநாட்டுவதற்கான நம்பத்தகுந்த உள்ளகப்பொறிமுறைகள் இன்மை மற்றும் பாதிக்கப்பட்ட சில சமூகங்களுக்கு எதிராகத் தற்போதும் தொடரும் ஒடுக்கு முறைகள் என்பவற்றின் காரணமாக இலங்கை தொடர்பான பொறுப்புக்கூறல் செயற்திட்டத்தை மேலும் இரு வருடங்களுக்குத் தொடர்வதற்கு ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்தை செயற்பாட்டாளர்கள் பலரும் வரவேற்றிருந்தனர். இந்தக் குற்றங்களை புதியதொரு உள்ளகப்பொறிமுறையின் ஊடாக அணுகுவதாக அரசாங்கம் வாக்குறுதி அளித்திருந்த போதிலும், அதுபற்றிய விபரங்கள் எதனையும் அறிவிக்கவில்லை.

அதேவேளை மறுபுறம் பாதிக்கப்பட்ட தரப்பினர் மற்றும் அவர்களது குடும்பத்தினர் உள்ளகப் பொறிமுறைகள் தொடர்பில் தமது நம்பிக்கையீனத்தை அல்லது மட்டுப்படுத்தப்பட்ட அளவிலான நம்பிக்கையை வெளிப்படுத்தியுள்ளனர். மனித உரிமை மீறல்கள் மற்றும் போர்க்குற்றங்கள் தொடர்பில் ஆராய்வதற்காக முன்னைய அரசாங்கங்களினால் குறைந்தபட்சம் சுமார் 10 ஆணைக்குழுக்கள் நிறுவப்பட்ட போதிலும், அவை பொறுப்புக்கூறல் உறுதிப்படுத்தப்படுவதற்கோ அல்லது வலிந்து காணாமலாக்கப்பட்டோர் தொடர்பான உண்மைகள் வெளிப்படுத்தப்படுவதற்கோ வழி வகுக்கவில்லை.

அது மாத்திரமன்றி 2019 ஆம் ஆண்டு இடம் பெற்ற உயிர்த்த ஞாயிறு தினப் பயங்கரவாதத்தாக்குதல்களுக்கு அரசு உடந்தையாக செயற்பட்டதாக சில தரப்பினரால் முன்வைக்கப்பட்ட கருத்துக்களை ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க ஆதரித்திருப்பினும் அத்தாக்குதல்கள் தொடர்பில் அரசாங்கம் இன்னமும் நம்பத்தகுந்த விசாரணைகளை முன்னெடுக்கவில்லை. தண்டனைகளிலிருந்து விடுபடும் போக்கு வலுவடைந்தமையானது மீறல்கள் தொடர்வதற்கு இடமளித்தது.

அத்தோடு மனிதப்புதைகுழிகள் தொடர்பில் செயற்திறன்மிக்க விசாரணைகளை முன்னெடுப்பதற்கு அவசியமான போதிய தொழில்நுட்ப வசதிகள் அரசாங்கத்திடம் இல்லை.

அதேவேளை கடந்த காலங்களில் நிலவிய அரசியல் தன்முனைப்பின்மையானது இது பற்றிய விசாரணைகள் மழுங்கடிக்கப்படுவதற்குக் காரணமாக அமைந்தது. அதன் அர்த்தம் எந்தவொரு எலும்புக்கூடும் யாருடையவை எனக் கண்டறியப்படவோ அல்லது ஏனைய ஆதாரங்கள் முறையாகப் பேணப்படவோ இல்லை.

மேலும் நீண்டகால யுத்தத்தினால் வெகுவாகப் பாதிக்கப்பட்ட வடக்கு, கிழக்கு மாகாணங்களில் நீதிக்காகப் போராடும் பாதிக்கப்பட்டோரின் குடும்பத்தினர் மற்றும் சிவில் சமூக செயற்பாட்டாளர்களை பொலிஸார் மற்றும் புலனாய்வுப்பிரிவினர் தொடர்ச்சியாகக் கண்காணித்தும், அவர்களுக்கு எதிராக ஒடுக்குமுறைகளைப் பிரயோகித்தும் வருகின்றனர்.

அதேவேளை பயங்கரவாதத்தடைச் சட்டத்தை முற்றாக நீக்குவதாக ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் வாக்குறுதி அளிக்கப்பட்டிருந்த போதிலும், கடந்த காலங்களில் அச்சட்டத்தின் பிரயோகம் வெகுவாக அதிகரித்துள்ளது. குறிப்பாக 2024 ஆம் ஆண்டு 38 வழக்குகளிலும், 2025 ஆம் ஆண்டின் முதல் ஐந்து மாதங்களில் மாத்திரம் 49 வழக்குகளிலும் பொலிஸாரால் பயங்கரவாதத் தடைச் சட்டம் பிரயோகிக்கப்பட்டிருக்கிறது என அவ்வறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

